****

குப்புசாமி செட்டியார்

காவேரிப்பட்டணம்,

வைத்திய அட்டவணை

கட்டு - 3.

****

278

****

குப்புசாமி செட்டியார்,

காவேரிப்பட்டணம்.

வைத்திய அட்டவணை - 3.

****

Total Typed page No 45

Verified
Sunderananda
20/4/63

30.11.62.

278

வைத்திய அட்டவணை. 3.

பாக்கு வெத்திலையில் போட சுக விரோசனம்:- எத்தியான நேர்வாளம் விரை. போக்கின கடுக்காய் சரி கட்டி சதிரக் கள்ளிப் பால் வார்த்து அரைத்து மிளகு பிரமாணம் நிழலுலர்த்தி தம்பலத்தில் போட ஆறின தண்ணீர் குடிச்சால் பேதியாம். சுடுநீர் குடிச்சால் பேதி நிற்கும்.

வெள்ளைக்கு:- கோஷ்டம் விராகனெடை.உ, அதிமதுரம் விராகனெடை.உ, வெள்ளைதுங்கிலியம் விராகனெடை.உ, மயில்துத்தம் விராகனெடை.உ, சாபத்திரி விராகனெடை.உ, லவங்கம் விராகனெடை.உ, விரையெடுத்த காளிக்காய்.உ, சாதிக்காய் விராகனெடை.உ, சித்திர மூல வேர் பட்டை விராகனெடை.உ, இதுவெல்லாம் கொண்டு வந்து வஸ்திர காயம் செய்து பேரெள்ளு எண்ணெய் ருத்திரி மாளம்.க, மாவிசத்தின் சரக்கை எண்ணெயில் போட்டு மூன்று நாளைக்கு சூரிய புடம் வைத்து எடுத்து வைத்துக் கொண்டு பறங்கி சக்கை பலம்.க, கருஞ்சீரகம் பலம்.க, லவங்கம் பலம்.க, கசகசா பலம்.க, கோஷ்டம் பலம்.க, சோம்பு பலம்.க, வெரிதி பலம்.ர, சாதிக்காய் பலம்.க, மாப்பிள்ளைக் காய் பலம்.உ, விரை வாங்கின கடுக்காய் பலம்.வ, திப்பிலி பலம்.வ, சாதிபத்திரி பலம்.வ, தாளிச பத்திரி பலம்.வ, சித்திலிக் கிழங்கு பலம்.வ, கஸ்தூரி மஞ்சள் பலம்.க இதுவெல்லாம் கொண்டு வந்து இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு முள்ளு முருக்கம் பட்டை சூரணம் பண்ணிக் கொண்டு புரசம் பட்டை சூரணம் பண்ணிக் கொண்டு வடித்த முத்து விளக்கெண்ணெய் ருப்பி மாளம்.உ, லிங்கம் ஒரு பிடி, நெருஞ்சி கொழுந்து ஒரு பிடி. மணத்தக்காளி இலை ஒரு பிடி, வெங்காயம் மாளம் .வ, இதுவெல்லாம் இடித்து எண்ணெயில் போட்டு பொன்னிறமாக காய்ச்சி கொடுக்கவும். இச்சா பத்தியம். கை கண்டது.

ஏலம் பலம்.க, சுக்கு பலம்.க, கண்டு பறங்கி பலம்.க, கோரைக் கிழங்கு பலம்.க, கஸ்தூரி மஞ்சள் பலம்.க, தம்மட்டிக் காய் நீக்கு கடுக்காய் பலம்.ரு, தம்மட்டிக்காய் மேல் புறணி போக்கி உள் சதையை மூடாவில் போட்டு மூன்று தரம் காளிச்சு இறுத்துக் கொண்டு வெள்ளை மாளம் விட்டு சரக்கு எல்லாவை நான் பண்ணி லைதரயும் தம்மட்டிக்காய் ரசமும் ? மெழுகு பதத்தில் எடு கட்டிச் செப்பிலாத்திக் கொண்டு சரக்கு நாள் பொடி போட்டு வாய் கட்டி வைத்துக் கொண்டு கொடுக்கவும்.

இதிலே தீரும் வியாதி:- வெள்ளை நீர் கடுப்பு, தாங்கை எரிச்சல் மஞ்சா வெள்ளை மொழு வெள்ளை பாவுருவே கால் கை கீழ் பிடிப்பு இவை முதலானது தீரும். குலையும் தீரும். புறகழுத்து இழுக்கிற சன்னியும், புறங்கால் நோவு, சகல புண்ணும் தீரும். இதுக்கு முறையான உக்கிரமணி பசை புண்ணுக்கு மேல் பூசு எலுமிச்சம் பழ ரசத்தில் பாகம் சேர்த்து கொடுப்பது.

வாய் நாக்கும் நாறலுள் மருந்து:-

வேப்பந் கோலை நசுக்கி நல்லெண்ணெயில் ஊறவைத்து வாயில் தேய்க்க நாறாது.

தேளுக்கு மருந்து:- கோரோசனை யோடரிதாரம் கோஷ்டம் சதிரக் கள்ளிப் பால் நேரே நீர்ப் புங்கம் பருப்பு நிகளும் சிறு தேனுடனே பாரோராறியக் கூப்பிட்டேன் பறிச்சிழவே கொட்டும் தேள் தீராதகில் புண்ணகத்தை நீயிட்டுவேன் கண்டதே.

சுரத்துக்கு:- நெய் நாழி, நெய் சட்டி மூன்று ரசம் உரி, சீந்தில் சாறு குருவே வேர் சாறு உரி, முலைப்பால் உரி, அதிமதுரம், கடுகுரோகணி விராகனெடை கூட்டி பதமாய் காய்ச்சி மேலுக்கு பூச சகலாங்கமும் பூச தேகத்திலே சுரம் நிற்கும். எருக்கிலைச் சாத்தில் அசமதாகம் இந்துப்பு மிளகு, வெள்ளுள்ளி கூட்டி அரைத்து நசியம் பண்ண சுரம் போம்.

அடங்கின காச்சல் எழும்ப கக்காழை சரகு சாம்பல் கொடுக்க. மாத்த சுண்ணாம்பு தெளிவு கொடுக்க. பாகயிலை ரசம் கொடுக்க உடம்பு வீங்கினால் பயறு கஞ்சி வார்க்க.

சவுரிய மாமுனி குழம்பு ~~[illegible]~~.

ரசம், வெங்காரம், தாளக்கம், மயில்துத்தம், மனோசிலை, இந்துப்பு, பெருங் காயம், ஓமம், கடுகு, கருஞ்சீரகம், இதுகள் வகை ஒன்றுக்கு விராகனெடை. க, நேர்வாளம் விராகனெடை. க, சுத்தி பண்ணி பாகு வறுக்கவும் மருந்து ஒன்றாய் சேர்த்து ஒரு சாமமட்டுக்கும் கல்வத்திலரைச்சு சிமிழில் வைத்துக் கொண்டு வாத சுரத்துக்கு சுக்கு கஷாயம் பித்த சுரத்துக்கு எலுமிச்சம் பழச் சாத்தில், சீத சுரத்துக்கு முலைப் பாலில் கொடுக்கவும். சன்னிக்கு துளசி சாத்தில், தோஷங் கண்டால் வில்வ வேர் கஷாயம். சூலைக்கு இஞ்சி சாத்தில். மூலத்துக்கு ஆன் நெய் முள்ளங்கி சாத்தில். [illegible] மிளகு கஷாயம்

வாத பிடிப்புக்கு மிளகு கஷாயம்:-

வேலி பருத்தி ~~[illegible]~~ மிளகு வேர் கஷாயம், காமாலை சோகைக்கு உப்பிலி சாறு, கபால வலி கபால சூலைக்கு ஒரு தலை நோய்க்கு சீலைத் துணியில் தடவி சுரட்டி மூக்கில் பிடிக்கவும்.

பேதிக்கு குண்டுமணி மாத்திரை:-

பேதி நிற்க மிளகு, சுக்கு, சீரகம் கஷாயம். அதுக்கு நிற்காவிட்டால் பச்சை பயறு கஞ்சி. அதுக்கும் நிற்காவிட்டால் சலாசத்து காய்ச்சிக் கொடுக்கவும். கடிக்கு விஷங்களுக்கு குண்டு மணி எடை உள்ளுக்கு கொடுக்கவும். கடிகளுக்கு கடி வாயில் தடவவும். குழம்பு சீலையில் ~~[illegible]~~ தடவி புகை மூக்கில் பிடிக்கவும். தோஷத்துக்கு சுக சன்னிக்கு பேய்களுக்கு கடுகு மாத்திரம் கண்ணிலிடவும். கண் வீங்கினால் முலைப் பாலிலிடவும். சந்தனம் பொன்னாங்கண்ணி நெய்யில் பிரட்டிக் கொண்டு ஒத்தட வீக்கம் போம்.

மேகம் இருபத்தொன்றுக்கும் குமரிச் சாத்தில் குடிக்க போம்.

சூலைக்கு முருங்கிலைச் சாத்தில் குடிக்கப் போம். இது கை கண்டது.

கெற்பிணியாயிருக்கிற பெண்களுக்கு சுரம் கண்டால் என்னை பண்ணுகிற விபரம்:-

அப்புக் கோவை கிழங்கு சாட்டரணை வேர், சிக்கவரைக் கிழங்கு, பொடுதலை வேர், சுருளி பட்டை, விடத்தி வேர் பட்டை, மணத்தக்காளி வேர், வெங்காயம் எழு வகையும் வகைக்கு என்னையில் நறுக்கிப் போட்டு காய்ச்சி வைத்துக் கொண்டு அந்தி விடிந் ததும் காசெடை கொடுக்க சுரம் நிற்கும். பத்தியம் கெலிப்பு பண்டமாகாது. குணமாம். கை கண்டது.

பேதி மாத்திரை விரோசனத்துக்கு மருந்து:-

கொன்னைக் கொழுந்து கொண்டு வந்து அரைத்து எலுமிச்சங் காயளவு உருண்டை செய்து ஒரு பலம் புளி கரைச்சுக் கொண்டு அதில் அரைச்ச சாந்தும் ஒரு கடுக்காய் பொடி பண்ணி போட்டு காலிச் செம்பிலே வார்த்து கொடுக்கவும் நன்றாக பேதியாம்.

பிறகு மிளகு சாறும் சோறும் சாப்பிடவும். சிவதை வேர் கொண்டு வந்து பசுவின் பாலில் எடு கட்டியும் அதில் வைத்து மேல் சட்டி மூடி நாலு நாழி எரா விட்டு பின்பு எடுத்து நிழலுலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு நெல்லிக்காயளவு புளி கரைச்சு அதில் இரண்டு விரல் கொண்டது சூரணம் போட்டுக் கொடுக்கவும். மிளகு சாறும் சோறும் சாப்பிடவும் விரேசனமாம்..

கற்பூர சிலாசித்து கற்பம் பேதி கட்டுகிறதுக்கு:-

இலவம் பிசிர் விராகனெடை.க, பொடி செய்து வைத்துக் கொண்டு அதி விடயம் விராகனெடை ½ கிரும்பு விராகனெடை ½ இது இரண்டும் இள வறையாய் வறுத்து இந்தப் பொடியோடே கூட்டி தேனில் குழப்பிக் கொடுக்கவும். பல பல கழிச்சலும் விரேசனமிஞ்சி கழியிறதுக்கு மோர் மறிச்சு வாரத்தில் போசனம் பண்ணவும் இது கை கண்டது.

கற்பூர சிலாசத்து பற்பம்:-

கற்பூர சிலாசத்து அப்பிரகம் இது இரண்டும் கூட்டி எலுமிச்சம் பழ சாறு விட்டரைத்து வில்லையாக தட்டி புது ஓட்டில் வைத்து மேலே ஒரு ஓடு மூடி புடம் வைக்கவும். ஆறின வாறே எடுக்கவும் பற்பமாம். இதுக்கு அநுபானம் கிரும்பு விராகனெடை.க, மிளகு விராகனெடை.க, ஏலம் விராகனெடை.க, மூன்று வகையும் பொடி செய்து பற்பம் பணவிடை.க, சூரணம் பணவெடை.க, இந்த இரண்டு வகையும் தேனில் கூட்டி அநுபானமும் பண்ணி சாப்பிடவும்

தீரும் வியாதி:- நீர் அருக்கல் அடைப்பு, சதை அடைப்பு, கல்லடைப்பு, இது வெல்லாந் தீரும். இரண்டு நேரம் அஞ்சு நாள் சாப்பிடவும். இதுக்கு இச்சா பத்தியம். இது கை கண்டது.

மேக சூலைக்கு பறங்கி பட்டை சூரணம்

(பசா) 16 பலம் பறங்கிப் பட்டை பாக்கு சீவியது போல் பிறகு கரு நொச்சில் கொட்டைக் கறந்தை, வெள்ளெருக்கு கோழிய வரை குப்பை மேனியிலை, பொடுதலை, பொன்னாங்கன்னி, செருப்படை கய்யாந்த கரை முசுமுசுக்கை சிலந்தி நாயகம் கொடிவேலி, கோடக சாலை இந்த சாறு வகை ஒன்றுக்கு ஒருநாள் ஊற வைத்து ஒரு நாள் உலர்த்தி பின்பு மலைக்கா சாம்பிராணி மயிசாஉஞ்சி குங்கிலியம் வெள்ளைக் குங்கிலியம் ஏழு நாள் புகை ஏத்தி நாற்பது நாள் சாப்பிடவும். நல்லெண்ணை பிண்ணாக்கு கூட்டவும். இதுக்கு தீரும் வியாதி மேக சூலை, மேக வாய்வு, கிறந்தி, கால், கை முடைச்சல் மூல வாய்வு, சூலைக் கட்டு இது வெல்லாந் தீரும். நாற்பது நாள் இரண்டு வேளையும் சாப்பிடவும். இச்சா பத்தியம். கை கண்டது.

சித்தா மணக்கன் கொட்டை வறுத்து ஆத்தின எண்ணை சேர்.க, பசுவின் நெய் சேர்.. தேன் சேர் ஆக மூன்று வகையும் ஒன்றாய் சேர்த்து இதில் கடை சரக்கு விடரம் ஏலம், லவுங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, மரூட்டி மொக்கு, வால் மிளகு, லவங்கப் பட்டை, சீரகம் ஆக வகை ஒன்றுக்கு பலம் வீதம் சேர்த்து மேல் படி எண்ணையில் கலந்து சூரிய புடம். x2 நாள் வைத்து காலையில் ஒரு கரண்டி அளவு கொள்ளவும். புருஉக வியாதி நீங்கி தேகம் சுத்தமாய் விடும். கை கண்டது.

சுத்தி:-

ரசம் .க, தேங்காய் கொட்டாங்கச்சியில் விட்டு நொச்சி சாத்தில் மஞ்சள் தூள் போட்டு விரலாலே மத்திச்சு நன்றாய் உலர்த்தி அதிப் போட்டு ஒரு சிமிழிலே

வைத்துக் கொள்ளவும். நாபி விராகனெடை.க, வாங்கி எருமை சாணியில் வைத்து உருட்டி மூன்று நாளைக்கு ஒரு நிழலிலே உலர்த்தி நாலாம் நாள் எருமைக் கோமியத்தில் ஏழு தரம் கழுவி உலர்த்தி வைத்துக் கொண்டு வைக்கவும் சுத்தியாம்.

1.12.62.

மனோசிலை விராகனெடை.உ, வாங்கி வந்து ஆலக் கரண்டியிலே இரண்டு துட்டெடை விளக் கெண்ணெய் வார்த்து எரி விட்டு எடுத்து சுண்ணாம்பு தண்ணீரில் கழுவி வைக்கவும். நெல்லிக் காய் கெந்தகம் விராகனெடை.உ, வாங்கி வந்து சங்கங் குப்பிச் சாறு பிழிந்து கரண்டியில் வார்த்து வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். ரச செந்தூரம் விராகனெடை.உ, சுக்கு விராகனெடை.ஊ, கார்த்திகை கிழங்கு விராகனெடை.க, கருசலாங் கண்ணி சாறு ஆழாக்கு பிழிந்து கொண்டு ரசம் விராகனெடை.வ, நாவி விராகனெடை 1/2 எடுத்துக் கொண்டு முன் வகை.எ, கூட்டி கரிசலாங் கண்ணி சாறு விட்டு கல்வத்தில் மை போலரைத்து பயறு போலே மாத்திரை பண்ணி நிழலிலே உலர்த்தி மூன்று நாள் மூங்கில் சிமிளில் அடைத்து வைக்கவும்.

<u>சுரங்களுக்கு அநுபானம்</u>:- மிளகு, ரு திப்பிலி 6 வெள்ளுள்ளி பருப்பு இந்த மூன்று வகையுங் கூட்டி ஒரு மாத்திரை வைத்து அரைச்சு இரண்டு பங்கு பண்ணி ஒரு பங்கு வெந்நீரில் குழப்பிக் கொடுக்கும்படி. உப்பு, புளி மூன்று நாளைக்கு நீக்கவும். வெந்நீரும் வெள்ளுள்ளிப் பருப்பும் கூட்டிக் கொள்ளவும். நாலாம் நாள் உப்பு வறுத்து போட்டுக் கொள்ளவும். அரைக்கீரை கூட்டிக் கொள்ளவும். நாள் கழிக்க பிறகு அர்ப்பங்கிஷம் பண்ணவும். சுரங்களுக்கு கை கண்டது.

ரசகற்பூரம் விராகனெடை.க, இதுக்கு சுத்தி ஆலக் கரண்டியில் விட்டு பச்சை வெத்திலைச் சாறு விட்டு முன்னே சுத்தி பண்ணின ரசகற்பூரத்தை அதிலே விட்டு சுண்ட எரிச்சு எடுத்துக் கொண்டு சுத்தி பண்ணின நேர்வாளம் விராகனெடை. 1/2 கோரோசனை விராகனெடை.வ, ரச செந்தூரம் விராகனெடை.க; 1 <u>இங்குலிகம்</u> விராகனெடை.வ சுக்கு பலம்.வ, இந்த வகை செல்லாம் பச்சை வெத்திலைச் சாறு விட்டு கல்வத்தில் மை போலரைத்துக் கொள்ளு பருப்பு பிரமாணம் மாத்திரை பண்ணி சூரிய புடமாய் வைத்து முப்பது நாழிகை ஊர்ந்த பிறகு எடுத்து வைத்துக் கொள்ளவும். சயித்தியம், சன்னி, இழுப்பு 4 சுரம் நிற்கும் அநுபானம்.

<u>இருமலுக்கு சூரணம்</u>:-

தேத்தாங் கொட்டையை நெய்யில் வறுத்து அதின் எடை.ரும் திப்பிலி, சித்தரத்தை தம்பருத்தகம், மிளகு, வெள்ளைப் பூண்டு, மோடி ஆவாரம் பூவே சரக்கையும் பசு நெய்யில் வடைச்சு இரண்டு மோடி சூரணம் பண்ணி திங்கிறது. ~~[illegible]~~ புழுங்கலரிசி தவிடு சூரணத்தில் கூட்டவும். இதுக்கு பத்தியம் மோரு வரகன் சோறு, சோளச் சோறு, அகத்திக் கீரை ஆகாது. மத்தது ஆகும். இது அகத்தியம், சீதம், சூலை இருமலைப் பிடிக்கும்.

மாத்திரையும் திப்பிலியும் இள வெந்நீரில் கொடுக்கவும். எயரு நாழிகையில் தீரும். இதுக்கு பத்தியம் உப்பு வறுத்துக் கூட்டி அரைக்கீரை கூட்டவும். மூன்று நாளைக்கு அஞ்சு பொழுது கொடுக்கவும். கள ரோகமானாலும் தீரும். நொச்சிலை நீரிலே போட்டுக் காய்ச்சி மேலே விட்டுக் கொள்ளவும். வடித்த கஞ்சி தேய்த்து முழுகவும்.

<u>மூலிகா தயிலம்</u>:-

நல்லெண்ணெய் படி.க, பசும் நெய் படி. 3/4 வெள்ளாட்டு நெய் படி 3/4 எருமை நெய் படி. 3/4 இலுப்பை நெய் படி. 3/4 வேப்பெண்ணெய் படி 3/4 புங்

புங்கெண்ணை படி. 3/4 விளக்கெண்ணை படி. 3/4 பசுவின் பால் படி.க, வெள்ளாட்டுப்
பால் படி.க செம்பிலி ஆட்டுப் பால் படி 1/2 எருமை மாட்டுப் பால் படி இளநீர்
படி.க, ஆக ஐந்து பால் வகையும் ஒரு சட்டியிலே வார்த்து ஆக எறைஎட்டு வகையு
ம் கூட வார்த்து பொன்னாங்கண்ணி ஒரு பிடி முசுமுசுக்கை கூடாதோடை மயில் கொண்ணை
ஆதண்டன் இலை, வேல் தும்பை துளசியிலை. ஆவாரையிலை, நெட்டபிரமுட்டி நொச்சி
யிலை, கரு நொச்சி யிலை, கரிபாகயிலை, பிச்சங் கொட்டை இலை, சிலந்தி நாய
கம், வேளையிலை கரு நாக துளசி இலை,. காவட்டம் பூ இண்ட இலை செவ்வகத்தி இ
இலை ஆவாரையிலைபற்படாகம் அமுக்கிரான் இலை, இந்தயில வகைக்கு ஒவ்வொரு
பிடி கொண்டு வந்து உரலிலே போட்டு துவைத்து சாறு பிழிஞ்சு கொண்டு இந்தப் பாலு
எண்ணை நெய் இந்த வகைகளுடனே பச்சிலைச் சாரையுங் கூட வார்த்து கொண்டாறு
நாழிகை சூரியன் புடமாக வைத்து கறண்டு கொண்டு நாலஞ்சு தரம் துளாவி தொன்
ஊறு நாழி சென்றவுடனே வேப்பம் ~~ஊசு~~ ஊறு போட்டு அடுப்பு மேல் வைத்து எரி விட்டு
நுரை கும்மிரி அடங்கினவுடனே தீயாமல் பதனமா இறக்கிக் கொள்ளவும். இது புதி
தயிலம். ஆறு படிக்கு ஒரு படியாகும். ஒரு படியும் ஒரு விருகல் இதிலே ஆறு குளம்
கண்ணெரிவு, உஷ்ண வாய்வு, காலெரிவு, காமாலை, வெள்ளெழுத்து அக்கினி மாலை
அந்தி மாலை விஷக் காமாலை, கை கால் கடுப்பு, கழுத்து பிடரி, பிசுவு தலை
நோவு, மண்டைக் குடைச்சல், நேத்திர வாய்வு, கண் புழு வெட்டு இந்தவியாதிகளுக்
கெல்லாம் தலை உள்ளுக்கு அரை துட்டெடை கொள்ளவும். ஒன்பது நாள் பதினெட்டு
நாள் பொழுது தலைக்கு தேய்ச்சு உள்ளுக்கும் கொள்ளவும். பதினொரு விசரியுந்
தீரும். இது கை கண்டது. இதை அறியவும்.

<u>பேய் நரி பேநாய் கடித்தால்:</u> *not useful for our purpose*

சின்னியிலையைப் பறித்து வந்து சிறு நீர் வார்த்து உரலிலே அரைத்து
காலமே மூன்று நாளைக்கு கொடுக்கவும். அவர்களை பின் கட்டாய் கட்டிக் கொண்டு
பிறகு உள்ளுக்கு கொடுக்கவும். அவருக்கு லாகிரியாகும். தீர்ந்த பிறகு மோருஞ்
சோறும் கொடுக்கவும். வியாதி தீரும். நாள் பட்டுப் போனால் மரு மயிர் பாஞ்சு
லாகிரி எடுத்தால் சீந்தில் விரைக் கொண்டு வந்து நீரிலரைத்துக் கொடுக்கவும்.
விடும் விழும் தீரும்.

<u>விரை வாதத்துக்கு அவிழ்தங் கலி:-</u>

உள்ளி கழல் பருப்பு உக்க கெக்கான் வேலி நறுக்கி கொள் விளக்கெண்ணை,
யுடன் கோழி முட்டை மெள்ள எரி விட்டு உண்பீர் பெரிய விரை வாதம் பிறவியும்
போமென்றேபேசு வித் விடாமல், வேலி பருத்தி வெள் கோஷ்டம் வெண்காரம்,
அதிமதுரம், ஆலக்கெழுந்த மது மத்தை அஞ்சங் கூட்டியே அரைத்து பூசிக்கெழுந்த
தண்டின் மேல் பூசிப் புறை வல்லீருய் சேவிக்கெழுந்த மடமாதே செத்தாலொழியப் பி
பிரியாதே.

<u>பீனசத்துக்கு தயிலம், வலிப்புக்கு மருந்து, வயிற்று நோவு வலிக்கு மருந்து:-</u>

மணி புங்கு பழம் வெந்நீர் விட்டுக் கரைத்துக் கொண்டு அந்த ரசத்தில் உள்ளி
வசம்பு அரைத்து கரைத்து வாயில் அள்ளி அள்ளி குத்தவுக். வாய் திறவாமல்
இருந்தால் கழி போட்டு திறந்து அள்ளி வைக்கவும். பிறகு பாலாடையாலேபகட்டி
விடவும். இந்த மருந்தை வலிப்பு வந்த போது கொடுக்கவும். இப்படி மூன்று தரம்
கொடுத்தால் வராது. இதுக்கு தீரும் வியாதி முசல் வலிப்பு, கீரி வலிப்பு, காக்கா

வலிப்பு, பெரு வலிப்பு, குமர கண்ட வலிப்பு, பேய் வலிப்பு இதுகளெல்லாந் தீரும். இது கை கண்டது.

<u>வயிற்று வலி பிரமியத்துக்கு மருந்து</u>:-

பொடுதலைச் சாறு படி கால் நல்லெண்ணெ படி கால் இது இரண்டுங் கலந்து எழு பொழுது கொடுக்கவும். கரிசலாங் கண்ணிச் சாறு, உத்தா மணிச் சாறு இது இரண்டு வகையுங் கூட்டி பொங்கு வர காய்ச்சி மூன்று நேரம் தலை முழுகவும். பேய்த் தும்பை இலைச் சாறும் நல்லெண்ணெயும் நசியம் பண்ணவும். இதுகளிலே தீரும் வியாதி வயிற்று வலி, பிறமியம் தீரும்.

<u>சீத சுரத்துக்கு மாத்திரை</u>:-

சாட்டரணைக் காய் பலம்.க, புகை எறிந ஓட்டடை பலம்.க, மஞ்சள் நாள், கல்ச் சுண்ணாம்பு பலம் ½ இந்த நாலு வகையும் தும்பையிலைச் சாறு விட்டு முப்பது நாழிகை அரைத்து சுண்டைக்காயளவு உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு சன்னி கூடியத்துக்கு எருக்கிலை பழுப்பு வதக்கி அந்த சாத்தில் கொடுக்கவும். உத்தாமணியிலையை வதக்கி அந்த ரசத்தி கொடுக்கவும். விடத்தலு கிருந்தி பிட்டா விரை வைத்து அதிலே மாத்திரை வைத்துக் கொடுக்கவும்.

<u>நஞ்சுக்கு மாத்து</u>:- Not useful

எட்டி கின்றல் ~~நீ~~ நாவல் பட்டை பச்சை நாபிக்கு, சிறுகீரை, ஊமத்தைக்கு வில்வம் பத்திரிக்காய், கற்பூரத்துக்கு கரசலாங் கண்ணி, சௌங் கொட்டைக்கு காட்டு முருங்கைப் பட்டை வாழைப் பழத்துக்கு சுக்கு.

<u>குதக வாய்வுக்கு மருந்து பண்ணும் வகை அறியவும்</u>:-

கண்டங் கத்திரி சமூலமும் கொண்டு வந்து நிலையாவாரை ஆவாரம் பட்டை பெருந் தும்பை காவாளை இந்த அஞ்சும் உலர்த்தி சூரணம் பண்ணி ஐந்து நாளைக்கு கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும். குதக வாய்வு குணமாம். கை கண்டது.

<u>கிறந்திக்கு எண்ணெ பண்ணும் வகை: மேகத்துக்கும் சுகந்த எண்ணெய்</u>:-

மூக்குதாரி பட்டை பலம்.க, பறங்கிப் பட்டை பலம்.க, வெள்ளைப் பூண்டு பலம்.க, சாதிக்காய் விராகனெடை.க, பூண்டு தவிர மற்ற மூன்று வகையும் இடித்து வஸ்திர காயம் பண்ணி சட்டியில் நல்லெண்ணெ சேர் ஒன்றரை விட்டு காய வைத்து இந்த நாள் பொடியைப் போட்டு கொதிக்க வைக்கயில் இளங் கொதியில் உரிச்சு வைத்திருந்த வெள்ளைப் பூண்டு பருப்பு போட்டு அரை திட்டமாய் வேகச்சே இறக்கி வைத்துக் கொண்டு திமுங் காசிடை பிரமாணம் கருகும் எண்ணெயும் நாற்பழ நாள் கொள்ளவும். இதுக்கு இச்சா பத்தியம். இதுக்கு தீரும் வியாதி பதினெரு வகை கிறந்தியுந் தீரும். மேகத்துக்கு சுகந்த எண்ணெ

<u>மேகத்துக்கு சுகந்த எண்ணெய்</u>:-

நன்னாரி வேர் பலம்.உய, செங்கத்தாரிப் பட்டை பலம்.உய, நல்வருளி பலம்.ரு, முருங்கைப் பட்டை பலம்.ரு, சிந்தி ரூல்ப் பட்டை பலம்.ரு, மாவிலிங்கம் பட்டை பலம்.ரு இது வெல்லாங் கூட்டி தாளியிலிட்டு அஞ்சு மரக்கால் நீர் விட்டு அஷ்ட்ட பாகமாய்க் காய்ச்சி இறுத்துக் கொண்டு வெங்காயம் இரண்டு ~~பலத்துக்கு~~ தூக்கு இடிச்சு

சாறு பிழிந்து கொண்டு ஆகாசத் தாமரை இலை 5 சாறு முருங்கைப் பட்டை சாறு இரண்டு விழுதியிலைச் சாறு நாழி முசுமுசுக்கைச் சாறு நாழி மாவிலிங்கம் இலைச் சாறு நாழி அந்தக் கசாயத்தில் கூட்டிக் கொண்டு கடை திரவியம் பறங்கிப் பட்டைபலம்.அ, வெள்ளைப் பூண்டு பலம்.அ, மிளகு பலம்.உ, சீரகம் பலம்.உ, பெருங்காயம் பலம். ½ வெண்காரம் பலம் ½ கடுகுரோகணி பலம் ½ வெண்காரத்தை சுத்தி பண்ணி இந்த மருந்தை கூடப் போட்டு இடித்து கூட்டிக் கொண்டு வறுத்தா த்தின விளக் கெண்ணை படி.ரு, இதின் கூட விட்டு சிறு தீயா எரிவிட்டு பூண்டு உரிச்சு நறுக்கி வைத்துக் கொண்டு வெந்த பதம் அறிந்து அதிலே போட்டு எண்ணை சிவந்த பதத்தில் இறுத்துக் கொண்டு காலையிலே பலம் அந்திக்கு பலம் எண்ணை கொடுக்கவும். மறு பத்தியம் நாள் 9 பிடிக்கவும். பத்தியம் பருப்பு வைத்துக் கூட்டவும். முருங்கைக்காய் முருங்கைக் கீரை கூட்டவும். பின்னை ஒரு பதார்த்தமும் ஆகாது. பேதியில் ரத்தங் கண்டால் பால்தயிரும், நெய்யும் கூட்டவும். இதுக்குத் தீரும் வியாதி மேக வாய்வு, மேக சூலை, சுக்கிலப் பிரமியம், ரத்தப் பிரமியம், கிறந்தி, பகிரோகு உடன் வாய்வு, பித்த ஊறல் அக்கினி மந்தம் முதலான வியாதியுந் தீரும். இது கை கண்டது.

அமுர்த ரசாயன எண்ணை பண்ணுகிற விதம் அறியவும்:-

பசுவின் பால் குறுணியில் ஊற வைத்து ஆவாரைப் பட்டை இடிச்சு பிசறி வேக வைத்து காய வைத்து முத்துக் கொட்டையை மாத்திரம் எடுத்து இடித்து ஊறநீர் பத்து பிடி விட்டுக் காய்ச்சி எண்ணை விட்டு வரச்சே கம்பஞ் சோத்துத் தண்ணீர் விட்டு காய்ச்சி எண்ணையை வடித்துக் கொண்டு கம்பந் தண்ணீர் விட்டு வாளாலி காரரெண்ணை யுங் காய்ச்சி பல்லாவி யிலிருத்துக் கொண்டு ரஸ்தாளி வாழைப்பழம். இரண்டு மிளகு பலம்.கால், சீரகம். பலம்.வ, இந்த மூன்று வகையும் அரைச்சு வாழைப் பழத்தை உரிச்சுக் கறுணையாக நறுக்கி எண்ணையில் போட்டு சட்டியிலிட்டு மூடி நெல்லுள்ள தானிய புடம் பத்து நாள் வைத்து எடுத்துக் கொண்டு திவலைரக்கும் காலமே தட்டத்திலே எனறை கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி மேக பிரமியம் உள் வாய்வு.

நாக பற்பம் விராகனெடை.ஙு, லோகபற்பம் விராகனெடை.ரு, வங்க பற்பம் விராகனெடை.க, இது வெல்லாம் லவங்கப் பட்டை கொண்டு வந்த கஷாயம் வைத்து அந்தக் கசாயத்தில் வார்த்துக் கொண்டு இந்தப் பற்பமெல்லாம் போட்டு கல்வத் தில் ஒரு சாமம் அரைத்து இருபது விரட்டியிலே புடம் போடவும். இப்படி மூன்று தரம் அந்தக் கசாயத்தை வார்த்து சங்கம் பூவு கோரோசனம். திப்பிலி மூலம், கடுகுரோகணி பறங்கி பட்டை வகைக்கு பலம்.வ, சிறுதை வேர் பலம் சுத்தி பண்ணி கூட சேர்த்துக் கொண்டு அரைத்து அந்த கசாயத்தில் போட்டு எனறை பதமாக அக்கினி கருகாமல் எரிவிட்டு வடித்துக் கொண்டுஅந்திமிழ்ச்சு ஒரு கரண்டி கொள்ள சிறு கரண்டி கொண்ட பிறகு இதில் தீரும் வியாதிஉடல் வாதம், கிமிர் வாதம்,. இதுக்கு இச்சா பத்தியம்.

மேகத்துக்கு பஞ்சாமிர்தம் பண்ணுகிற வகை:-

அப்பிரகம் விராகனெடை.க, காந்தபற்பம் விராகனெடை.உ, நாக பற்பம் விராகனெடை.ஙு, லோக பற்பம் விராகனெடை.ரு, வங்க பற்பம் விராகனெடை.க, இது வெல்லாம் லவங்கப் பட்டை கொண்டு வந்த கசாயம் வைத்து இந்தக் காசயத்தில் அந்தபற்பமெல்லாம் போட்டு கல்வத்தில் ஒரு சாமம் அரைத் இருபது விரட்டியில் புடம் போட அந்தகசாயத்தை வார்த்து அரைச்சு புடம் போடவும் பச்சரிசி வெள்ளைப்

வெள்ளைப் பூண்டு சாற்றிலே அரைச்சு மூன்று தரம் புடம் போடவும். மருதம் பட்டை கசாயத்திலரைச்சு மூன்று தரம் புடம் போடவும். கோரைக் கிழங்கு கசாயத்தில் அரைச்சு மூன்று தரம் புடம் போடவும். ஆவாரம் பட்டை கசாயத்திலரைச்சு மூன்று தரம் புடம் போடவும். இப்படி இதுகளிலே மூன்று தரம் புடம் போட்டால் செந்தூரமாம். அந்த செந்தூரத்தை தேக்கரங் கொட்டை மாத்திரம் ஆவாரம் விரை. தேனத்திலேயாவது நெய்யிலேயாவது நல்லெண்ணெயிலாவது சக்கரையிலாவது இருபது நாள் கொள்ளவும். இதற்கு தீரும் வியாதி மேகம், இருபது விதமுங் குணமாம். இது கை கண்டது.

சர்வ சுரத்துக்கும் ராம பாணம் பண்ணும் வகை:- *not given*

சாதிலிங்கம் விராகனெடை.உ, மனோசிலை விராகனெடை.உ, கடுகுரோகணி விராகனெடை.உ, நேர்வாளம் விராகனெடை ?- இதையெல்லாம் கூட்டி பசுவின் பால் வார்த்து இரண்டு சாமம் நன்றாய் கல்வத்தில் மை போலரைத்து கடுகு பிரமாணம் மாத்திரை பண்ணி நிழலிலே பதனம் பண்ணி வைத்துக் கொண்டு சாப சுரத்துக்கு வென்னீரில் கொடுக்கவும். குளிர் காச்சலுக்கு நொச்சியிலையை பிட்டாவி வைத்த அந்தசாற்றில் கொடுக்கவும். மற்றக் காச்சலுக்கு இஞ்சியிலேயாவது சுக்கிலேயாவது கொடுக்கவும்.

ஈளை இருமலுக்கு:- *Incomplete*

ஆடாதோடை சாறு படி.கெ. கண்டங் கத்திரி சாறு படி.கெ, பேய்ப்புடல் சாறு படி.வ, கற்பூரவல்லி சாறு படி. சங்கம் இலை சாறு படி.கை. ஆடுதின்னாப்பாளை இலை சாறு படி.கெ, (மேல் வருவது இல்லை).

அஜீரண வாய்வு, மேக வாய்வு, கெற்ப சூலை வாய்வு கெற்ப திரு, இதுகள் தீரும். பிள்ளையில்லாத பேர் சாப்பிட்டால் கெற்பம் தரிக்கும். உள் காச்சல் தீரும் என்பது இது கை கண்டது.

நாகபூச்சி கிளிப் பூச்சி விழுகிறதுக்கு:-

பசுவின் நெய் படி.கால் அதில் கூட எலுமிச்சம் பழ சாறு விட்டு கொதிக்க வைத்து ஆறின பிறகு ஓங்கிலியம் புகை ஏத்தி வைத்து காலமே காலமே ஒரு காசிடை கொள்ள பூச்சியெல்லாம் விழுந்து போம். ~~[illegible]~~

சிறுநீர்க்கு தயிலம்:-

காவட்டம் புல் இலையிலே தயிர் நெக்கி திப்பிலி மிளகு, சீரகம், பொரி மாவை கூட்டிச் சாப்பிட்டால் சிறுநீர் நிற்கும். கை கண்டது.

விஷ பாகத்துக்கு மருந்து:-

மூலம் விழுது கொண்டு வந்து அரைத்துச் சாப்பிட்டால் விஷபாகந் தீரும்.

நெய் கருகு பண்ணுகிற கெற்ப சூலைக்கு மருந்து:-

~~[illegible]~~ பசுவின் பாலாகுதல் மூன்று நாளைக்கு கொடுக்கவும். ஆடா தோடை சமூலமும் பலம் 64 கொண்டு வந்து பதக்குத் தண்ணீர் விட்டு நாழியாக காய்ச்சி தண்ணீர் வடிச்சுக் கொண்டு இரண்டு படி வெள்ளாட்டுநெய் விட்டு எரிவிட்டு எடுத்துக் கொண்டு சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி வாத சுரம், சுவாசம், காசம், பித்தம் கப சுரம் தீரும். கை கண்டது.

~~[illegible]~~:-

பசுநீ தயிலம் மூலம் வியாதி:- உடல் வாதம் பிரிர் வாதம் இதுகருக்கு மருந்து

சர்க்கரை சீரா நெல்லி வேர் பயறு சரியாக தண்ணீரிலே அரைத்து பாலிலே கலந்து கொடுக்கவும். கெர்ப அனலை நீக்கும். வெள்ளைப் பூண்டு பலம்.௫ கொண்டு வந்து நன்றாய் இடித்து போட்டு ஒரு சாலிலே நாழி தண்ணீர் விட்டு அதிலே இந்தப் பூண்டெல்லாம் போட்டு நாலிலே ஒன்றாய்க் காய்ச்சிக் கொண்டு கடை திரவியம் சுக்கு திரிபாலை, வாய் விளங்கம், பெருங்காயம், இந்துப்பு, வாய் விளங்கம், சவர் லவணம், ஓமம் பெருந் திப்பிலி ஏலம், மிளகு, சித்திர மூலம் சாதிக்காய், இரும்பு வசம்பு, கருஞ்சீரகம், தாளிச பத்திரி, பச்சைக் கற்பூரம், சங்கம்பு, கோரோசினை, திப்பிலி மூலம், கடுகுரோகணி, செயம் பறங்கி பட்டை வகைக்கு பலம்.௧, சிவதை வேர் பலம் அத்தி பன்னிக் கூட சேர்த்துக் கொண்டு அரைத்து அந்தகசாயத்தில் போட்டு எண்ணை பதமாக அக்கினி கருகாமல் எரித்திட்டு வடித்துக் கொண்டு அந்தி சிட்சு ஒரு சிறு கரண்டி கொள்ளவும். இதில் தீரும் வியாதி குடல் வாதம், பிரிர் வாதம், இதுக்கு இச்சா பத்தியம்.

மேகத்துக்கு பஞ்சாமிர்தம் பண்ணும் வகை:-

அப்பிரகம் விராகனெடை.க, காந்த பற்பம் விராகனெடை.உ, (இடையில் நாடி நூல் விடப்பட்டது)

Incomplete

அகஸ்தியர் குழம்பு பண்ணும் வகை அறியவும்:- *compare with published books*

பற்பகந் தன்னில் வாழும் பரமர் தன்னருளினாலே பெருமையா யுலகில் வாழும் புண்ணிய ஜனங்களுக்கு உருபல வியாதி வந்தால் உண்மையாய் தீர்க்க வேண்டி பிரபல முனிவன் தானும் பேசிய மருந்து ஈதாய். பேசிய மருந்து கேளாய். பெருங்காயங் கடுகு, இந்துப்பு, மாசிலா ரசம் போர்க்காரம் மனோசிலை யதுவுங் கூட்டி ஆசிலா திப்பிலி கூட அரிதாரந் கெந்தகம் தாளி மார்க்கில் கருஞ்சீரகமும் வகை வகைகளுக்கு வாங்கே.

3. வாங்கிய மருந்துக்களை கப்பா வாளமும் வறுக்கப் பாகி
தீங்கிலா மருந்து பாக்கு சேரவே அரைக்கில் காந்தம்
ஒக்கி

3. வாங்கிய மருந்துக்கப்பா வாளமும் வறுக்கப் பாகி
தீங்கிர பச்சை பாகி சமன் முறைதோடு போக்கி
தீங்கிலா மருந்து பாக்கு சேரவே அரைக்கில் காந்தம்
ஒங்கிய மேருக்கு சோரம் உண்டு நீ அரைத்துக் கட்டே.

4. கட்டிய மருந்தின் பேரு அகஸ்தியர் குழம்பதாகும்
தீட்டியே சுரமே சுக்கு விலம்பலேகடுக்காய் சாறு
வாட்டியே குளிர் சுரங்கள் வகைக்கு மிளகு நாளாம்
பாண்டு வறகமூலம் பசுவின் நெய் மேகப் பாலே.

5. பாலினில் மொழியக் கேளாய் பாண்டு கோதரம் பெரு வயறு
மேல் நீரும்பல் சுக்கை மளகு நாள் வெள் வெங்காயம்
சாலவே சன்னிக் கெல்லாம் கேணிச்சி சாறதாகும்
மீய் பெருஞ் சன்னி பிஞ்சில் கடுகினில்பாகங் கொண்டு வேப்பெண்ணெயில் கன்னில்

6. போடவே கன்று வீங்கில் புகழ் பெருங் கக்காமுத் சோர்

வடி கயிர் சந்தனங்கள் வச்சினி கட்ட மாறும்
படு பரும் பிளவை வாளை பக்கரை புள்கள் கூட
விடு பெருஞ் சில்ந்திக் கெல்லாம் உமி நீரில் குழைக்கப் பூசே.

7. பூசிய மூலைக் குக்கும்புள்ளுக்கு. மிரவே. யாகும்
கூசிய வாத கூலை குஷ்டங்கள் நொச்சிச் சாத்தில்
குசிகா வலிக் நன்பங்கள் தோன்றிய சாத்தில். கொள்ளே
பாசமாய் வாய்வுக் கெல்லாம் அஞ்சுக்கு நொச்சி பாரே.

8. பார்க்க பால் வலி முதலாய் ப்சாசும் பகைக்குந் திரிபுகையில்
நீரே எருக்கும் நீர் போக்கும் நீர் கல்லடைப்பு தான் முதலாய்
தீரு கிறந்தி மிக தீரும் சங்கங் குப்பி சாத்திலிடேன்
சீறக் கருக்கும் பல விஷகமுந் தீருந் தீருமப்படியே.

9. பிடிக்குந் திரிக்கு முன்னரைக்த அம்மி தன்னை கால் தேய்க்க
திரியே திரிக்கப் பிடிக்கப் பார் வலிக்கும் வாய்வு வாதமுடன் புகையே
காட்டிக் கொடுக்க தீராகும் வெள் வெங்காயம் ஒரு காஞ்சி முசுமுசுக்கைச் சாத்துடன்
தேய்க்க விடும் சன்னி பதினெட்டும் செய்யும் நாவின் வகை மிரவே.

10. திரியாய் மருந்தை இவை யெல்லாம் வேறே கேட வேண்டாங் காண்
ப்கிலாயிரம் பகரும் வியாதி களுக்கெல்லாம்
பதியா மிதக்கு குரும் பரிந்த வந்தோர பாலம் வல்லோர்க்கும்
வகையாய்ச் சொன்னோம் கவுனியே பூவின் லேசிய முற்றும்.

***

குருமை என்கிற எலுமிச்சம் பழ சாறு கக்காளை சாறு தனியா சோம்பு, வெந்தியம், பொன்னிறம் என்னை இதற்கு தீரும் வியாதி அஸ்தி சுரம், வெட்டை, வெள்ளை கிறந்தி, நீர் சுருக்கு. இச்சா பத்தியம்.

<u>அகஸ்தியர் குழம்புக்கு மருந்துகள் சுத்தி:-</u>

ரசம் விராகனெடை.ய, உத்தாமணி இலைசாறில் நாழி மத்திக்க. கத்தாளை சாறு நாளில் மத்திக்க. எழு புரையும் போம். நாளி மத்திக்க சுத்தியாகும்.

பெருங்காயம் விராகனெடை.ய, கடுகு விராகனெடை.ய, கருஞ்சீரகம் விராகனெடை.ய, திப்பிலி விராகனெடைய, பொரிக்கக் கொள்ள சுத்தி.

கெட்டரி காரம் விராகனெடை.ய, பசு கோமியத்தில் இரட்டை மடிப்பில் முடிந்து கோமியத்தைசட்டி யிலாக்கி மூடியை போட்டு அடுப்பில் சுண்ட எரிக்கச் சுத்தி. மனோசிலை விளக்கெண்ணெய் ஊலக் கரண்டியில் வார்த்து எரித்து வருத்து சுண்ணாம்பு தண்ணீரிலே கழுவிப் போட சுத்தி.

வெங்காரம் எலுமிச்சம் பழ ரசத்தில் அரைக்க சுத்தி.

நேர்வாளம் சாணியில் வெவிச்சு எடுத்து ஓடு தள்ளி கரிசலாங் கண்ணி சாற்றில் மூன்று சாமம் ஊற வைத்து பசும் பாலில் வெவிச்சு மூளை தள்ளி சுக்குப் பொடியில் கட்டி பின்பு எடுத்து விராகனெடையும் விளக்கெண்ணெய் விட்டு அரைத்து பச்சை விராகனெடை யும் கட்ட மிளிட் சுத்தி.

ரசம் பெருங்காயம், வெங்காரம், மனோசிலை அரிதாரம் கடுகு இந்துப்பு, திப்பிலி, கருஞ்சீரகம், நேர்வாளம், அரி தாரம் ரசம் மனோசிலை இவை மூன்று முன்னே

கல்வ கல்லில் அரைக்க பின்பு இவை யெல்லாம் போட்டு அரைக்க மோருஞ் சோறும் அரைக்க கூட்ட சாமம் அரைக்க என்றறியவும்.

கதலி கந்தம் சிறுகம்:-

வாழைக் கிழங்கு, வாழைக் கன்று, வாழை மட்டை, வாழையிலை வாழைப் பூ 2 வாழைக்காய் ஆக வகை 6ம் கொண்டு வந்து உரலிலே போட்டு அலைச்சு ஒரு சுண்ணி சாறு பிழிந்து கொண்டு அதிலே உப்பு பலம்.க, நரிக்கி நாளாக்கி சட்டியிலே போட்டு நாலிலே ஒரு பங்கு காய்ச்சி பசுவின் நெய் படி பசுவின் பால் படி இதற்கு கடை திரவியம் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், லவங்கம், சடா மாசிம், நல்ல சந்தனச் சக்கை, விளாம் பழம் உள் சதை இவ் வகைக்கு பலம்.க, தேவதாரம் பலம் இவைகளை வேறே இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு தாமரைக் கிழங்கு நெய்தல் கிழங்கு, ஆரம் விழுது அத்திப் பட்டை ஆலம்பட்டை பட்டை கல்லால் பட்டை நாவல் பட்டை, நறுவள்ளி பட்டை அரசம் பட்டை மருதம்பட்டை, வேலம் பட்டை, இவையெல்லாம் கொண்டு வெவ்வேறே இடித்து வகை ஒன்றுக்கு பலம் விறக்காடு நிறுத்துக் கொண்டு வஸ்திர காயம் சூரணம் பண்ணி முந்தின கடை திரவியத்தோடே கூடக் கலந்து முன்னே --2--க்கிலே கூட கலந்து நெய்யும் பாலும் கூட வார்த்து பதமாக காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு இப்படி தின காலம் காக்காலே உள்ளங்கையில் கை கொள்ள எடுத்து லேகியத்தை வைத்துக் கொண்டு சாப்பிட்டு வரவும். இதிலே தீரும் வியாதி பழைய காய்ச்சல், எலும்புருக்கி இருந்தப் பிரமியம், வெள்ளைப் பி பிரமேயம், மேக வியாதி அநேகம் தீரும். குணமாகும்.

அகபதி சூரணம்:- சிவதை வேர் சூரணம் பண்ணும் வகை:-

சுத்தி பண்ணின சிவதை வேர் பலம்.1, இதற்கு கடை சரக்கு சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், வாய்விளங்கம், ஏலக்கிசி, கிராம்பு, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி வகைக்கு பலம்.ல, மேறைக்கு வாங்கி வந்து இடித்து வஸ்திர காய சூரணம் பண்ணி சக்கரை பலம்.1, அதிலே கலந்து புது பல்லாகையிலே போட்டு வாய் கட்டி வைத்துக் கொண்டு தினம் காலம் மூன்று விரல் பிரமாணம் சாப்பிடவும். கணரோகமானவும் தீரும்.

அஷ்ட குன்மத்துக்கு மருந்து:-

இந்துப்பு கலம்.க, நேர்வாளம் பலம். ½ கள்ளிப் பால் படி.ரு, இந்த மூன்று வகையும் கொண்டு வந்து வைத்துக் கொண்டு ஒரு இளநீர் தேங்காய் வாங்கி வந்து கண்ணை திறந்து தண்ணீரை ஊத்திப் போட்டு இந்த மருந்தை அதுக்குள்ளே போட்டு அடைத்து அந்த சிறு கள்ளிப் பாலையும் அதிலே வார்த்து வாய் மூடி சீலை மண் செய்து பூமியிலே குழி வெட்டி அதுக்குள்ளே புதைத்து மேலே நெருப்பைப் போட்டு இரண்டு நாள் எரிவிட்டு ஆறின பிறகு எடுத்து சுத்தி கொண்டு அதிலே பேரீச்சம் பழ பருப்பும் மிளகும் சேர்த்து நோவுக்கு தக்கதாக ஒரு விராகனெடை மருந்து கொடுக்கவும். தயிருஞ் சோறும் சாப்பிடவும். இச்சா பத்தியம். எட்டுகுன்மத்துக்கும் தீரும். கை கண்டது.

தாம்பிர பற்பம் பண்ணும் வகை:-

தாம்பிரத்தை தகடாய் அடித்து அந்த தகட்டை காய வைத்து எலுமிச்சம் பழச் சாத்திலே துவைத்து இப்படி இருபது தரம் காய்ச்சி அவைச்சு பின்பு உப்பும், புளியும்

கரைத்த அதிலேதகட்டைக் காய்ச்சி நவைச்சு பின்புஎடுத்த சக்கி சாட்டறனை சிமந்து கொண்டு வந்த நீக்கி ஒரு பானையிலே கொட்டி அதின் நடுவே இந்த தகட்டை வைத்த பானைக்கு சீலை மண் செய்த அடுப்பிலே வைத்த ஆவாரை விறகு கொண்டு நாலு சாமம் எரிவிட்டு பின்பு எடுத்த பார்க்கச் செவந்திருக்கும். அம்மியிலே வைத்த அரைக்கால் பற்பமாகும். இந்த பற்பத்தை முலைப் பால் பசுவின் பால் வெள்ளாட்டு பால் இதுகளிலே அரைத்த கருகு பிரமாணம் மாத்திரை பண்ணி வைத்துக் கொண்டு சுரத்துக்கு கொடுக்கவும் தீரும். எப்பேர் பட்ட சுரமும் நிற்கும்.

குடதிரு<u>தி</u> லேகியம்:-

கண்டங் கத்திரி பலம்.எ, கடுக்காய் உள இது வகை இரண்டுக்கு ஒரு சாலிலே போட்டு சாலி தண்ணீர் வார்த்த குறுணி தண்ணீயாக காய்ச்சி கடுக்காய் எடுத்த வைத்துக் கொண்டு அந்த வேர நன்டுய் பிசைந்த பழைய பனை வெல்லம் பலம்.எ அதைக் கரைத்த வடி கட்டிக் கொண்டு கடுக்காயை சத்தே நறுக்கி வெல்லத் தண்ணீயோடே கூட போட்டு பக்குவமாய்க் காய்ச்சி அதை நெருப்பின் பேரிலே போட்டால் சற சொற வென்று மலிருந்தால் அதை பக்குவம் இந்தபக்குவத்திலிறக்கி வைத்துக் கொண்டு லவுங்கப் பட்டை ஏலம், லவுங்கம், லவுங்கப் பத்திரி இது வகை ஒன்றுக்கு பலம்.க; தேன் பலம். இது வெல்ரம் இடித் வஸ்திர் காயம் சூரணத்தை அந்தப் பாலிலே போட்டு நல்லாக் கிளறி பதமாகக் காய்ச்சி எடுத்த வைத்துக் கொண்டு சாப்பிடவும். இதிலே தீரும் வியாதி காசம், இருமல், பாண்டுவம், மகோதீரம், விக்கல், சுவாசம், நாயிறப்பு இவை யெல்லாம் குணமாகும். சந்திரோதையமாவது, பந்திரசமாவது, சுவற்ன பற்பமாவது இட்டுக் கொள்ளவும். முன்குள் கடுக்காய் லேகியத்திலே ஊறி இருக்கிற லேகியத்தை யெல் லாம் செலவழிந்தால் கொட்டிப் போடாமல் சாப்பிடவும்.

சதிரக் கள்ளி கற்பம்:-

சதிர கள்ளி விரை.க, நன்னாரி விரை இது இரண்டையும் அரைத்த காலமே சூரியன் புடமாக வைத்தால் அதிலே தயில மிறங்கும். அந்தத் தயிலத்தை ஒரு சிமிளில் வைத்துக் கொண்டு கருங் குஷ்டத்துக்கு ஒரு மண்டலம் உள்ளுக்கும் மேலுக்கும் தடவி நாலு தரம் அந்ததயிலத்தைஒரு விரலில் தொட்டு தேங்காயில் தடவ நெருக்கலாம். தாளில் காட்ட பிரியும். இதிலே தீரும் வியாதி ஆமல் பயித்தியம், வாந்தி விக்கல், வாய்நீர், ஏப்பம் ஆரோசிகம், பயித்தியம், பயித்திலே பிறந்த சேத்மத்திலே பிறந்த எல்லாம் குணம்.

நிலஜுயாவி (Page 14 of copy) Refer to

உள் மூலத்துக்கு பிற மூலத்துக்கு:-

ருத்திரசுட கந்தயிலையை உப்பில்லாமல் புழுங்கலரிசி சோத்திலே போட்டு சாப்பிடவும். கரியும் பாழமாகாது. சிவந்த நாயுருவிக் கொழுந்த அரப்பொடி பலம்.க, இதை எலுமிச்சம் பழச் சாறு வார்த்த அரைத்த வெள்ளள்ளி சாறும் பதினைந்த எலு எலுமிச்சம் பழம் சாறும் இது இரண்டும் ஒன்றாய்க்கூட்டி அதிலே அந்தமருந்தை இந்த சாத்திலே கரைச்சு ஒரு காசளவு பசுவின் வெண்ணெயைக் கொண்டு வந்த சட்டியைக் காய வைத்த இந்த வெண்ணெயைப் போட்டு கரைச்சு வைத்திருக்கிற மருந்தை சட்டியிலே ஊத்தி தாளிச்சு இறக்கிக் கொண்டு ஒரு உழக்கு சாப்பட முளை கரைந்த விழும். கை கண்டது.

குடல் வாதத்துக்கு:- வறள் சுண்ட இலையை பறித்த வந்த இலை தெரியாமல் துவைச்சு வறுத்த இட வாதமாயி வீங்கின விரையின் பேரிலே மருந்தை கொப்பேன போட்டு

-

மருந்தின் மேலே ஒரு போட்டு கட்டவும். ஒரு கட்டிலே குடல் வாதம் நிற்கும். இது கை கண்டது.

<u>இலை கள்ளிக் கற்பம்:-</u>

இலைக் கள்ளி வடக்கு போற வேர் பிடுங்கி வந்து பொடி பண்ணி புதுக் கலசத்திலே வைத்து நெல்லிக்காய் மாத்திரம் நெய்யில் முழுங்க ஊது காமாலை பொழுந் தயிரும் பலாயிருக்கப் பட்டதும் போம். அதை ஆட்டுப் பாலில் கலந்து குடிக்க பித்தம் போகும். மோரில் குடிக்க தீபனமாகும். அதை ஆட்டுக் கோமியத்திலே குளிகை பண்ணி முழுங்க பெரு வயிறு உப்புறது போம். அதைக் காடியில் கரைத்து கொடுக்க வயித்திலே புழுவு சாகும். அதை மலடிக்குச் சூதகமான பேர்க்கு பாகல் சாத்தில் குடிக்க கெற்பந் தரிக்கும். குணமாகும். இது கை கண்டது.

<u>மருந்தீட்டுக்கு:-</u>

காடியும் பழைய புளியும் எலுமிச்சம் பழம் சாறு அரிசியும் செம்பிலே ஊற வைத்து பிசைந்து வடி கட்டிக் குடிக்க மருந்தீடு போகும். பத்தியம் மோருஞ் சோறும் சாப்பிடவும். பொன்னாங்கண்ணி சமூலமும் ஒரு பிடி பிடுங்கி வந்து தலைச்சு ஆறு மாஸத்தைய பழங் காடியிலே பிசைந்து அந்தக் காடியை குடிச்சால் மருந்தீடு குணமாகும்.

இருமல், சுவாசம்

சங்கம் வேர் பலம்யரு, முளகத்திரி வேர் பலம்.யரு, கண்டங்கத்திரி வேர் பலம்.யரு, உத்தாமணி வேர் பலம்உ, பொன்னாவாரை வேர் பலம்.உ, [illegible] வேர் பலம்.உ கீரை வேர் பலம். [illegible] வேர் பலம்.ரு இவ்வகை எல்லாம் கொண்டு வந்து சின்ன பின்னமாய் நருக்கி நாலு மரக்கால் தண்ணீரில் போட்டு நாழியாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு பழைய பனை வெல்லம் பலம்.உயரு போட்டு கரைத்து வடித்துக் கொண்டு இதுக்கு கடை மருந்து சுக்கு, மிளகு, திப்பிலி, மூலம், கண்டு பரங்கி, கற்கடாக சிங்கி, லவங்கம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி நாகேசரம், சயிந்த லவணம், வகை ஒன்றுக்கு பலம்.க, வெண் காரம் பலம்.க, பொரித்துக் கொண்டு பாகு காய்ச்சுறுப் போலே அதுக் பக்குவத்திலே பொடியைப் போட்டு தூவவும். பின்பு கிளறி இறக்கவும். அதின் பிறகு தேன் படி.க, காய்ச்சி வார்க்க லேகியம். இறுகிய பின்பு தானியம் புடத்திலே பதினைந்து நாள் வைத்து எடுத்துக் கொண்டு உள்ளங் கைய மறவச்சுக் கொண்டு சாப்பிடவும் இதில் தீரும் வியாதி சுவாசம், இருமல், காமாலை, வறட்சி, இது வெல்லாந் தீரும்.

<u>இஞ்சி லேகியம் பண்ணுகிற விபரம்:-</u>

இஞ்சி, தேன், பதமாகக் காய்ச்சி சர்க்கரை உரு.பலம் போட்டு கடை மருந்து திப்பிலி சீரகம், ஓமம், அதிமதுரம், தம்பராஷ்டம், கனியா தீபஉதும் இவ்வகை.க-க்கு விராகனெடை .உ, சூரணம் பண்ணி கலக்கவும். தேன் அரைபடி வார்க்கவும். உள்ளங்கை குழி மாத்திர குசமிருகாங்க பூரண சந்தோரு தயம் யிட்டு கொள்ளவும். வாந்திவிக்கம் குன்மம் இது வெல்லாந் தீரும்.

<u>எலி கடிக்கு மருந்து:-</u> காட்டு வாழை மரத் தோலும் புகலில் பால் வார்த்து அரைத்து உழக்கு பேர்தங் குடிக்க தீரும். இப்படி மூன்று நாள் குடிக்கவும். பின்னையும் ஒரு வகை:- கருதின்னுப் பாளை சமூலங் கொண்டு வந்து உள்ளி வசம்பு போட்டு நல்லெண்ணை யிலாக்கி தினந் காசத்தினை குடிக்க எலி கடி தீரும். உப்பு, புளி ஆகாது. வாளை வேரும், வெள்ளை வெங்காயமும் அரைத்து ~~[illegible]~~.

~~[illegible]~~

சர்க்கரைக்குள்ளே வைத்து மூடி மழுங்க கண்டு கட்டின எலி கடி தீரும். களருளா பட்டை கட்டை திருப்பி வேர் கொடி வேலி வேர் விடத் தேறி வேர் யிருப்பை வேர், அழிஞ்சி வேர், சத்திக் கிழங்கு இவை வெல்லாம் சமனாகக் கட்டி நறுக்கி நல்லெண்ணெயிலாக்கு பலே வெல்லமும் கத்தாளஞ் சோறும் போட்டுக் கொதிக்க வைத்து இறக்கி ஒரு கரண்டி கை கொள்ளவும். எலி கடி தீரும். உப்பு, புளி ஆகாது. பத்தியமாயிருக்கவும்.

கை கண்டது.

ஏரா இட பதம் இது வெள்ளறிய:-

சகல மேகாதிகள் தயிலமிதா மைய்யா செய்தன்பவர்க்கு சந்ததி வச்சிர சரி கரமா மய்யா தகைமைய தாகிய தேகமதில் வரும் தன்ம் பிணி திரிள நீறது தந்த வகைச் சித்தர் மனக்கெண்ணே வடிக்க வரிசை யுரைத்திட வந்த நீர் கேளும்

<u>சகல மேகாதிகள்:-</u>

வலமூலிகை யினில் முக்ககாரிப் பட்டை ஒரு பலமும் வளமையாய் இரண்டு பல முளகறணைப் பட்டை மகிமை எட்டு பல நிறையாகி யகானனி சங்கம் பட்டை வெள்ளைக் காக்கணம் வருந்திய வேரினில் வாங்குவதொரு பலமும் செருப்படையும் சிலந்தி நாயகம் கருநொச்சி வெள்ளருகு வல்லாரை யிலைலயும் கொட்டைக் கறந்தை காகல்த் துளசி முசுமுசுக்கையும் கோழிய வரையும் சித்திர மூலமும் தனதொரு பலமும் இது முதல் எல்லாம் நயவுடன் பார்க்கவே சேர் ரசம் கொண்டு விளவிய பசும் பால் மிகவரைச் சேரும் வேண்டிய பசு நெய்யினிலரைச் சேரும் சகல மேகாதிகள்.

கண்டு பறங்கி பட்டை லவங்கம், தம்பருஷ்த சதமும் கடுகுரோகணி கோரோசனை சாதிக்காயும் மஞ்சளவை கூர் மிளகு கடுக்காய், சிறு நாகம் வர கருஞ்சீரகமும் தானிக்காயுடன் கார்போகரிசி வெப்பாலரிசி கொப்பரையும் கோரோசனி, ஓமம் கொண்டு நீக்கச் சூரிப் பழமுடன் திருஷ்டச்சியுங் கனியுங் கற்கண்டுடனே குருக்கு வெங்காயமும் இவை முதல் நேர்வாளங்கள் சரக்கிதெல்லாங் கட்டியே பக்குவமாக்கியே பண்டிதருக்கு பங்கை கொடுத்த குலவிய கதரிட நாளி ரவினிலே கொள்ள இருந்தபிடை அனமு மொபசரை வேரிக முதல்களெல்லாம் அத்தனை காலவே மெத்த மயங்கி மண்டலந் தன்னையே விட்டது ஓட்டு வாரியத்தானைக் கினியவரும். சகல மேகாதிகள்

நீர் சுருக்குடன் வெள்ளையுங் கன்னெரிச்சல் பிடிப்பு ரணமுங் கிரம் நிலவற அச்சற கோப்பால் சூலை செல்லாப்பு வயிற்று நோவு, நிலக் காமாலை பவுத்திர மீறறையாப்பு அதில் ரேசிகம் நெருப்பது வாகவே கெற்ப்ப வெட்டையும் வெகுவாய்ப் சுயருப்புசம் பார்க்க மிகுந்தடை வானையும் நறுயிர குட்டம் விரை சாதமும் பட்டழியாமலிருப்ப வர்/ தம்மிட கஷ்டம் போக்க வயனம். பத்திய மில்லாமலே செய்யு மருந்திது. இஷ்டம் பாரியுள்ளவர் பாங்குடன் செய்து பொசிப்பவர். தங்களினதிஷ்டம் சொர்ணம் புரியில் மேரு நிகரப் பன்னிரு புலவேலர் யார்க்குந் தெரிந்திடவே யுரை செய்த சிறகனை கண்டது செய்து செழிக்க செயமதுவே பெறுவார். சுபமிக்க. சகல மேகாதிகள் தயில மிதாமய்யா செய்தன்பவர்க்கு சந்ததி வச்சிற கரி கிறமமய்யா.

எலுமிச்சம் பழம்.ரு, சீரகம் பலம்.க, வெள்ளாட்டுக் கோமியம் ஐ நலச் சிங்கைத் தழை சாறு படி, சீயக்காயதிலே அரை விருகனெடை சங்கு பற்பம் போட்டு இரு நேரம் ஐந்து நாள் கொள்ளவும். சீரகத்தை நறுக்கிப் போடவும். ~~[illegible]~~

<u>சர்வ வியாதிக்கும் வடலாக்கினி சூர்ணம்.</u>

விருகன் கிழங்கு ஊ. நவனை மாவிலிங்கம் காகுறிஞ்சா முளகறணைப் பட்டை

பெருங் கிழங்கு சிறுகிளா வேர் பலம்.க, நன்னாரி வேர் பலம் ஒன்று, பாப்பாற முள்ளி விரை பலந் கால், பேய்ப்புடல் இலை பலங் கால், வில்வ வேர் பலங் கால், கடுக்காய், தான்றிக்காய் நெல்லிக்காய் வகை ஒன்றுக்கு பலம்.க இவை வெல்லாம் இடித்துச் சூரணம் பண்ணி இதுக்கு கடை சரக்குகள் செவியம், திப்பிலி, திப்பிலி மூலம், வாய் விளங்கம், மிளகு, தம்பராஷ்டகம், சாபத்திரி, கிராம்பு, சிறு நாகப்பூ, சடாமாஞ்சி சிறு தேக்கு கச்சோலம், திபாரிஷம், ஏலம் காலேசபத்திரி, ஓமம், கோஷ்டம், லவங்கம், லவங்க பத்திரி, கருஞ்சீரகம் நல்ல சீரகம் இது வகைக்கு வெட்டு வகை சூரணமும் கடை சரக்கு சூரணமும் சம பாகம் கூட்டி வெள்ளியிலே மூன்று விரல் கொண்டு எடுத்துக் கொண்டு இரண்டு வேளையும் சாப்பிடவும். இதிலே தீரும் வியாதி சுவாச காசம், உள் காச்சல், இருமல், மார்நோவு, கிறுனி, அக்கினி மந்தம், அரோசிகம், சகலவாதமுந் தீரும். உப்பு, புளி தவிர்க்கவும். குணமாம். கை கண்டது. விருயக பூசை பண்ணவும். சீக்காய் முலைப்பாலில் உரைத்து நசியம் பண்ண வலி நிற்கும்.

திமிர் வாதத்துக்கு மருந்து:-

எருக்கம் பால் இலைக் கள்ளிப் பால் இலை வாட்டி பிழிந்த சாறு படி.உ, நொச்சிச் சாறு படி.உ, மாதளைச் சாறு, கழுதாழைச் சாறு, குப்பை மேனிச் சாறு, முருங்கைப் பட்டை சாறு, செம்பையிலைச் சாறு, வெள்ளாட்டுப் பால் படி.உ, இந்த சாறெல்லாம் ஒன்றாய் கூட்டி வேப்பெண்ணை நல்லெண்ணை கூட்டி காய்ச்சவும் கடுகு திறள செவச்சு வெள்ளப் பூண்டு சத்து உசம்பு கூட்டி வைச்சு ஒரு பல்லாவியில் இரண்டு பணவெடை பெருங்காயம் போட்டு வடிக்கக் கொள்ளவும். இது மேலுக்கு தடவிப் பிடிக்கவும். தண்ணீர் வார்க்கவும்.

வாய்வுக்கு சூரணம்:-

சீரகம், கருஞ்சீரகம், திரிகடுகு, இந்துப்பு, ஓமம், பெருங்காயம் இது வெல்லாம் சுமன் திறை கொண்டு சூரணம் பண்ணி தேனில் கொள்ள சகல வாய்வுந் தீரும்.

குலை வாய்வுக்கு அதன் சூரணம்.-

சந்து சந்துகள் கோறும் குடைச்சல் எடுக்கும். இதற்கு சூரணம் பண்ணும் வகை வெள்ளை சங்கம் வேர், கருத்த சங்கம் வேர், வெள்ளறுகு இது மூன்று வகையும் சமன் நிறையாக நிறுத்து இதிலே தம்பராஷ்டகம் சடாமாஞ்சி திப்பிலி மூலம், ஓமம், இது நாலு வகையும் கூட கூட்டி சூரணம் பண்ணி நெய்யிலே சாப்பிட குணமாகும். இது கை கண்டது.

வில்வாதி லேகியம் பண்ணும் வகை:-

Compare this with preparations in published books.

வில்வக்காய் ரு, வில்வ வேர் பிசைத்த பொடி பலம்.நய, இவை இரண்டும் பகிர்ந்து படி தண்ணீரில் போட்டு நாலு படி தண்ணீராக் காய்ச்சி ஒன்று வருஷக்கு வெல்லம் பலம்.நய, அதிலே போட்டு ஊறவிக் காய்ச்சி கொதிக்கிற பதத்திலே இறக்கி இஞ்சி பலம்.நய, மிளகு பலம்.க, திப்பிலி பலம்.ச, லவங்கம், லவங்கப் பத்திரி வகை இரண்டுக்கு விராகனெடை.உ, திப்பிலி மூலம். பலம்.உ, செவியம் பலம்.க, தாளிச பத்திரி பலம். ½ சிறு நாகப்பூவு பலம்.ல, கொடிவேர் பலம்.க, ஏலம் பலம்.க, சாதிக்காய் விராகனெடை.உ, சீரகம் பலம்.உ இந்தவகைகளெல்லாம் ஒரே வறையாய் வறுத்துக் கொண்டு இடிச்ச சூரணம் வஸ்திரகாயம் பண்ணி பாகத்திலே போட்டு ஊறவிக் கிளறி சூடு போதே ஒரு சேர் தேன் விட்டு

4

எலிப்பகை தன்னை யங்கே எருக்கம் பால் விட்டரைத்து
சலிப்பா நாவு நாளும் சார்ந்து போலரைத்துப் பின்னை
வெயில் படா நிழலுலத்தி மிக்கவே உருண்டை செய்து
நலிப் பிற மோரில் விட்டால் நாலா மாறல் விட்டகலுமே.

கிளறி ஒரு கலசத்தில் வைத்துக் கொண்டு சாப்பிட்டு வர இதிரட சூலம். இதற்கு தீரும் வியாதி சகலரோகமுந் தீரும். குணமாகும். கை கண்டது ~~என்று அறியவும்~~.

சுரக்குளிகை. தாப சுரத்துக்கு மருந்து பண்ணும் வகை யென்றறியவும்:-

ரசம், கெந்தகம், நாபி, நாகலிங்கம், அரிதாரம், நவாச்சாரம் துத்தம் வெண்காரம் பொன்னாமத்தைவிரை, சுக்கு, மிளகு, திப்பிலி இது வெல்லாம் சம பாகங் கூட்டி கருகுரோகணி கஷாயத்தில் ஒரு சாமம் அரைத்து உழுந்து பிரமாணம் உருண்டை பண்ணிக் கொண்டு தாப சுரத்துக்கு பஞ்ச மூலக் கஷாயத்தில் கொடுக்கவும். ஏழரை நாழிகையில் நிற்கும். இது கை கண்டது ~~என்றறியவும்~~

சுராங்கீசசு முராரி குளிகை பண்ணும் வகை:-

சுத்தி பண்ணின ரசம் விராகனெடை.க, கெந்தகம் விராகனெடை.உ, சுத்தி பண்ணின நேர்வாளம் விராகனெடை.உ, இதுகளை கூட்டி எலுமிச்சம் பழ ரசத்தில் இரண்டு நாள் அரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொள்ளவும்.

சுரகுக்குறி குளிகை பண்ணும் வகை:-

சர்திலிங்கம் விராகனெடை.உ, வெண்காரம் பொரிச் சாறு விராகனெடை.உ, சித்தா மணக்கு பருப்பு விராகனெடை.உ, சுத்தி பண்ணின நேர்வாளம் விராகனெடை.உ, இதுகளெல்லாம் வாழைப் பழத்திலாவது எலுமிச்சம் பழத்திலாவது அம்மான மட்டாய் அரைச்சு குன்று மணி பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொள்ளவும். சிறு கீரைச் சாத்தில் கொடுக்கவும். திப்பிலி கஞ்சி சோறும், துவரைப் பருப்பு சாறும் கொடுத்தால் நல்ல சுரம் விடும். இதுக்கு பத்தியம்.

இங்குலிக மாத்திரை பண்ணும் வகை:-

இங்கிலிகம் விராகனெடை.ச, சுக்கு விராகனெடை.ரு, அபினி விராகனெடை.உ, வெண்காரம் விராகனெடை.க, இது வெல்லாம் கல்வத்திலிட்டு முலைப் பால் வார்த்து அரைத்து சோளம் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு செவிட்டு வாத சுரத்துக்கு அதிசார சுரத்துக்கு அனுபானம் பண்ணி விசேஷத்தில் அறிந்து கொடுக்கவும்.

சன்னி பாத சுரத்துக்கு மாத்திரை பண்ணும் வகை:-

நாக சிங்கு ரசம், ரச கெந்தகம், சாதிலிங்கம், அப்பிரகம், நாபி அரிதாரம், இதுகளெல்லாம் சம பாகங் கூட்டிச் செருப்படைச் சாற்றிலரைத்து மக்குட புடம் வைத்து பிறகு ஆமை பிச்சு பன்றி பிச்சு மீன் பிச்சு இது மூன்று வகையும் போட்டு மூன்று நாளரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி அநுபான விசேஷத்தில் கொடுக்கவும். பத்தியம் தயிரும் சோறும் போடவும்.

ராமபாண உருண்டை பண்ணும் வகை:-

சாதிலிங்கம் அரிதாரம் துத்த வெள்ளைப் பாஷாணம் மூன்று பாகம் சாறு இலை [illegible]க அரைத்து பயறு போல உருண்டை செய்து மோரில் இரண்டு உருண்டை இட [illegible] நாளு மப்படியே நடு ராமுங் குளிருஞ் சுரம் தீரும். நாலா மாறல் விட்டசுரம்.

[illegible] ராமபாணம் இதே.

[illegible] நாராயண ரச மாத்திரை:-

ரசம், நாபி, கெந்தகம், சாதிலிங்கம்; கருகுரோகணி இதுகளை சமபாகங் கூட்டி ~~[illegible]~~ அலரி வித்து கய்யாந்தகரை சத்திலே ஒரு நாளரைத்து குன்று மணி பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சி ரசத்தில் கொடுக்க தோஷ சுரம் சன்னி பாத சுரம் நிற்கும்.

ஆனந்த பயிரவன் மாத்திரை:-

நாபி, சூதம், மனோசிலை, கெந்தகம், சாதிலிங்கம், வெங்காரமிவை சமன் நீலிப் பழம் சாத்திலரைத்திட யோக ஆனந்தபயிரவனாகுமே.

கால பயிரவன் மாத்திரை:-

சுத்தி பண்ணிய ரசம் பெருங்காயம்சமுத்திராப்பழ சரம், எவாச்சாரம், சுக்கு, திப்பிலி, மிளகு, கெந்தகம், சமுத்திர லவணம், சவர் லவணம், விடாலவணம், சயிந்த லவணம், சித்திர மூலம் காஞ்சோரிவேர் எருக்கம் வேர்ப் பட்டை, நரி வெங்காயம் காட்டுக் கொம்மட்டிக்காய் இவைகளெல்லாம் கொண்டு வந்து சம பாகங் கூட்டி எருக்கம் வேர் கஷாயத்தில் மூன்று நாள் நாளரைத்து வச்சிர குகையிலிட்டு டோலாந்திரத்தில் எரிய விட்டு எடுத்து நாய் பிச்சுயில் மத்திச்சு குன்றி மணி பிரமாணம் உருண்டை செய்து சன்னி பதிமூன்றுக்கும் இளநீரில் கொடுக்கவும். பத்தியம் தயிரும் சோறும். போடவும்.

மதன பயிரவன் மாத்திரை:-

நாபி விராகனெடை.உ, சாதிலிங்கம் விராகனெடை.ங, மிளகு விராகனெடை.ங, திப்பிலி விராகனெடை.ங, கெந்தகம் விராகனெடை.ங, இவைகளெல்லாம் கொண்டு வந்து எலுமிச்சம் பழஞ் சாத்தில் இரண்டு நாளரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொள்ளவும்.

வலிப்புக்கு சங்கார பயிரவன் மாத்திரை பண்ணும் வகை:-

பொரிச்ச வெங்காரம், ரசம், கெந்தகம், லோக பற்பம், தாம்பிரபற்பம், காரீய பற்பம், அரிதாரம் இவையெல்லாம் சம பாகங் கூட்டி இஞ்சி சாத்திலரைத்து குன்றி மணி பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொள்ளவும்.

வலிப்பு சேஷ்டைக்கு மருந்து பண்ணும் வகை:-

முள்ளி, கண்டை சாறு படி. ½ புளியிலைச் சாறு படி ½ எருக்கம் பால் படி ¾ வருத்த முத்து எண்ணெ படி ½ வெள்ளைப் பூண்டு தயிலம் படி சாறு வகை எருக்கம் பால் இவை இரண்டும் விளக்கெண்ணெயில் விட்டு எண்ணெ திரண்ட பக்குவத்தில் வெள்ளைப் பூண்டு தயிலம் விட்டு இவை வெல்லாம் காய்ச்ச பக்குவத்தில் இறக்கவும். இதுக்கு தீரும் வியாதி முயல் வலிப்பு, காக்கா வலிப்பு, பாலகிரி தளர் வாய்வு, இவைகளுக்கெல்லாம் இந்த எண்ணெயை கொடுத்தால் தீரும். அப்பால் இந்த எண்ணெயை மூன்று நாளைக்கு நசியம் விடவும். உள்ளுக்கு மூன்று காசெடை எண்ணெ சாப்பிடவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். மறு பத்தியம் ஏழு நாளிருக்கவும். உப்பு வறுத்து கூட்டவும். ஏழாம் நாள் பத்தியத்தை முறிக்கவும். இப்படி இரண்டு முறை பண்ணவும்.

விரை வாதத்துக்கு.

எலுமிச்சங்காய் கிச்சிலிக்காய் -- த்த அந்தப் பழத்திலடைத்து கருசிலங் கண்ணி சாத்திலே வேக வைத்து தின காலம் ஒரு பழந் தின்னவும். முருங்கைக்காய் முருங்கையிலை, மிளகு கூட்டவும். உப்பிலி பிடிக்கவும். Incomplete

விரை வாதத்துக்கு:-

சங்கிலை, வெள்ளைப் பூண்டு, மிளகு, சுக்கு இவை வகைக்கு பலம்.ல, விழுக் காடு கூட்டி எருமைத் தயிர் கலந்து கொடுக்கவும். கையில் பெருவிரலடியில் காய் இது கொண்டு கையிலேயும் அறிவிக்கவும். குணமாகும். இது கை கண்டது.

not clear

மகோதரத்துக்கு:-

கடுகுரோகணி விராகனெடை.க 6, வளையலுப்பு விராகனெடை 3, இந்துப்பு விராகனெடை.ஙு, சயிந்த லவணம் விராகனெடை.ஙு, பிடாலவணம் விராகனெடை.ஙு, பொட்டிலுப்பு விராகனெடை.ஙு, திப்பிலி துட்டெடை.க, கோசாவரம் துட்டெடை.க, மிளகு துட்டெடை.க, வாய் விளங்கம் துட்டெடை.க, தாளிச பத்திரி துட்டெடை.க, கருஞ்சீரகம் துட்டெடை.க, சீரகந் துட்டெடை.க, ஓமம் துட்டெடை.க, கசகசா துட்டெடை.க, சன்ன லவங்கப் பட்டை துட்டெடை.க, பெரிய லவங்கப் பட்டை துட்டெடை.க, சுக்கு துட்டெடை.க, கம்பளத்தகம் துட்டெடை.க, நாட்டு வருத்த சிட்டங் கல் பலம்.க, இது வெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு வேளைக்கு .உ, விராகனெடை சூரணங் கொண்டால் குணமாகும். இந்த முறைக்கு ஒரு மண்டலம் சாப்பிட்டுக் கொண்டு வரவும். இதில் மகோதரம் நீர்க்கோவை, அருளை இது வெல்லாந் தீரும். இச்சாபத்தியம். கை கண்டது:

தந்த வாய்வுக்கு எண்ணை பண்ணுதல்:-

மயில்துத்தம் துட்டெடை.வ, ஒங்கால் பச்சை துட்டெடை.½ முருதார சிங்கு துட்டெடை.½ சித்திர மூலம் பட்டை ½, மரோசிலே துட்டெடை.½ பொன்னரி தாரம் துட்டெடை.வ, ரசகற்பூரம் துட்டெடை.½ சருள் பட்டை காசு கட்டி வெப்பாலம் பட்டை, வெள்ளை குங்கிலியம், பறங்கிப் பட்டை, கஸ்தூரி மஞ்சள், துட்டெடை.வ, கல்நாரு துட்டெடை.வ, இது வெல்லாங் கொண்டு வந்து பொடி பண்ணி ஒரு சேர் தேங்காயெண்ணெயிலே போட்டு காய்ச்சி வைத்துக் கொண்டு சகல புண்ணு வியாதிகளுக்கும் ஆகும். குணமாகும்.

இழுப்புக்கு, வாதத்துக்கு தயிலம் பண்ணுகிறது:-

வேப்பெண்ணை படி.க, எருக்கம் பால் படி.½ வெள்ளாட்டுப் பால் படி.க, புளியிலைச் சார் படி.க, நொச்சியிலைச் சார் படி.½ வெள்ளைப் பூண்டு பலம்.½ கடல் நுரை பலம்.க, கடுகு பலம்.½ வசம்பு பலம் ½ தனியா பலம் ½ கடல் நுரை பலம்.க, கடுகு பலம் ½ வசம்பு பலம் ½ அரைச்சுக் கொண்டு எண்ணை சாறு எல்லாம் கூட்டி தயிலம் வடிக் கட்டிக் கொண்டு பிடியாக்கவும் குணமாம். ~~தீரும்~~.

வாய்வு ரோகத்துக்கு:-

கருஞ்சீரகம் பலம்.க, கடுக்காய் பலம்.க, சுக்கு பலம்.க, இந்துப்பு பலம்.க, இக வகை ஐந்தும் இடித்து சூரணம் பண்ணிக் கொடுத்தால் வாய்வு ரோகம் தீரும். இது கை கண்டது.

தலை புழுவெட்டுக்கு, கண்ணுக்கு மருந்து பண்ணும் வகை:-

எருக்கம் பூ கொண்டு வந்து ஒரு பல்லாவிலே போட்டு அடைச்சுக் கீழே குழி வெட்டி அந்தக் குழியிலே வைத்து அதின் மேலே ஒரு ஓட்டை மூடி அதன் மேலே மூட்டை அடுக்கி புடமாக வைத்து அத்தை காலம்பற எடுத்து பார்த்தால் சுசங்கியிருக்கும். அதிலே கூட உள்ளியும் வசம்பும் கருக்கிப் போட்டு அத்தைக் கலந்து சாயங்காலம் தலைக்கு தேய்ச்சு கண்ணிலே விழாமல் நெத்தி மட்டுக்கும் துணியால் கட்டி ராத்திரி காலத்திலே கண்ணிலே விழுகாமல் சாக்கிரதையாயிருக்க விட்டு விடிஞ்ச போது துணியை அவிழ்த்துப் போட்டு சற்று நேரம் ஆற விட்டு குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம் பண்ணவும். இப்படி மூன்று நாளைக்கு இதே பிரகாரம் தண்ணீரிலே முழுகி வந்தால் புழு வெட்டை மண்டை இடைச்சல் மண்டை வலி குணமாகும். இது கை கண்டது.

கிறுகிக்கு மருந்து:- இலவம் பிசினும் காசுக் கட்டி, சுக்கு, மிளகு, ஓமம் மாதளம் பிஞ்சு,

வறள். புளா கொழுந்து ஒரு வகை எட்டும் எலுமிச்சம் பழம் சாத்தில் அரைத்து கொடுக்க கிறுனி நிற்கும். குணமாகும். கை கண்டது.

<u>கபால சூலை, கபால வாய்வு, கபால பீனிசத்திற்கு மருந்து பண்ணும் வகை</u>:-

பறங்கி பட்டை நல் கெட்டை பட்டையாய் நாலு சேர் கொண்டு வந்து மேல் புறணி போக தேய்ச்சுப் போட்டு பாக்கு வெட்டியாலே சின்ன சின்னதாக சீவல் பாக்கு போலே வெட்டி முசுமுசுக்கைத் தழை சமூலமும் ஒரு அளவு கொண்டு வந்து உரலிலே போட்டுத் துவைச்சு அந்த சாறு பிழிஞ்சு கொண்டு இந்த நறுக்கின பட்டை எல்லாம் ~~சாந~~ அந்த சாத்திலே போட்டு நனையத் தக்கதாக நன்றாய் பிசறி எடுத்து நிழலிலே உலர்த்தி வெள்ளைக் குங்கிலியம் நல்ல பச்சை வெட்டாக ஒரு சேர் வாங்கி வந்து அம்மியிலே அரைத்து பொடி பண்ணி புது சால் கொண்டு வந்து ஞாயிற்றுக் கிழமை அன்றைக்கு அந்த புது சாலிலே இந்தக் குங்கிலியம் பொடியைக் கொட்டி மேலே இந்தப் பட்டையை கொட்டி அதின் மேலே லவங்கக்கைப் பொடி பண்ணி தூவி மேலே வாய் மட்டத்துக்கு சரியான புதுச் சட்டியை மேலே மூடி சுத்திரம் சாணியாலே புகைச்சலில்லாமல் நன்றாய் ச[illegible]ச்சு 25 வேறே புறம்பாக அடுப்பு பண்ணி அந்த அடுப்பு எரிச்சு அடுப்பு எரியறதுக்கு மூங்கிலே தடப்பசுப்பி போலே பிளந்து ஒரு பிடி மட்டாய் எடுத்துக் கொண்டு சாலின் கீழே நன்றாய் எரி விட்டு விளக்கு போலே மட்டா எரி விட்டு அடுப்பிலே தானே அன்றைக்கு இறக்கி விட்டு மத்த நாள் காலமே எடுத்து வாசனையை அவிழ்த்து பட்டை எல்லாம் கொட்டிக் கொண்டு புதுக் குடுவையிலே போட்டு மேலே வாசனை கட்டிக் கொண்டு திலவரைக்கும் காலையிலே துட்டெடை சாயங்காலம் துட்டெடை மென்று தின்னவும். வெந்நீரிலே வாய் கொப்பளிச்சு முழுங்கவும். இந்தப் படிக்கு ஒரு மண்டலம் நாற்பது நாள் சாப்பிடவும். இந்தப் படிக்கு கூட்டா விட்டால் இதிலே பாதிக்கு சரியாய் மருந்து கொண்டு ~~ந்த ந்த~~ வந்து இந்தப் படிக்கு அநுபானம் பண்ணிக் கொண்டு அரை மண்டலம் இருபது நாள் கூட்டவும் குணமாகும். இதுக்கு பத்தியம் புளிப்பு விடவும். துவரைப் பருப்பும் பசுவின் நெய்யும் விடாது சாப்பிட்டுக் கொண்டு வரவும். தலைமுழுக்கு நெய் தேய்ச்சுக் கொண்டு முழுகவும். விடாது வெந்நீர் வார்த்துக் கொள்ளவும். புகை விட்டு விடவும்.

<u>சுரத்தின் மேல் அதிசாரக் கழிச்சலுக்கு</u>:-

ஊசியிலை பிடி, கஞ்சாங் கோரை பிடி, இவ இரண்டு வகையும் சட்டியிலே போட்டு பதமாக கருக்கி அதிலே உரி தண்ணீர் வார்த்து உழக்கு தண்ணீராக காய்ச்சி இறுத்துக் குடிக்கவும். கழிச்சல் நிற்கும். குணமாம். கை கண்டது.

<u>உஷ்ண வாய்வு, வயிறு உப்புறது, வாதுறது, சோத்து மேலே கெட்டறது இல்லாத பெருக்கு மருந்து</u>:

கெந்தகம் பலம். க, மிளகு பலம். 1/2, ~~[illegible]~~ , திப்பிலி பலம். 1/2 கடுக்காய் பலம் 1/2, தானிக்காய் பலம். 1/2, நெல்லிக்காய் பலம். 1/2, வாய் விளங்கம் பலம். 1/2, சித்திர மூலம் பலம். 1/2, மூலம் பலம். 1/2 லவங்கப் பத்திரி பலம். 1/2 ஏலம் பலம். 1/2, லவங்கம் பலம். 1/2, லவங்கப் பட்டை பலம். 1/2, சாதிக்காய் பலம். 1/2, சிறுநாகப்பூ பலம். 1/2, தக்கோலம் பலம். 1/2, கொத்தமல்லி பலம். 1/2, அதிமதுரம் பலம். 1/2 சிறுகுறிஞ்சா பலம். 1/2, பேய்ப்புடல் பலம் சடாமாங்கிஉடம் பலம். 1/2, முந்திரி பழம் பலம். 1/2 , தேக்கம் பழம் பலம். 1/2, குகை நீர் பலம். 1/2, வெட்டி வேர் பலம். 1/2 , விலாமிச்சம் வேர் பலம். 1/2

முக்கக் காசு பலம். ½, செங்கல நீர் பலம். ½, விலாமிச்சம் வேர் பலம். ½ இந்த வகை மருந்துகளை யெல்லாம் சமஞ்சு கூட்டி இடித்து வஸ்திர காயம் பண்ணி தேனில் கொள்ளவும். சகல வியாதிகளும் தீரும். குணமாம். கை கண்டது. ~~விருப்பகன் சாக்ஷியாய் பலிதமாம். இது அறியவும். மயேஸ்வரி உபதேசமுண்டாகவும்~~.

<u>தீபனத்துக்கு அஷ்ட சூரணம் பண்ணுதல்</u>:-

சீரகம், கருஞ்சீரகம், மிளகு, திப்பிலி, இந்துப்பு, சுக்கு, ஓமம், பெருங்காயம், ஆக வகை எட்டும் சமஞ்சு கூட்டி இடிச்சு வஸ்திர காயம் பண்ணி இள வெந்நீரில் கொடுக்கவும். தீபனமுண்டாகும். இது கை கண்டது.

<u>வாய்வுக்கு வாய்வுடனே கெந்தரோகத்துக்கு பஞ்ச வகை வாய்வுக்கும் சூரணம் பண்ணும் வகை</u>:-

திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், சித்திர மூலம், சுக்கு, கல்லுப்பு, இந்துப்பு, சயிந்த லவணம், சீரகம், ஓமம், நவச்சாரம், சமுத்திராச்சம், மிளகு, பெருங்காயம், இது வெல்லாம் சம பாகம் கூட்டி இடிச்சு வஸ்திர காயம் பண்ணி மாதளங் கொம்பு கொண்டு வந்து இடிச்சு சூரணத்திலே பிழிந்து நிழலிலே உலர்த்தி தினமே காலம் மூன்று விரல் பிரமாணம் கொள்ளவும். இதுக்கு பத்தியம் கெலிப்பு பண்டமாகாது. கை கண்டது. குணமாம். இதை அறியவும்.

<u>இருமலுக்கு மருந்து பண்ணும் வகை</u>:-

தேத்தாங் கொட்டை விராகனெடை. க, திப்பிலி விராகனெடை. க, ஆவாரம் பூ விராகனெடை. க, ஆக வகை மூன்றிலே திப்பிலியை வறுத்துக் கொண்டு சம பாகம் அரைச்சு ~~..~~ நாள் பண்ணி வைத்துக் கொண்டு காலமே அந்திப் பொழுது தேன் விட்டு குழப்பி சாப்பிடவும். இருமல் குணமாகும். இது கை கண்டது. இதை அறியவும். பிரமாணம்.

<u>நாம பாஷாணம் பண்ணும் வகை</u>:-

சகல ரோகத்துக்கும் மாத்திரை பண்ணுவது என்று அறியவும். சுக்கு, திப்பிலி, மிளகு, கடுகுரோகணி, இந்துப்பு, வெண் காரம், நெல்லிப் பருப்பு, அதிமதுரம், அக்கராக் காரம், அன்ன பேதி, கடுக்காய், நெல்லிக்காய், கெந்தகம், தானிக்காய், சாதிலிங்கம், நாபி தாளகம், துரிசி, துத்தம், கெவுரி, கொட்டி வெள்ளை ஆக சரக்கு உக, வகைக்கு விராகனெடை. க, இது வெல்லாம் வாங்கி வைத்துக் கொண்டு நேர்வாளம் விராகனெடை. ய, வாங்கி வைத்துக் கொண்டு நாபி சுத்தி பண்ணுகிறது. வெள்ளாட்டுக் கோமியம் ஒரு படி கொண்டு வந்து நாபியைக் கத்தரிச்சு கொண்ணூறு நாழிகை ஊறப் போட்டு எடுத்து நிழலிலே உலர்த்தி சூரிய புடமாக வைத்து வேண்டிய மருந்துகளுக்கு கூட்டிக் கொள்ளலாம்.

<u>கெந்தகம் சுத்தி</u>:-

நெல்லிக்காய், கெந்தகம் வாங்கி வந்து கறண்டியிலே நெய்யை வார்த்து அதிலே போட்டு பக்குவமாய்க் காய்ச்சி எடுத்துக் கொண்டு வேண்டு மென்ற மருந்துகளுக்கு சேர்த்துக் கொள்ளலாம்.

<u>துத்தம் துரிசி இது இரண்டும் சுத்தி பண்ணுகிறது</u>:- தணியிலே சுத்தி புடத்துக்கு வைத்து வேண்டுமென்றிக மருந்துகளுக்கு சேர்த்துக் கொள்ளலாம்.

<u>வெள்ளை, கொட்டி தாளக்கம் இது மூன்றும் சுத்தி பண்ணுகிறது</u>:- சுண்ணாம்பு கல்லு ஒரு படி

கொண்டு வந்த பானையிலே போட்டு தண்ணீர் வார்த்து இந்த மூன்று வகையும் முடிச்சாய்க் கட்டி இந்த முடிச்சு மூன்று மூங்கில் கொம்புலே ஒரு கருப்பு சீலி அதிலே கட்டி அந்த தண்ணீர் முகந்து கொண்டு இருக்கிறப் போலே பக்குவமாய் வைத்து மேலே ஆவி போக விடாமல் ராத்திக்காலத்திலே போட்டு கையாந்தகரைச் சாறு விட்டு மூன்று நாளரைத்து நொச்சி சாறு விட்டு மூன்று நாளரைத்து இந்த முறைக்கு நிலவைசை சாறு கள் விட்டுக் கல்வத்தில் அரைக்கிறது. விடாமல் கை முறையால். உக, நாளில்விடாமலரைச்சு பின்பு உளுந்து பிரமாணம் மாத்திரை பண்ணி நிழலிலே உலர மட்டுக்கும் பரணியிலே எடுத்து வைத்துக் கொள்ளவும். இது ராமபாண மாத்திரை என்றறியவும். இதில் தீரும் வியாதி பலத்த சன்னி பதி மூன்று வகையுந் தீரும். இதுக்கு அநுபானமறிந்து வைக்கவும்.

சங்கம் வேர், கைதா வேர், ஆடாதோடை முத்துசுக்கை, விஷ்ணு கிரந்தி, வெட்டி வேர், விழல் வேர், கோரைக் கிழங்கு, கொத்தமல்லி, சீரகம் இவ்வகை எல்லாம் சமனாகங் கூட்டி கசாயம் வைத்து அதிலே ஒரு மாத்திரை வைத்து கொடுத்தால் தீரு- திலே பதிமூன்று வகை சன்னியுந் தீரும். பின்னைகளுக்கு எட்டு வகை மாந்திக்கு விளக்கெண்ணெயு முலைப் பாலும் சேர்த்து ஒரு குளிகை உரைச்சுக் கொடுத்தால் எட்டு வகை மாந்தையுந் தீரும்.

வீக்கங்களுக்கும் சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், இந்த வகை. ம் சூரணம் பண்ணி நெருஞ்சி நீர் முள்ளி நாவுரி சோகைகொடி சீரை, இந்த வரை ஐந்துங் கூட்டி கசாயம் வைத்து சூரணம் அதிலே போட்டு ஒரு குளிகை மாத்திரை உரைச்சுக் கொடுத்தால் சகல வீக்கமும் போகும். உடல் வாதத்துக்கு பழைய பனை வெல்லம் பானகம் பண்ணி மாத்திரை வைத்துக் கொடுத்தால் குணமாகும்.

சுரைக்கு எண்ணெயிலே ஒரு மாத்திரையை உரைச்சு கண்ணில் கலிக்கம் போட்டால் எட்டு வகை காசமும் போகும்.

விஷத்துக்கு கருப்பு வெத்திலை சாறு விட்டு மாத்திரை வைத்து கொடுக்கவும். கண்ணுக்கு அதிலே கலிக்கம் போடவும். விஷந் தீரும். குணமாம். பின்றி சிறுமுன்னி சிவந்தமரக வாய்வும், தனுர் வாய்வு; பிறவிய சன்னி இந்த வியாதி ஐந்துக்கும் வேப்பமேனி கொண்டு வந்து ஓட்டிலே போட்டு வதக்கிச் சாறு பிழிந்சு கொண்டு மாத்திரை வைத்துக் கொடுத்தால் குணமாம். ஒரு தலை நோவுக்கு நொச்சி சாத்தில் கால் மாத்தி உரைத்து நசியம் விடவும். பின் சுவரைக்கருக்கெல்லாம் கரு நொச்சி கஸ்தூரி மஞ்சள், பசு நெய்யதிலே மாத்திரை வைத்து இழைச்சு காய்ச்சி மூக்கிலே விட்டால் பிணிசு எல்லாந் தீரும். பித்த சுரங்களுக்கு எலுமிச்சம் பழத் சாத்தில் கொடுக்க குணமாம். பித்த விகாரத்துக்கு புளியிலைச் சாத்திலேமாத்திரை வைத்துக் கொடுத்தால் குணமாகும்.

தாடை புத்த பல்லுக் குருப்பு இசகளுக்கு அக்கரகாரம் பொடி பண்ணி அதிலே மாத்திரை உரைச்சு தடவினால் குணமாகும். வெ

வெகு மூத்திரத்துக்கு:-

பாகல் சாத்தில் கொடுப்பது. வெள்ளருகு சூரணம் பண்ணி பழைய பனை வெல்லங் கலந்து மாத்திரை வைத்து கொடுக்கவும். மூலம் யாவத்துக்கும் நாகப் பட்டை இடிச்சு வெள்ளாட்டுப் பால் விட்டு பிழிந்சு மாத்திரை வைத்து கால் மண்டலம் சாப்பிட குணமாகும்.

உள் காச்சலுக்கு பசு நெய்யிலே வைக்கவும். இரத்த கழிச்சலுக்கு பசு நெய்யிலே கொடுப்பது. மேகத்திலே எட்டு வகை கடிக்கும் வேப்பிலை சாத்திலே ஒரு மண்டலம்

மாத்திரை வைத்தால் குணமாகும். கருங் குட்டத்துக்கு குதிரை ஓமம் வைத்து அதில் மாத்திரை வைக்கவும். வெள்ளைக் குட்டத்துக்கு கெந்தகம் நெய்யிலே காய்ச்சி மாத்திரை வைத்துக் கொடுக்கவும். எட்டு வகை குன்மத்துக்கும் துளசி சாறு விழுதிச் சாறு இதிலே வைத்துக் கொடுக்கவும்.

<u>பிறவிப்பு ஒரு காலி சுப்புக்கு மருந்து</u>:-

கொடி கள்ளி பழுப்பு கொண்டு வந்து வறுகு வைக்கல் போட்டு வாட்டி உரலிலே தவைச்சு புளிச்சு கொண்டு கால் படி சாறு அளந்து அதிலே ஒரு மாத்திரை இழைச்சு கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். உப்பு, புளியாகாது. மூன்று நாள் மறு பத்தியம். ஏழு நாள் உப்பு வைத்துக் கூட்டவும். ஒன்பதா நாளைக்கு எல்லாம் கூட்டிக் கொள்ளலாம். இந்த மாத்திரையில் தீரும் வியாதி சர்வ வியாதியுந் தீரும். ~~[illegible]~~

நிகண்டு

<u>வாகடநிகண்டு</u>:-

வடு வடக்கியாவது-கோடகசாலை, புடங்கு நாரியாவது ஆடாதோடை, பேய்த்தலமாவது-பேய்ச் சுமட்டி. பெரும்பையாவது-பேய்மிரட்டி, வாத மடக்கியாவது கழுதாழை. தைப்படக்கியாவது.எருமுட்டை. பீருறியாவது-நெட்டை பேற்முட்டை அறக்கொடியாவது கம்பருத்தம். சிறுதேக்காவது-கண்டு பறங்கி. அசமோதாகமாவது-ஓமம். நேருகமாவது-கருப்பு கொத்துமல்லி. கற்கடசிங்கியாவது-கடுக்காய். பூவேலி பருத்தியாவது-உத்தாமணி. விருவேலியாவது-நரிவேலிச் செடி, கொடி வேலியாவது-சித்திரமூலம். அச்சிர வல்லி யென்றும் பேர். நீலிச் செடி-அவுரி. சூதமாவது-ரசம். மரிச்மாவது-மிளகு. இட்டரம்மாவது-பெருந்தும்பை, பாதாள மூலிகையாவது-ஆடு தின்னாப் பாளை, கோறக்கர் மூலிகையாவது-கஞ்சா. நிலவரமாவது-நத்தி, நாகபாம்பு குடகை நீலவது-காட்டெருமை பால். கச்சோலமாவது-கஸ்தூரி மஞ்சள். கொமரியாவது-கத்தாளைச் செடி. சங்குஷ்ட மாவது-குளைபுட்டை. போக்ரலது-காட்டுப் பெருசு. வட்டத் திருப்பியாவது-பொன்முசுட்டை. பங்கம் பாளையாவது விஷபத்திரி என்றும் பேர். பூத விருஷமாவது-பெருமரம், மகா நிம்பமாவது-பெருமரம், நீர் வள வள்ளியாவது-மகாசாறணை, கள்ளி மிட்டான் கிழங்கு. சத்திர பெருமாவது-கடல் நுரை. வங்கறமாவது-மியம். அப்பிரகமாவது-காக்காய் பொன்னு, ஆகாச தளியாவது-ஓட்டடை. ஜீசோதியாவது-சதுர கள்ளி யாவதின் கீழே முங்கல் வானங் கிழங்கு. அது எப்படி இருக்கு மென்றால் ஒரு விரல் பருமத்தில் சாண் உயரம் வளர்ந்து கனிருக்கும். போலே நுனி இருக்கும். நாயைக் கொன்றுவது நரிசு, சிலை மேல் காளா னென்றும் வாழைச் செடி யென்றும் பேர். விசுவாசியாவது-சாபதுரி கொலமுறசு சக்கையாவது*குடசப் பாலை. முத்தெருத்தின் செவியாவது-நின் கடம்பு. முத்தக் காசாவது-கோரைக் கிழங்கு. சூரிய காந்தமாவது-வெள்ளை விஷ்ணு. காந்தமாவது-தாமரை தாமரை. குண்டலாதியாவது-சங்கு. அமுர் வல்லி யாவது-சூர்க்கிக் கொடி. கையாந்த கரையாவது-கரிசலாங் கண்ணி. பிள்ளையார் பாதமாவது-கரிசலாங் கண்ணு. பிசங்கியாவதும்-பாங்கி கடையாவது. செண்பகம் யாவாவது-சிவதை. முருபாலை யாவது-கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் என்றும் பேர். திரிகடுகு நாய் சுழு வெள்ளைக் கடுகு, குன்றியாவது குன்டுமணி, வெடு கடியாவது-பூனை காலியாவது-பூனை காத்சோறி, லோகமாவது- பலைப்பமாவது-இரும்பு, பாம்புக்கு பேர். தெசகறமாவது-நருக்கு திப்பிலி, அயிலேகியாவது-முசுமுசுக்கை. மாவது தும் பேருவு வெள்ளி. இரு எரிவாவது புலி. ஏனமாவது-பன்னி. சம்புறமாவது எலுமிச்சங்காய். வள்ளியாவது-வெள்ளைப் பூண்டு. புடிகாரமாவது-லவங்கம்.

கஸ்தூரிமாவது-பேரீச்சம் பழம். திவ்விதாஉஷ்டியாவது-கொட்டை முந்திரிப் பழம்.
விந்துவைப்பால் -பெருங்காயம். தாம்பிர மாவது-செம்பு, காத்தொட்டியாவது-நத்தை
பேய் மிரட்டி. செவ்கன் பேருவது-சிவனார் வேம்பு. பார்ப்பார கோஷ்டமாவது-
வெண்கோஷ்டம். விசி விரிங்கியாவது-பேய்முட்டி. அல்ல கெந்தியாவது-வாலுகியானை
அமுக்கிரங் கிழங்கு. குருந் தொட்டியாவது பெருங்காஞ் சொறி, வில்வமாவது; கவிர
மாவது, சிவங்கமாவது வில்வத்தின் பேர். வீரபாங்கமாவது குருத்தளரியாவது, ஏ ப
மாவது எளசி மாவேலாவது, தாமரை விளையம். அரசது மெள்பது அரச மரம்.
அருக குரணமாவது-வெள்வேலம் பட்டை. நாகரசமாவது-சுக்கு, தார்க் கோழி
யாவது-காரைச் செடி. யிந்திர வல்லியாவது-முடக் கொத்தான் பில்ல பஞ்சமாவது-
எலிப் பயறு. முச்செருத்தின் செவியாவது-நாய்க்குக்காலதம், உலக் கன்னி, மலையிலே
யாவது-காட்டுக் கொடி, பாதாள அத்திர மாவது-ஆரு பில்லு, அவையார் கூலச்
செடி யாவது சத்திக் கிழங்கு, பேய் சீரகமாவது-காட்டு சீரகம். நாராவதும். பொன்
னி முள்ளையாவதும் கல்லுப்புக்கு பேர், கருங்குறவையாவது-கருப்பு மலக்கத்தை.
நெல்லரிசி காசரியமாவது-பெருஞ்சீரகம். நாயது பண்டாவது சூரிய காந்தம், மாங்கி
உடி மாவது சடா மாங்கிஉதம். யீரப் பிலியாவது மயில்மாணிக்கம். கார்த்திகைகிழங்
காவது-சிவனார் கிழங்கு, தலப்பைக் கிழங்கு-காட்டா மணக்கு இவை மூன்று பேர்.
பதிரை வாலாவது-ஊமி. குதிரை வாலிச்சிரமாவது-கிச்சிலிக் கிழங்கு, நரி பாணமாவது
பொட்டுருப்பு. லவணமாவது-உப்பு, விமனக் கோஷ்டம், சர்ப்பசக்கமாவது-முரிச்
செடி. சண்டரு சல்லியாவது-படப்ப காவட்டம். புல்லு ஆவது-திலைப் புல்லு. பூமி
சர்க்கரையாவது-நிலப் பசினி. கச்சாவாவது. ஆபிலிகிரை. சாக்காரமாவது படிக்
காரம். வெள்ளி லோத்திரமாவதும். சிலசிறட்டையாவது. கொட்டங்கச்சி கொட்டை
பாசியாவது-ஆகாச தாமரை, புல்லகண்டாவது கரடிக்கு ஐந் பேர். ரக்த மண்டலி
யாவது-கழுதைதும்பை. சூரிய மண்டலியாவது-மத்தையாவதும் ஊமத்தைச் செடி. விரா
மிச்சமாவது-வெட்டி வேர். சுக விருஉச்சமாவது மாமரம். சடிலமாவது-சம்பு. சீரி
மல்லியாவது வெப்பாலை. பூரணவியாவது சாறு வேளை, அல்லன் செடியாவது நன்டு
காலன் செடி. கூலே மாள் கள்ளியாவதும் அகோர வேலியாவதும், திருகு கள்ளியாவ
து-பாலாவதும். அத்திப் பால்-குவிருதவது. யாகளைச் செடி கான குதிரை
யாவது-காட்டு மாம்பட்டை. இரு சீரகமாவது-நற்சீரகம், கருஞ்சீரகம். திரிசாக
மாவது-ஏலம், லவங்கம், லவங்கப் பட்டை, சி மூலமாவது-திப்பிலி மூலம். பெருஞ்
சுருட்டையாவது-பெரு குறிஞ்சான் கழுஞ்சாவது உ விராகனை. விரட்டியாவது எரு முட்
முட்டை கல்லாவது ஊசி பிடுங்கிர காந்தக் கல்.

சுடுதியில் பிள்ளை பிறக்க மருந்து:-

பேய்க் கரும்பு சாறு நீருடன் கலந்து கொடுக்கப் பிறக்கும். நெருப்பு விரா
கள் பொடி செய்து எலுமிச்சம் அரைப் படியில் கலந்து கொடுக்க.

கெற்பத்தின் மேல் காக்கலுக்கு:-

சீரகம், கருஞ்சீரகம், ஏலம், அருகன் கொழுந்து, கருப்பு கட்டியில் அரைத்து
நெய்யில் 5 நாள் கொடுக்க.

குலை எரிஞ்சால்:-

மிளகு, தக்காளி, வாய் விளங்கம், திப்பிலி இவை அரைத்துக் கொடுக்க.
சாறனை மிளகு, அரைத்து உருட்டி 3 நாள் கொடுக்க.

கல்லேறுக்கு:- முடக் கொத்தான் விரை, மிளகு, அத்தி, விதை அரைத்து உருண்டை செய்து, தோஷத்துக்கு, சளிக்கு, அமரத்துக்கு, முலைப்பால், கல்லேறுக்கு எருக்கம் பால் உஷ்ணத்துக்கு உரிய காந்தி இலை நிழலிலுலர்த்தி சரி சீரகம் கலந்து சூரணம் கட்ட சந்தனம் சர்க்கரை பசுவின் நெய் அந்தி சந்தி சாப்பிட இச்சா பத்தியம்.

சூலை சுத்தி வருகிறதுக்கு:-

வில்வ வேர், வில்வ பழம், பேய்ப்புடல், பச்சைப் பயறு, சீரகம், நெல்லி பருப்பு, பருத்திக் கொட்டை இது வெல்லாம் கஷாயம் வைத்து அரைப்பலம் சர்க்கரை போட்டு கொடுக்கத் தீரும்.

வயிறு கடுப்புக்கு:-

பெரு மரத்துப் பட்டை புளியங் கொட்டைத் தோல், ஓமம், காசுக்கட்டி, சுக்கு, சாதிக்காய் இது சமனாக சுட்டு பொடி செய்து தேனில் கொடுக்கத் தீரும்.

வெள்ளோக்காளத்துக்கு மருந்து:-

நெல்லுப் பொரி, அதிமதுரம், பருத்தி விரை, இவை அரைத்து சர்க்கரை, தேன் கூட்டி குழப்பி கொடுக்க வெள்ளோக்காளந் தீரும்.

வெள்ளை வெத்திலை நாரு, புளியம் பழத்து நாரு, நெல்ப் பொரி, சர்க்கரை எல்லாம் இவை இள வெந்நீரில் அரைத்து கொடுக்க வாந்தி ஓக்காளந் தீரும்.

வாந்தி ஓக்காளத்துக்கு:-

மெல்லிய சீலைத் துணியை சுட்டுப் பசு வெண்ணெயில் கலந்து எலுமிச்சங் காயளவு கொள்ளத் தீரும்.

கண்ணுக்கு தலை முழுகவே:-

கரியபுடம், பொடுதலை சாறு, வெத்திலை மரிச்சால், பொன்னாங்கண்ணி, கரிசலாங் கண்ணி, விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், பசு நெய் கூட்டி முழுகவும்.

மகா விசயத் தயிலம்:-

பாதரசம், கெந்தகம், தாளகம், மனோசிலை, கோஷ்டம், சயிந்த லவணம், திப்பிலி, நேர்வாளம், மயில் துத்தம், பால் துத்தம், ஆனை திப்பிலி, நவச்சாரம், சத்தியா சாரம், * கொடிவேலி, மிளகு, பூண்டு, பஞ்ச லவணம் ஆக வகை உயக, இது சம பாகங் கூட்டி கல்வத்தில் போட்டு கள்ளிப் பால் வார்த்து அரைக்கவும். எருக்கம் பால் காடி ஊமத்தஞ் சாறு நொச்சி சாத்தில் அரைத்து உருட்டி உலர்த்தி நல்லெண்ணெயில் ஊறவைத்து வேப்பெண்ணெ வார்த்து ஊறவைத்து இருப்புக் கரண்டியிலே அந்தத் திரியை தலை கீழாக கொளுத்தவும். அந்த தயிலம் உடம்புக்கு லேபனம் பண்ணவும். வெத்திலையில் தடவி தின்னக் கொடுக்கவும். இதின் குணம் தலை வெள்ளைப் பட்டை கவனம், குதிவாதம், சிரக தோஷம் பேய் பேச்சு மாருவலி அண்ட வாதம் பாரிச வாய்வு, சிரந்தி ரோகம், உதிர சூலை பெரும் பாடு அஜீரண வாய்வு, மகா வாய்வு, மேக வாய்வு, ஊமை செவிடு தந்த வியாதி திமிர் வாதம் நேத்திர வியாதிசர்வாங்க வாதம், பஞ்சி தோஷம், குளிர் வாய்வு வலிப்பு பிறவலிப்பு, அக்கி சுரங்கள் உஷ்ண குன்மம், பீனிசம், சேர்ப்பன தோஷம்

84 , வாய்வு பயித்தியம், சேத்தும தோஷம், கண்டமாலை, வாய்ப்புத்து அக்கி கனைக்கப் பட்ட சாக்கிஷடை, கெர்ப்ப தோஷம் மருஷர் சூசிகா காந்தி, புத்தியாம் சகல வியாதியுந் தீரும். இது நக கண்டது.

தூதுவேளை கற்பம் :-

நாயறு வாரம் தூதுவேளை சமூலமுங் கொண்டு வந்து உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி புதுக் கலையத்தில் வைத்துக் கொண்டு அரிநமோ தேவ தே நமா வென்று உருவேத்திக் கொண்டு சிவபூசை முடித்துக் கொண்டு வெரு கடிப் பிரமாணம் தேனில் கொள்ள வாதம் பித்தம் சேத்துமமும் அற்று மும்மலமும் அறும். தெய்வ வசியம், லோக வசியம் உண்டு. உடது யிருக்கு சித்தியுண்டு என்று அகஸ்த்திய ருணத்தியது.

கத்தாழை கற்பம் :-

திங்கள் கிழமை கத்தாழை கொண்டு வந்து சமூலமும் உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி ஒரு புதுச் சட்டியிலிட்டு ஓம் சங்கராய நமதே வதாய நம சிரியும் ஐயும் சுவாக ஓம் என்று அந்த சூரணத்தை கை வத்து பிசுக்கிக் கொண்டு உருவேத்தி செபிச்ச காராம் பசு நெய்யில் கொள்ளவும். அந்த மந்திரம் தியானம் பண்ணிக் கொள்ளவும். வசியமுண்டாம். மும்மலமும் அறும். இது சத்திய முடையவராய் தர்ம சிந்தனை யுடையவர்கள் அருந்தபடி என்று அகஸ்தியர் உணர்த்தியது.

மணத்தக்காளி கற்பம் :-

ஆதிவாரம் மணத்தக்காளி சூரிய உதையத்தில் போய் பவதே பவதே என்று மூன்று தரம் செடியை சுத்தி தியானித்து பிடிங்கி வந்து உலத்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி ஓம் கிரியும் ஐயம் மென்று உருவேத்திக் கொண்டு நித்தம் தியான பூசையே பண்ணி முழுகிக் குளித்து குருபாதம் அருச்சித்து தேனிலாவது நெய்யிலாவது கொள்ளவும். சகல சித்தியும் உண்டாம். சர்வ வசியமும் கிடைக்கும். இரண்டு வேளையும் தானம் பண்ணிக் கொள்ளவும். இது அகத்தியர் உணர்த்தியது.

தூதுவேளை கற்பம் :- அஸ்வனி நட்சத்திரத்தில் வெள்ளை தூதுவேளை சமூலங் கொண்டு வந்து உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு புதுக் கலையத்தில் வைத்துக் கொண்டு ஓம் சிவாய பாலக நமசிவாய பாபக என்று தரம் தியானித்துக் கொண்டு திமானம்

. முமுகி. வெருகடிப் பிரமாணம். தேனில். கொள்ளவும். மேல் சுவாசம் காசம் போம் என்று அகஸ்தியர் உணர்த்தியது. என்று அறியவும்.

not useful

குதிரை மசால் கலளம் :-

மிளகு பலம்.க, பூண்டு பலம்.உ, ஓமம் பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, கடுகுரோகணி பலம்.க, சயிந்த லவணம், பிடாலவணம், சுட்டு ஒன்று, பெருங்காயம் விராகனெடை.க, கவள கட்டி பலம்.க, அம்பாஉஷ்டம் பலம்.க, வெங்காரம் பலம்.க, முளகரணைக் கிழங்கு வெள்ளருகு, காட்டு முருங்கைப் பட்டை, ஆடு தின்னாக் கிழங்கு, சம பாகமாய் கட்டி கலளம் போடுவது.

இருமலுக்கு :-

தேத்தாங் கொட்டைப் பழம், கடுக்காய் பலம்.உ, தானிக்காய் பலம்.உ, திப்பிலி பலம்.க, மிளகு பலம்.க, பப்பார முள்ளி பலம்.க, அம்பாஉஷ்சதம் பலம்.க, லவங்கம் ஏலம் விராகனெடை.உ, சங்க வேர் கொண்டு வந்து கசாயம் வைத்து எடுத்துக் கொண்டு இதெல்லாம் சூரணம் பண்ணி கஷாயத்தில் போட்டு தேன் விட்டு லேகியம் பண்ணி மேக காங்கை பேரில் இருமல் கண்ட பேருக்கு கொடுக்க நிற்கும். இதுக்கு பத்தியம் புளி தவிர்க்கவும். தீரும். கை கண்டது.

மற்றொரு வகை :-

ஆடாதோடை, செம்முள்ளி, பொடுதலை, தூதுவளை, கண்டங் கத்திரி, உத்தாமணி, நொச்சியிலை, முருங்கிலை, கறசலாங் கண்ணி, துளசி, சங்கயிலை, தூதுவளை இந்த இலை ஒன்றுக்கு உழக்கு கட்டி நெய் நாழி வார்த்து எரித்து வடித்துக் கொண்டு அதிலே சூரணம் திப்பிலி பலம்.க, தாளிச பத்திரி பலம்.க, இது இரண்டுங் கட்டி பொடி செய்து வடித்த நெய்யில் போட்டு தினமொரு கரண்டி கொள்ள க்ஷயரோகந் தீரும்.

இருமலுக்குத் தேத்தாங் கொட்டை படி.க, உத்தாமணிச் சாற்றில் ஊறப் போட்டு மூன்று நாளுதின வாறெடுத்துக் கொண்டு உலர்த்தி பொன்னிறமாய் வறுத்து இடித்துச் சூரணம் பண்ணி ~~திரி****த****~~ அதுடன் திப்பிலி, சீரகம், வெங்காரம் வகைக்கு பலம் சேர்த்து சரி சர்க்கரை கட்டி தேனில் கொள்ள இருமல் தீரும்.

கண்ணில் பூப்பட்டால் அதற்கு மருந்து :-

தானிக்காய் பருப்பும், சுவித்த லவணமும் அரைத்து குளிகை பண்ணி முலைப் பாலில் உரைத்திட குணமாம். [பூனைக் கால் கற்பம் :- ஞாயிறு, திங்கள் வாரங் கொண்டு வந்து உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு அரகர நமசிவாய பவதே என்று மந்திரம் சொல்லித் தியானித்துக் கொண்டு தேனிலாகுதல் கொள்ளவும். நெய்யிலாகுதல் கொள்ளவும். உடலுயிர் தழைத்து சித்தியுண்டாம். மகாபலத்தை உடையவராய் பூசா புலம் உடையராய்க் கொள்ளவும். மும்மலமு மறும். இந்திரியம் தளியாது. இது அகஸ்தியர் உரைத்தியது என்று அறியவும்.]

சீந்தில் கற்பம் :-

திருவோண நக்ஷத்திரத்தில் சீந்தி சமூலமுங் கொண்டு வந்து இடித்து வஸ்திர காயம் பண்ணி ஓம் சிவாயம் பவதே என்று லக்ஷம் தரம் உருவேற்றிக் கொண்டு தேனில் கொள்ளவும். வச்சிரகாயமாம். சகல சித்தியுண்டு. வசியம் உண்டு. தெய்வ சானித்தியமாம். இது மருமாக்கள் ஆசாரமுடைய பேர்கள் கொள்ளப் பட்டது. என்று அகஸ்தியனுரைத்தியது என்று அறியவும்.

~~தூதுவேளை கற்பம் :-~~

~~ரேவதி நட்சத்திரத்தில் தூதுவேளை~~ சமூலங் கொண்டு வந்து உலர்த்தி

இடித்த வஸ்திர காயம் பண்ணிக் ~~கொண்டு~~ புதுக் கலயத்தில் வைத்துக் கொண்டு ~~[illegible]~~

அரிநமோ தேவ தேநமோ வென்று உருவேற்றிக் கொண்டு சிவயநம [illegible]

~~[illegible]~~ [illegible]

[illegible] அனுதினம் [illegible]

[illegible]

நிலாவரை கற்பம்:-

நிலாவரை வியாழக்கிழமை நாள் பிடுங்கி வந்து இடித்துப் பொடியாக்கி வஸ்திர காயம் பண்ணி ஓம் அரகர பவதே யென்று தியானித்துக் கொண்டு கொள்ளப் பதினெட்டு பட்டமும் ஊமாம். தேனில் கொண்டால் சரீர சுத்தியாம். நெய்யில் கொண்டால் தேக சித்தி யுண்டாம். அனும் அளிஉதகம் காசிடை கொள்ளவும். மாய மல மறும். இது சித்த பிரயோகம். அகத்தியருரைத்தியது.

கடுக்காய் கற்பம்:-

கடுக்காய் மூன்று வரையா யிருக்கிற கடுக்காய் கொண்டு வந்து இடித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு நமதே பகா ஓம்என்று தியானித்து தேனிலாவது நெய்யிலாவது குழைத்து கொள்ள மன பலத்தையுடையவராய் ஆவார்கள். நரை திரை மாறும். ஆனந்த பூரணமாயி ருப்பார்கள். வசியம் கிடைக்கும். கண்ணுக்கு ஒளியுண்டாம். சமுத்திரத்து சலம் தெரிய வரும். குருவசிய முண்டாம். மகா பெரியோர்கள் கொள்ளுவது. இது அகத்தியருரைத்தியது.

கஞ்சா கற்பம்:-

கஞ்சா இலை உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு ஓம் நமதே என்று தியானத்துடனே இருந்து தேனில் ஒரு காசிடை கொள்ள தேக சித்தியுண்டாம். வசிய முண்டாம். கலைகளுடையவர்களாய் மகா அயிஸ்வரியமுடையவர்களாயிருப்பார்கள். மகா வசியம் திக்கு வசியம் உண்டாமே. அகத்தியருரைத்தியது என்று அறியும்படி சிவமயம்.

நீர் முள்ளி கற்பம்:-

புனர் பூசம் நீர் முள்ளி விரை கொண்டு வந்து உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி ~~[illegible]~~ அரகர நமசிவாய பவதே ஓம் என்று ஆயிரத்தெட்டு தரம் உருப்படுத்தி தேனிலாவது நெய்யிலாகுதல் கொள்ளவும். இது விரத்திகள் கொண்டால் மகா பலத்தையுடையவராய் அநேக நாள் உடலை நிற்கும் நரை திரை மாறும். வசியமுண்டாம். விந்து கட்டும். பிள்ளை பெறவனுக்கு கொடுத்தால் புத்திரமுண்டாம். சர்வ சித்தியுடையவர்களா யிருப்பார்கள் என்று அகத்தியருரைத்தியது.

தலைக்குத் தயிலம்:-

சிற்றாமுட்டி வேர் பலம்.க, பேராமுட்டி வேர் பலம்.க, சீரகம் பலம். 1/2 தனியா பலம்.வ, கசகசா பலம்.வ, கருஞ்சீரகம் பலம்.வ, சாதிக்காய் பலம்.வ, நெல்லி விரை பலம். 1/2, நெரிஞ்சி விரை பலம். 1/2 இது வெல்லாம் வஸ்திர காயம் பண்ணி மான கூரென்று எண்ணெயில் கற்பூர வள்ளி சாறு சுலகை விட்டு சலங்க பதமான வாறே மா வை அதில் போட்டு இறக்கிவிடவும். புலாயிலை எரிஞ்சிப் பட்டை தேச்சு முழுகவும்.

கோரோசனை பண்ண:-

ரச, கெந்தகம், மனோசிலை, அரிதாரம் வெங்காரம், சாதிலிங்கம், பச்சை நாபி, திரிகடுகு, திரிபலம் வகைக்கு விராகனெடை.க, நேர்வாளம் பருப்பு விராகனெடை இது வெல்லாம் சுத்தி பண்ணி கய்யாந்த கரை சாறு விட்டு அரைத்து ஏழு நாள் அம் மிப்பால் ட்டி மிளகுப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு

கிருமிக்கு பசுவின் மோரில் கொடுக்கவும். வாய்வுக்கு பசுவின் நெய்யில் கொடுக்கவும். கிரேசனத்துக்கு ஆமணக்கெண்ணெயிலிடவும். விடந்தத்துக்கு எலுமிச்சம் பழம் சாத்திலரைச்சு கடிச்ச வாயிலிடவும். தேளுக்கு இஞ்சி சாத்திலிடவும். மத்தத்துக்கு சீந்தில் கொடி சாத்திலிடவும். கல்லெரிப்புக்கு ஆட்டுப் பாலிலிட ரோப சுரத்துக்கு நெல்லிக்காய் சாத்திலிட சுவாசத்துக்கு நெல்லிக்காய் சாத்திலிட சுவாசத்துக்கு கிரிதடகத்து சாத்தி லிட, உலைக்கு கடுகு, லவங்கப் பட்டையிலிட செரியாக் குணத்துக் தயிரிடவும். பிரமி யத்துக்கு கொட்டிக்கள் சாத்திலிட நீர்க் கடுப்புக்கு தண்ணி மிட்டான் கிழங்கிலிடவும் மலடுக்கு புத்திர சீவிரையில் கிறையத்துக்கு கொடுத்து பசுவின் பாலில் உள்ளுக்கு கொடுக்கவும். எல்லா வாய்வுக்கும் கருகுங்கிலியமும் இடை வெள்ளிரிலிடவும். செவ் வட்டை கடிக்கு அரசம் பட்டை, பெரும்பாட்டுக்கு சந்தனத்திலிடவும். விடந்த சத்திக்கு கொத்தமல்லி ஓமத்திலிடவும். குன்மத்துக்கு நொச்சியிலைச் சாத்தில் கசாயம் வைத் துக் கொடுக்கவும் குணமாகும். கை கண்டது.

இருமல், ஈளை, இரைப்பு, உள்மாந்தை, கருப்பாவளை குன்மம் நமுலை பலவகை சூரணம்.

பொன்முங்கன்னி சமூலங் கொண்டு வந்து அலசித்து பன்னிரெண்டு கடுக்காய் நறுக்கி அதிலே போட்டு பசுவின் கோமியம் விட்டுப் பிசைந்து கடுக்காய் எடுத்துப் போட் டுக் காச்ச பிளி போலாம். அதை உலர்த்தி வைத்துக் கொண்டு அன்றுடம் அவரைப் பிரமாணம் இள வெந்நீரிலே கரைத்துக் குடிக்கவும். இளம் இருமல் உள் மாந்தை இதுகள் தீரும். குன்மம் நமுலை பல வகைக்குச் சூரணம்:-

திப்பிலி பலம்.ரு, பெருங்காயம் பலம்.ரு, மிளகு பலம்.ரு, சுக்கு பலம் .ரு, ஓமம் பலம் பஞ்ச பஞ்ச லவணம் பலம்.ரு, ஊமச்சி பலம்.ரு, எருக்கம் பூ படி.உ, இது வெல்லாம் அடங்க தக்கான சட்டியில் ஊமச்சியை கொட்டி பரப்பி மேலே வெற்றிலையைப் பரப்பி மட்டமான சட்டி கொண்டு மூடி அருகு சீலை மண் செய்து இரண்டு நாள் ஊற வைத்த பின்பு இரண்டு நாள் ளஉய-நாழிகை எரி விட்டு ஆற விட்டு பற்பத்தை எடுத்து அடக்குகந்த சிமிளில் வைத்துக் கொண்டு கால் பணவெடை தேனிலே கொடுக்கவும். இரண்டு நேரமுங் கொடுக்கவும். பத்தியம் கலிச்சு புளிப்பு தவிர்க்கவும். இதுக்குத் தீரும் வியாதி குன்மம் குன்ம கட்டுக்கு ஒமர கார்ட வலி தொண்டைக் கம்மல், பிரமேகம் இது தீரும்.

<u>வலி குன்மம், எரி குன்மம், சத்தி குன்மம், வாய்வு குன்மம், மந்த குன்மம் இதுகளுக்கு மருந்து.</u>

<u>வலி குன்மத்துக்கு:-</u>

சிறுநெரிஞ்சி வேர் சேர்.க, உப்பு பலம்.ரு, இது இரண்டும் தண்ணீர் விட்டு அரைத்து உ பலம் விளக்கெண்ணெயில் குழப்பி மூன்று நாள் கொள்ளக் குணமாகும். வலி குன்மந் தீரும்.

<u>சத்தி குன்மத்துக்கு:-</u>

ஒரு படி கொள்ளுக்கு நாலு படி தண்ணீர் விட்டு அதிலே ௰ கடுக்காய் நறுக்கி போட்டு. வேக வைத்து கால் படி தண்ணீர் நிற்க இறுத்துக் கொண்டு இதில் பெருங் காயம் விராகனெடை.க, உப்பு விராகனெடை.க, இது இரண்டுங் கூட போட்டு இப்படி மூன்று நாள் கொள்ள சத்தி குன்மம் தீரும். பத்தியம் புளி விடவும்.

<u>எரி குன்மத்துக்கு:-</u> கடுக்காய்.16, கருவேப்பிலை ஒரு பிடி இது இரண்டுங் கூடப் போட்டு இடித்து இரு நாழி தண்ணீர் விட்டு உழக்காக காய்ச்சி அதில் பெருங்காயம்

விராகனெடை.க, தண்ணீர்*விட்டு*குறுக்காக*காய்ச்சி*அதில்*பெருங்காயம்*இந்துப்பு விராகனெடை.க, அதிலே போட்டுக் கொடுக்க எரி குன்மங் குணமாகும். புளி யாகாது.

வாய்வு குன்மத்துக்கு:-

பெருங்காயம் விராகனெடை.க, கடுக்காய்ப் பொடி விராகனெடை.ச, இவ இரண்டுங் கலந்து இள வெந்நீரில் கொள்ள வாய்வு குன்மந் தீரும். புளி தவிர்க்கவும்.

மந்த குன்மத்துக்கு:-

வெத்திலைக் காய் ஒரு சேர், அசமதாகம் விராகனெடை.க, இந்துப்பு விராகனெடை.க, மிளகு விராகனெடை.க, இதுவெல்லாம் வெத்திலைச் சாத்திலே அரைச்சு விளக்கெண்ணெயில் குழப்பி மூன்று நாள்க் கொள்ளவும். மந்தகுன்மம் தீரும். ~~புளியாகாது~~ புளிஆகாது. கை கண்டது.

திப்பிலியாதி சூரணம்:-

திப்பிலி பலம்.ய , சுக்கு பலம்.ச, சிறு தேக்கு பலம்.ச, மிளகு பலம். , செவியம் பலம்.உ, ஏலம் பலம்.க, சித்திரமூலம் பலம்.க, அரப்பொடி பலம்.உ, கய்யாந்தகரைப் பொடி பலம்.உ, இரும்பு பலம்.க, சாதிக்காய் பலம்.க, சிறு நாகப்பூ பலம்.க, தக்கோலம் பலம்.க, இது வெல்லாம் சம பாகங் கட்டி இடித்துச் சூரணம் பண்ணி அந்த சூரணத்திலே நாலிலொரு பங்கு சர்க்கரை போட்டு இரண்டு படி தேன் வார்த்து கலந்து கால் மண்டலம் தானிய புடமாக வைத்து எடுத்துக் கொண்டு திரிகாலம் சாப்பிட்டு வந்தால் இதில் தீரும் வியாதி சுவாசம் காசம், சத்தி குன்மம், அரோசிகம், மூலம் பாண்டலம், சோகை, சுரம், குறவிடிவு, முதலான வியாதியுந் தீரும். குணமாம். கை கண்டது.

பஞ்சாக்கினி வடகம் பண்ணும் படி:-

மெரு கிழங்கு, பிரண்டைக் கிழங்கு, பிரியங்கலைக் கிழங்கு, சித்திரமூலம் வேர் பட்டை, காட்டுக் கருணைக் கிழங்கு, இந்துப்பு, பொட்டிலுப்பு, சயிந்த லவணம், பிடாலவணம், வளையலுப்பு, நவாசாரம், பெருங்காயம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுகு, சீரகம், சாட்டறுணைக் கிழங்கு, வெள்ளைப் பூண்டு இது வெல்லாம் சம பாகங் கட்டி சூரணம் பண்ணி சதுரக் கள்ளிப் பால் அரைத்து உலர்த்தி கருணைக் கிழங்கு சாத்தில் அரைத்து உலர்த்தி சட்டியில் போட்டு பிட்டாக வைத்து ஒரு நாழிகை வேக வைத்து நன்றாயரைத்து கிளாக்காய் பிரமாணம் ஒரு உருண்டை பண்ணி உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு உருண்டையை தேனிலாவது பாலிலாவது வாங்கிக் கொண்டால் இதிலே தீரும் வியாதி பிளிசு வாய்வு, அஷ்ட குன்மம், சூலை வாய்வு, பித்த அசதி , வாதமும் பின்னுமுண்டான வியாதி எல்லாம் குணமாம். பத்தியம் இச்சா பத்தியம்.

பிரமேகம் இருபதுக்கும் மருந்து பண்ணும் வகை:-

தென்னம் பூ பலம்.ய, வாழைப் பூ பலம்.ய, மருதம் பட்டை, இலவம் பட்டை, காட்டிலவம் பட்டை, சம்பு நாகப் பட்டை, மாம்பட்டை, அரசம் பட்டை, மிச்சம் பட்டை, ஆலம் பட்டை, நுவாரை வேர்ப் பட்டை, அத்திப் பட்டை, கொள்ளை வேர்ப் பட்டை, தேத்தாங் கொட்டை, திரிபாலை நெல்லிக்கைக்கு பலம்.ய, முன்றக்கு கொண்டு வந்து குறுக்க நறுக்கி இந்த பெரிய புது முடாவில் போட்டு அது, தண்ணீர் விட்டு கமலாக்கினியாக எரி விட்டு அதிலொரு பங்கு காய்ச்சி வடித்துக் கொண்டு அந்த ரசமெல்லாம் ஒரு புதுச் சட்டியில்வார்த்து ஒரு படியாக அண்டக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு இதிலே போடுகிற கடை திரவியம் வகையேதென்றால் கற்பூர சிலாசத்து,

புற்பம் பலம்.உ, புளியங் கொட்டை தோலி பலம்.ரு, காட்டாத்தி பூவு பலம்.ரு, தேத்தாங் கொட்டை பலம்.ரு, மரமஞ்சள் பலம்.ரு, வில்வம் பிசின் பலம்.ரு, இந் வகை எல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணி முன்னாலே காய்ச்சி வைத்திருக்கிற கசாயத்திலே போட்டு பாகு பதமாக காய்ச்சிக் கிளறி மெழுகையாய் திரண்ட பின்பு களச்சிக் காய் பிரமாணம் உருட்டி உருண்டை பண்ணி நிழலிலே உலர்த்தி எடுத்து வைத்துக் கொண்டு உருண்டையைப் பொடி செய்து காலையிலே தேனிலே குழப்பி வாங்கிக் கொண்டால் இதில் தீரும் வியாதி மேகம்.உய, நீரழிவு, வெகுமூத்திரம், வாதபித்தம், சேத்துமம், மைத்த அதிரள்ள வியாதி எல்லாந் தீரும். இதக்கு இச்சா பத்தியம். கை கண்டது. குணமாகும். இந்த முறைக்கு பக்குவமறிந்து பண்ணுகிறது.

<u>பெருமலுக்கு</u>:-

வேலிப் பருத்தி வேர், சாட்டரணை வேர், பாவட்டை இலை சாறு, உள்ளி வசம்பு, நூம்ம ஒடு அவையெல்லாம் பாவட்டஞ் சாத்திலே அரைத்து விளக்கெண்ணெயில் கொடுக்க தீரும். குணமாகும். கை கண்டது.

<u>விரை வாதத்துக்கு</u>:-

தேத்தாம் பழம், தாழை, கொடி பருப்பு, நாய்ப் பாகல், வேர் ஒரு பாக்களவு இந்த மூன்றும் உருண்டை பண்ணி ஒரு நாளொன்றுக்கு இரண்டு கோழி முட்டை உடைத்து வெள்ளைக் கருவுடனே கலந்து கூட்டிக் கொள்ளத் தீரும். ~~தேத்தாங் கொட்டையை கலந்து பொடியாக்கி வைத்து கொண்டு பசுவின் நெய்யில் கலந்து கூட்டிக் கொண்டு கொள்ளவும் தீரும்.~~

தேத்தாங்கொட்டையை பொடியாக்கி வைத்துக் கொண்டு பசுவின் நெய்யில் கலந்து சாப்பிட நீருமை, அழுவை பெருவயிறு தீரும். மோருடன் குடிக்க பதினெட்டு குன்மம் தீரும்.

<u>வல்லாரை எண்ணெய் பண்ணுகிற விவரம் அறியும்படி</u>:-

வல்லாவாரைத் தழை ஒரு பிடி, கருஞ்சீரகம் விராகனெடை.க, கஸ்தூரி விராகனெடை.க, மஞ்சள் விராகனெடை.க, பிரப்பங் கிழங்கு விராகனெடை.க, பறங்கிப் பட்டை விராகனெடை.க, சீரகம் விராகனெடை.க, வெந்தயம் விராகனெடை.க, வெங்காயம் இருச பலம்.க, விளக்கெண்ணெய் படி. இது வெல்லாம் கூட்டி கடை மருந்துகளெல்லாம் பொடி சூரணம் பண்ணி வெங்காயத்தை தோலு போக்கி நறுக்கி எண்ணெயில் போட்டு இந்த வல்லாரை இலையுங் கூடப் போட்டு இலை முறுகின பதத்திலே தாளைப் போட்டுக் கிளறி இறக்கி ஆற விட்டு முட்டக் கரண்டியில் அரைக் கரண்டி கொள்ள இதிலே தீரும் வியாதி கரப்பான், மேகம், மாந்தைகள், இது வெல்லாந் தீரும்.

<u>வயத்துக் குன்மம் கட்டிக்கு</u>:-

பூமி சர்க்கரை கிழங்கு சேர், காயப் போட்டு இடிச்சு சூரணம் பண்ணிக் கொண்டு சிறு லவங்கப் பட்டை பலம்.க, ஏலரிசி பலம்.½ கிராம்பு பலம்.½, வால் மிளகு பலம்.½ சீந்தி சர்க்கரை பலம்.க, வெள்ளாட்டுக் கோமியம் படி. பனை வெல்லம் இது வெல்லாம் பொடி பண்ணி கடை திரவியத்தையும் பொடி பண்ணி அது வெல்லாங் கொப்பரையாயிருக்கிற தேங்காய் வாங்கி வந்து அதிலே ஓட்டை வாங்கிப் போட்டு ஆறு கீத்தாய் அறுத்து மூன்று நாளைக்கு சாப்பிட்டால் குன்மம் கட்டி தீரும். கை கண்டது.

லிங்கம் ?

காச்சலுக்கு:-

நாபி விராகனெடை.உ, யிங்குலிகம் விராகனெடை.உ, இந்த இரண்டு வகையும் வாங்கிக் கொண்டு வந்து நாபியைப் பசுவின் கோமியத்திலே ஊறப் போட்டு.௩ய, நாள் இருக்க விட்டால் சுத்தியாகும். இங்குலிகத்தை முலைப் பாலில் ஊற வைத்தால் சுத்தியாகும். இந்த இரண்டு வகையும் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து மை போல அரைத்து பயறு பிரமாணமாக மாத்திரை பண்ணி வைத்துக் கொள்ளவும்.

முகத்தில் மங்கு பிறந்தால் அதுக்கு மருந்து:-

பருத்திக் கொட்டை, பெருங்காயம், வெள்ளை வெத்திலைச் சாறு. இந்த மூன்றும் அரைத்து மூக்கில் தடவவும். மூக்கில் மங்கு போம்.

உடம்பு ஊதல் வாங்க:-

வட்டப் பேய் மிரட்டி யிலை வெவிச்ச தண்ணீர் சிறங்கை கொடுக்க அன்னத்தில் வார்க்க.

சுக்கு சுத்தி:-

பசு கோமியம் சாட்டறணை சாறு, நாயுருவி சாறு, ஆடாதோடைச் சாறு, கொள்ளை இலைச் சாறு, இதுகளிலே ஒரு நாள்ற விடவும். கருஞ்சீரகம், வெள்ளை அண்டை பூ குடரி கிழங்கு சமன் கூட்டி கருப்பு நாய் மூத்திரம் வார்த்தரைத்து உருண்டை வசம்பு பூண்டு இந்த ரசத்திலிட்டு செவ்வகத்திப் பருப்பு ரசத்திலிட அவன் பெரு விரல் ரத்தத்தில் கலிக்கம் போடவும்.

வில்வாதி லேகியம்:- (Compare this preparation with other preparations published)

~~வில்வத்தில் கலிக்கம்~~ வில்வ வேர் கொண்டு வந்து பட்டைகள்ளிப் போட்டுஅதை இடிச்சுக் கொண்டு இடிச்ச பொடியை உலர்த்தி இடித்து பொடி பண்ணி பலம் நிறுத்துக் கொண்டு ஒரு புதுச் சாலிலே எட்டு மரக்கால் தண்ணீர் வார்த்துக் குறுணி தண்ணீராக காய்ச்சி ஒரு புதுச் சட்டியிலே வடித்துக் கொண்டு பிறகு பழைய பனை ~~வெல்~~ வெல்லம் ~~[illegible]~~ பலம் வாங்கிக் கொண்டு வந்து கரைச்சு வடி கட்டிக் கொண்டு முன்னே கசாயத்திலே ஊத்தி அடுப்பு மேலே வைத்து தேன் பதமாக பாக்கமாய்க்கி இறக்கி வைத்துக் கொண்டு கடை திரவியம் லவங்கம், லவங்கப் பத்திரி, நாகேசுரம், ஏலவுதாரம், சந்தம், விலாமிச்சம் வேர், வெட்டி வேர், சாதிக்காய், தாளிச பத்திரி, திராட்சை பழம்; கஸ்தூரி பழம், பொரி மாவு, நல்ல சந்தனம், சீரகம், சுக்கு, திப்பிலி, தனியா, கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு இந்த வகைக்கு விராகனெடை.௩, முறைக்கு சரக்குகளை வாங்கிக் கொண்டு வந்து உரலிலே போட்டு நன்றாய் இடித்து வஸ்திர காயம் பண்ணி அந்தச் சூரணத்திலே இந்தச் சூரணத்தைப் போட்டு நல்லா கிளறி அடுப்பு மேலே வைத்து லேகியதமாக காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு பொரிமா பொடி தாவி ஆறின பின்பு தேன் ஒரு நாழி காய்ச்சி வார்த்து நெய் ஒரு உழக்கு, நல்லெண்ணை ஒரு உழக்கு, வில்வபழம் விராகனெடை.௩, இதுவெல்லாம் பொடியாவ லேகியத்திலே போட்டு கலந்து கிளறி காலையிலே உள்ளங் கை அமர லேகியம் போட்டு சாப்பிட்டு வரவும். இதிலே தீரும் வியாதி ஊமல், பயித்தியத்திலே பிறந்த சேதம், பித்தம், காசம் ரத்த பயித்தியம், சுதயரோகம், உள் காச்சல் இதுவெல்லாம் தீரும். இந்த லேகியம் கை கண்டது.

5.12.62.

சத்து இல்லாத பெருக்கு மருந்து :-

பூசனிக்காய் கொண்டு வந்து மேல் தோல் உள் அதையும் வாங்கிப் போட்டு கெட்டியா யிருக்கிறத்தை அறிந்து பொய்யற்ற கொடுத்தி ஊரப் போட்டு பலம். உயரு, பிழிந்துக் கொண்டு இரு நாழி பசுவின் நெய் வார்த்து வறுத்துப் பொடி பண்ணி வைத்துக் கொண்டு இதுக்கு கடை திரவியம், சுக்கு, திப்பிலி, நல்லசீரகம், நெல்லிப் பருப்பு இந்த வகை ஒன்றுக்கு பலம் தனியா பலம். க, சர்க்கரை பலம். க, இது வெவ்வேறே பொடி செய்து தேன் நாழி பாகமாக காய்ச்சி இறக்கிக் கொண்டு இந்த மருந்துகளெல்லாம் கூட போட்டு கிளறி கும்பத்தில் வாய் கட்டி பதினைந்து நாள் தானிய புடமாக வைத்து பின்பு எடுத்துக் கொண்டு கொட்டைப் பாக்கு பிரமாணம் இருவேளைக்கும் சாப்பிட்டு வந்தால் இதிலே தீரும் வியாதி காசம், அரோசிகம், ரத்த பித்தியம், க்ஷயரோகம், உள் காய்ச்சல், சித்த வசம் இவையுண்டாம். குணபடும். கை கண்டது.

திப்பிலி கிருதம் :-

அமுக்கிறான் செடியை சமூலங் கொண்டு வந்து உரலிலே போட்டு இடித்து குறுணி சாறு பிழிந்து வைத்துக் கொண்டு பசுவின் பால் குறுணி. க, பசுவின் நெய் ச, இது வெல்லாம் ஒரு சட்டியிலே வார்த்து வைத்துக் கொண்டு இதுக்கு கடை திரவியம் அமுக்கிறான் வேர், திப்பிலி, குடசப் பாலை விரை, நில வேம்பு, வில்வ பழம், திராட்சை பழம், அதிவிடயம், லவங்கம், லவங்கப் பத்திரி, நாகேசுரம், அதிமதுரம் இவை வகைக்கு பலம். க, முறைக்கு வாங்கிக் கொண்டு வந்து இடித்து வஸ்திர காயம் பண்ணி அதிலே போட்டு நல்லா கிளறி அடுப்பு மேலே வைத்து பதமாக காய்ச்சி பக்குவத்திலே இறக்கிக் கட்டியாய்ப் போகாமல் படிக்கு கிளறி எடுத்து வைத்துக் கொண்டு பொழுது ஒரு கரண்டிகை நெய் சாப்பிட்டு வரவும். இதிலே தீரும் வியாதி பூரண சுரம், அஸ்தி சுரம், நாலு மாதத்தைய சுரம் எப்பேர் பட்ட சுர முதல் கொண்டு இருக்கப் பட்ட வியாதி தீரும். குணபடும். கை கண்டது.

சீதசுரம், சுரத்துக்கு நசியம் :-

ஆமணக்கெண்ணெயும், மிளகு சாள் நசியம். தேனும் மிளகும் நசியம், அகத்தி பழுப்பிலை இருக்குக்கு நசியம். எருக்கிலை சாத்தில் அசமதாகம் இந்துப்பு, மிளகு வெள்ளுள்ளி கூட்டி அரைத்து நசியமிடவும். தலையிலே எண்ணெய் விட்டு பிறிந்து இதிலே திப்பிலியுங் கூட்டி நசிய மிடவும்

பிச்சிலிப் புடுக்கு தோலிலேயும் கரசுகரந்து புண் கிழவுக்கு மூலாள் :-

நல்லெண்ணையை காய்ச்சி யவாள் போட பொங்க விட்டு ஆவி ஆற விட்டு போடவும். செம்புருப் பட்டை முருதார் சிங்கு, சங்காலை பச்சை, மயில் துத்தம், பால் துத்தம், ரசகற்பூரம், பச்சைக் கற்பூரம், சாளிகம் பண்ணி எண்ணெயைக் காய்ச்சி சாளிகம் போட பொங்கும். ஆவி ஆற விட்டு குச்சியிலே *** துணி சுத்தி எண்ணெயில் நனைச்சு தடவ சாயங்காலம் வெந்நீர் வார்த்து கழுவவும். மேலுக்கும் வார்க்கவும்.

சகல மூலத்துக்கும் எண்ணெய் பண்ணும்படி :-

அத்தி கொழுந்து, முருங்கைப் பட்டை, முள்ளிடா வேர், தேக்காம் பட்டை இந்த வகை சாறும் கூடக் கருப்பு அரிசி இடித்து களி கிண்டி, நல்ல வெல்லம் கூறேள் எண்ணெய் வார்த்து தின்க. மூன்று நாள் சாப்பிடவும். 425 மருந்தும் சென்ற

மூலத்து ஒரு நாள் சாப்பிடவும். பத்தியம் முருங்கைக் காய், இதன் இலை, பசுவின் பால் ஆகும். கிரஹிக்கும் ஆகும், இந்த மருந்து.

<u>மலட்டு புழு விழும்படி மருந்து</u>:-

ஆடாதோடை இலை, வேப்பிலை, வெள்ளெருக்கிலை, நாகவேளை வேர், கீழ்த் கொட்டிக் காய் இலை, இல்லங்க.க, கூட்டி பசு நெய்யில் மெழுகு பதத்திலிறக்கி வடித்துக் கொண்டு கிட்டமான மூன்று நாள் முழுகின பின்பு செரிக்கத் தக்கான நெய் உள்ளுக்கு ஒரு நாள் கொள்ளவும். மலட்டுப் புழுவு செத்து விழும். கெற்ப்பந் தரிக்கும். பத்தியம் நெய்யும் சோறும் போடவும். [~~பிள்ளை~~ நோது ஒன்றுமாகாது.] 7 (கர்ப்பத்துக்கு)

<u>சிறபிள்ளைகள் கணம் மாந்தைக்கு என்னெண்</u>:-

பசுவின் நெய் படி.க, சிறு புள்ளடி வேர், பழம் பாசி வேர், செம்பு நெருஞ்சி வேர், நத்தைக்காளி வேர் இவை வகை ஒன்றுக்கு ஒரு பிடி வேர் ~~*******~~, கற்றாழை சோறு பிடி.க, இதெல்லாம் இடித்து நெய்யில் கலந்து கொதிக்க வைத்து பதத்திலிறக்கி வடிபிட்டு வடித்த நெய்யிலே போடுகிற கடை திரவியம் சீரகம், வால்மிளகு, ஏலம், மிளகு, லவங்கம், இவை வகைக்கு விராகனெடை. இரண்டு பதமாய் வறுத்து பொடி செய்து கோரோசனை விராகனெடை கூட்டி அரைத்து வடித்த நெய்யில் பொடியெல்லாம் போட்டு குழைத்து வைத்துக் கொண்டு பாலிற் பழம் சேர்த்து தண்ணீர் சிறு கழற்காய் மாதிரி கலந்து புகட்டவும். அந்தி சந்தி முப்பது நாள் கலந்து புகட்டவும். இளைத்து வருகிறது தீர்ந்து பிள்ளை பெருக்கும்.

<u>(வேறு) குண்டியச் சிரம். அதின் குணம்.</u>

நாக்கு வெடித்திருக்குமாகில் ஒரு புறமாகிலும், நடு புறமாகிலும் வீங்கியிருக்கும். உள் காச்சலாய் காயும் இரைப்புக் காணும். தலை பிறட்டும். இதுக்கு மருந்து சங்கங் கொழுந்து, கண்டங் கத்திரி கொழுந்து, நாகவேளை கொழுந்து அவுரியிலை சிலந்தி நாயகமிலை கலியாண முருங்கையிலை, வல்லாரை இலை, மணத்தக்காளி இலை இவை சமனாக இடித்து பிழிந்து சாறு ஈர வெங்காயம் தலைத்தப் பிழிந்துக் கொண்டு இந்த இரண்டு வகை சாறும் உரி, வறுத்த முத்தெண்ணெய் கூட்டி வெள்ளை காக்கணம் வேர் அரைத்து கொட்டைப் பாக்களவு கூட்டி கலந்து எரித்து பதத்தில் வடித்துக் கொண்டு ஒரு கரண்டி எண்ணெ விட்டு ஒரு நாள் கொடுக்க வயிறு கழிந்து குணமாம். வல்லாரையிலை கற்பூர வள்ளி சிலந்தி நாயகம், மணத்தக்காளி, கோழியவரை, ஈர வெங்காயம் இவைகள் சமனு தலைத்து சாறு உரி பசுவின் நெய்யிலே கலந்து காய்ச்சு பிரமாணம் சிறுக கொடுக்கவும். மெத்தகை தப்பிலல் பிள்ளைக்கு அதிமதுரம், சாத்திர பேதி, கோஷ்டம், கோரோசனை, கடுக்காய், திப்பிலி இவை எல்லாம் சமனாக முலைப் பாலிலாவது பசுவின் பாலிலாவது அரைத்து குழைத்து சத்து சத்தாய் நாக்கிலே தடவவும்.

<u>நெஞ்சு நொந்து சீழ் பெருக்கும் சுரி நோவு இதுக்கு</u>:-

செருப்படை, சிலந்தி நாயகம் ~~**~~ கொட்டைக் கரந்தை, வெள்ளருகு, கலியாண முருங்கையிலை, அவுரியிலை, நிலக் கடம்பு, சீந்திலிலை, நெய் சட்டியிலை இவை எல்லாம் சமனாக உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி மூவிரல் கொண்டது விளக்கெண் ணெயில் சாப்பிடவும். சிலந்தி ~~**~~ காதியார்காது. மூன்று பிறை காணுந் தோறும் இருமல் காணும்.

இதுக்கு நெய் பண்ணும்படி:- நாகவேளைக் கொழுந்து, கண்டங் கத்திரி வேர், பாகை

கொழுந்து, அந்திர தாமரைக் கொழுந்து, வல்லாரைக் கொழுந்து, கலியாண முருங்கைக் கொழுந்து, சிலந்தி நாயகம், சங்கிலை, மந்தக்காளி இலை, அவரியிலை இந்தக் கொழுந்தெல்லாம் சமன். நாகவேளைக் கொழுந்து இரண்டு பங்கு இவை யெல்லாம் அரைத்து நாழி பசுவின் நெய்யிலாக்கி வடித்துக் கொண்டு சிறு கரண்டி நெய் இரண்டு வேளையும் கொடுக்கவும். தாய் பிள்ளைக்குசிலந்தி பாண்டங்களாகாது. பத்தியம் இருக்கவும்

உடர்ணம், அதின் சூடும், அடி வயிற்றில் சுருட்டி பிடிக்கும், நீர் இறங்காமல் நீர் அந்த விழும் இதக்கு மருந்து.

முருங்கைப் பட்டையை அரைத்து உருண்டை முள்ளிக் காயளவு நல்லெண்ணை முக்காணி சலகையில் ஒருசுலகை., சுண்ணும்பு, தெளிவு சுலகை, வெள்ளைப் பூண்டு சிறங்கை, இந்த மூ வகையும் அரைத்து பருப்பு.மு நாளைக்கு கொடுக்கவும். உப்பு, புளி, புகை பாக்கு தவிர்க்கவும். ஐந்தாம் நாள் முரிச்சு சுடு தண்ணீர் வார்க்கவும்.

குளி தோஷம் :-

பிள்ளை இளைத்துப் போகும். வாந்தி பண்ணும். வயிறு தன் நீராகக் கழியும். உச்சி குழி விழும். கண்ணு வளையமிட்டு உள் விழுந்திருக்கும். பிள்ளை மெத்த இளைச்சு போகும் இதக்கு மொடக் கொத்தான் வேர் பிடுங்கி குரிசம் கட்டவும். அந்திரம் எழுதிக் கட்டவும்.

மார் நோவுக்கு பல தாகத்துக்கு :-

பெருந் தும்மட்டிக் காய் விரை வாங்கின காயும், மிளகு பலம்.மு காலிக்கல் பச்சைப் பயறு, கருப்பு, வெத்திலை சார் விட்டரைத்து உருண்டை பண்ணி உலர்த்தி வெத்திலையில் வைத்து கொடுக்க மார் நோவு தீரும். அரசம் பட்டை, புரசம் பட்டை, பனம் பட்டை, கொன்னைப் பட்டை, பூதி மரக்கால் பட்டை, கருவேலம் பட்டை, செம்முள்ளி வேர், வேம்பு பட்டை இந்த வகை இடித்து வேக வைத்து கொப்பளிக்க தாகம் தீரும். பக்க பிளவை முதுகில் பிளவை: புளியும் சிறுகீரை சமூலமும் உள்ளி வசம் பிட்டு நல்லெண்ணையில் கொதிக்க வைத்து புண்ணுக்கு தடவவும். ஆமையோட்டை சுட்டு விளக் கெண்ணையில் குழைத்து தடவவும். ஆவாரையிலை தயிரில் அரைத்துக் கொடுக்க காமாலை கண் தீரும்.

மகோதரத்துக்கு :-

பேய்ப் பீர்க்கன் சாறு புளிஞ்சு அதிலே விராகனெடை காயப் போட்டு குழம்பாக காய்ச்சி வைத்துக் கொண்டு சாப்பிட மகோதரம் பெரு வயிறு மழுவை பிலிகை இவைகள் போம்.

வீரியத்துக்கு :-

சந்தனம் தேங்காய் பாலிலரைத்து குளிகை பண்ணி (கொடுக்க) வீரியமுண்டாம். ஆடு தின்னாப் பாளை, புங்கம் வேர், சாட்டரணை வேர், பாகல் சாறு வார்த்து அரைத்து உருண்டை பண்ணி வெந்நீரிலாவது முலைப் பாலிலாவது உரைத்து கொடுக்க வீரியமுண்டாம். கோடசபாலை எலுமிச்சங்காய் மாத்திரம் பசும் பாலில் கொடுக்க வீரியமுண்டாம். ஆனை நெருஞ்சி வேர் அருகன் வேர் சாட்டரணை வேர், பூனைக் காலி பருப்பு, உளுந்து மாவு பாலிலரைத்து கொடுக்கவும்.

வகுறு எரிவுக்கு :-

கீழா நெல்லி சாறு பொன்னுங்கண்ணி சாறு, கோவை யிலை சாறு, நாகவேளை கசாயம், பேய் மடல் கசாயம், மணத்தக்காளி, சாறு சீரகம் சேர்.க, ஏலக்கு பலம்.க், அதிமதுரம் பலம்.க, கஸ்தூரி பழம்.க், திராட்சை பழம்.க, கொத்த மல்லி பலம்:க, எலுமிச்சம் சாறு சேர்.க, நெய் சேர் சேர்.க, சர்க்கரை சேர்.க; இவை வெல்லாம் லேகியம் பண்ணி தின்ன வகுறு எரிவு தீரும்.

கரப்பானுக்கு எண்ணெய் :-

செங்கத்தாரிப் பட்டை, கருநொச்சி கொத்தான் புங்கு சங்கு, சங்கங் குப்பி சிலந்தி நாயகம், செருப்பிடை சிறு சின்னி, ஆத்தல் வேலிப் பருத்தி, கொடிவேலி வெள்ளருகு, வேப்பம் பட்டை, சிவனார் வேம்பு சிவதை வேர், கண்டங் கத்திரி, கடுக்

காய், கடுகுரோகணி, கரப்பான், பூண்டு, நல்ல சீரகம், கருஞ்சீரகம் இவையெல்லாம் விளக்கெண்ணெயில் போட்டு எரித்து உள்ளுக்கு சாப்பிட்டு கொள்ளக் கரப்பான் செங்கரப்பான் அரிகரப்பான், புழு கரப்பான், பலகரப்பான் இவைகள் தீரும்.

குழலிக்கு பசுவின் நெய் கிருதம் பண்ணுகிற விவரம்:-

பேராமுட்டி வேர், சீந்தில் தண்டு, பிரளி கிழங்கு, சாறணை வேர், சிறுவழுதிலை வேர், நாறணைக்கிழங்கு, மாவிலிங்கம் வேர், வட்டத் திருப்பி வேர், பன்னி மோத்தைக் கிழங்கு, நத்தைச் சூரி வேர், பெரு மரத்துப் பட்டை மாதளம் பிஞ்சு, பெருங் குரும்பை சீரகம், அதிமதுரம், சாதிக்காய், அகிலிடையம், ஓமம் வகைக்கு விராகனெடை.ங, அரைத்து பீராமி நெய்யில் விட்டு வடித்துக் கொள்ள கழிச்சல் நிற்கும்.

செவ்வாப்புக்கு மேலுக்கு லேபனம், உள்ளுக்கு மருந்து:-

குன்றி வேர், வசம்பு, மிளகு, நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து தலையிலும் உடம்பிலும் லேபனம் பண்ண கடுக்காய், நெல்லிமுள்ளி, நீர் வள்ளிக் கிழங்கு இவை நாலும் பழங் கஞ்சியிலரைத் உள்ளுக்குக் கொடுக்கவும். பத்தியமாயிருக்கவும்.

தம்பனைக்கு:-

வெள்ளெருக்குக்கு திங்கள் கிழமை நாள் காப்பு கட்டி செவ்வாய் நாள் முறித்து நெருப்பிலே போட்டு வாய் பேசாமல் கோத்து ஆலம்பாலாட்டி இடுப்பிலே கட்டி புனரவும்.

நேத்திர வியாதிக்கு:-

சத்தி சாட்டறணைக் கிழங்கும், வெண்ணெயும் அரைத்து அடை தட்டி சட்டியில் போட்டு கருக்கி முலைப் பாலில் மை போல் பண்ணிக் கொள்ளவும். ஆராக் காச்சலுக்கு சூரிய காந்தியிலை, நல்ல சோறைக் கொழுந்து, சீரகம் இது மூன்றும் அரைச்சு வெண்ணெயில் கலந்து மூன்று நேரம் கொடுக்கவும்.

பழ வெப்புக்கு லங்காரத்துக்கு இந்த இரண்டுக்கும் மருந்து:-

செம்பிரண்டை பாலும், தீய நெல்லிப் பாலும், சீக்கா பாலும், கவள கட்டி ஓமம், வெள்ள பூண்டு, திப்பிலி, கருஞ்சீரகம், கடுகுரோகணி, தும்பருஷ்டகம் சமன் கட்டி இந்த பால் வார்த்தரைத்து குண்டு மணி பிரமாணம் உருண்டை பண்ணி கொடுக்கவும்.

(இடையில் உள்ள ஏடுகள் மந்திரம். விடப்பட்டது)

பித்த மேக வாய்வுக்கு லேகமம்:-

மிளகு பலம்.வ, சீரகம் பலம்.வ, சுக்கு பலம்.வ, வாய் விளங்கம் பலம்.வ, குரோசாணி பலம் .வ, லவங்கப் பட்டை பலம்.வ, லவங்கப் பத்திரி பலம்.வ, சாதிக் காய் பலம்.வ, ஏலவையம் பலம்.வ, தாளிச பத்திரி பலம்.வ, அதிமதுரம் பலம்.வ, கோஷ்டம் பலம்.வ, அக்கலாகாரம் பலம்.வ, வாயிளம் பலம்.வ, கண்டு பறங்கி பலம்.வ, சயிந்தலவணம் பலம்.வ, திராட்சை பலம்.வ, கச்சூரி பழம் பலம். , பூண்டு பலம். , உளுந்து பலம். கோதும்பை பலம். நிலப்பனை பலம் (இதில் செய்முறை முடிவு இல்லை).

அயச வாய்வுக்கு விஷ முட்டிக் தயிலம்:-

சிறுமாவலி வேர், சிட்டாமுட்டி வேர், பேரமுட்டி வேர், பற்படாகம், பாவட்ட வேர், கரியாப் பாலை முருநெல்லி வேர், பற்படாகம், முன்னை வேர், ஆதண்ட வேர், ஆவாரை வேர், தண்ணி விட்டான் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, நீலி வேர், சாரட்டறணை, வேர் சங்கம் வேர், சித்திர மூல வேர், மாவிலிங்கம் வேர், வெப்பாலை வேர், நொச்சி வேர், அருகு வேர், குப்பை மேனி வேர்; சிந்தி வேர், ஆடு தின்னா பாலை, கண்டங் கத்திரி, கரிசலாங் கண்ணி, பொன்னாங்கண்ணி, முடக் கொத்தான், மலைதாங்கி, நெக்கனி வேர், அரசு வேர், பலா வேர், பருத்தி வேர்; துளசி வேர், கோரைக் கிழங்கு, முக்கா வேளை, புங்கு வேர், புரசு வேர்; பூவரசு வேர், அத்தி வேர், ஆலம் வேர், புன்னை வேர், வேலியத்தான் விஷ்ணுகிரந்தி, குமரன் வேர், முசுட்டை வேர்; சுண்ட வேர், சிறுதும்மட்டி வேர், பெருந்தும்மட்டி வேர், பிரண்டை வேர், புளியறணை வேர், கொட்டிக் கிழங்கு, நெருஞ்சி வேர், நீர் முள்ளி வேர், நிலாவரை வேர், ஊமத்தம் வேர், பூனைக் காஞ்சிரி வேர், முருங்கை வேர், நாயுருவி வேர், நத்தை சூரி

சதிர கள்ளி, யுக கள்ளி, அழுக்கிரு வேர், வில்வ வேர், தேத்தான் வேர், நெல்லி வேர், அகத்தி வேர், தகரை வேர், விளான் வேர் அடுத்த ஏடு (லகச) முறிந்து சிதைந்து முடிவில்லாமலிருக்கிறது.

வெங்காரம் பலம்.உ, வெள்ள பூண்டு அலை படி.க, சாபத்திரி பலம். , குங்குமப் பூ பலம்.உ, மருடம் பூ பலம். பாறையுப்பு பலம்.வ, சவுட்டுப்பு பலம். , வெடிட்டுப்பு பலம். ,எவாச்சாரம் பலம்.வ, சீனக்காரம் பலம்.வ, குமரியுப்பு பலம்.வ, அதிவிடையம் பலம். சீரகம் பலம்.உ, திரிகடுகு பலம். , திரிபலை பலம். செண்பகப்பூ பலம்.ச, காமசர்க்கரை பலம்.வ, பூமி சர்க்கரை பலம்.வ, மதிசர்க்கரை பலம்.உ, முன் சொன்ன வேர் வகைகள் ஒரு பெரு பிடி வேர் வெட்டி கஷாயம் வைத்து அதிலே பின் சொன்ன சரக்குகளையும் இடித்து வஸ்திர காயம் பண்ணி முன் எண்ணெயும் கசாயமும் கொதிக்க வைத்து அதிலே இந்த சூரணமு மிட்டு கொதிக்க வைத்து மெழுகு பதத்தில் தாம்பிர செந்தூரம் விராகனெடை.க, வங்க பற்பம் விராகனெடை.க, சிசநாக செந்தூரம் விராகனெடை.#ஷ, இம் மூன்றும் போட்டுக் கொதித்த இள பதத்திலிறக்கி விற்க நே. பான் வைத்து பூசை பண்ணி எண்ணெ. இதை மேலுக்கு பிடிப்பிக்க தீரும் வியாதி கை வெடிப்பு, மெலமட்டை, கால்முடக்கு, கை முடக்கு, வெடி சூலை, மேக வெட்டை, மேக நீரழிவு, தார் வாய்வு, சூசிகா வாய்வு, பாரிச வாய்வு, வாத சன்னி வாத கோசம், திமிர் வாதம், குஷ்டம், பித்த மேகம், மேக கிறந்தி அரையாப்பு முக வாதம், முக சன்னி, அதிர்வாதம், அதிர் சன்னி,

வாய்வு, தனுர் வாய்வு, உச்சி வாய்வு, எரிப்பு வாய்வு, பக்க வாய்வு, ருத்திராங்க வாய்வு எக்க மூல வாய்வு, மூலைக்குத்து வாய்வு, ஒரு தலை வாய்வு, ரண சுக்கிர வாய்வு, படல வாய்வு, அழுவை வாய்வு, சந்து சூலை வாய்வு, சதி வாய்வு, மரண வாய்வு, விரை வாதம், ஏறு விரை வாதம், கமல வாதம், சீமூல வாதம், ஆணி மூல வாய்வு, சுக்கிர மூல வாய்வு, கம்பிசிவு வாய்வு, பாரிச வாய்வு, முடவாதம், பித்த வாய்வு, நுரை வாய்வு, ஊளந்த வாய்வு, கபாலவாய்வு, மண்டை சூலை வாய்வு, தமறக வாய்வு, தந்த வாய்வு, க்கக சன்னி வாதம், அசீரண வாய்வு, பிடரி வாய்வு, பிளிசு வாய்வு, சூலை வாய்வு, செயவாதம், யிசுவ் வாதம் ஆக அயச வாய்வும் தீரும்.
(இடையிலுள்ள ஏடுகள் மந்திரம். விடப்பட்டது)

<u>கண்ணில் தண்ணீர் விழுந்தால்</u> :-

மருதம் பூ.க, கோமியத்தில் அரைத்து உருண்டை பண்ணி தேனிலரைத்து கண்ணிலிட நீர் நிற்கும். பீசத்திலும் யோனியிலும் உதிரம் விழுந்தால் தென்னம் பாலை அறிஞ்சு, இரு நாழி தண்ணீர் விட்டு அளக்காக காய்ச்சி பச்சரிசித் தவிடு வறுத்து பொடி செய்து போட்டு குடிக்கவும். வெள்ள சீலை சுட்டு இள வெந்நீரில் குடிக்கவும்.

<u>மேகம் இருபதுக்கும் மருந்து</u> :-

மாங்கொட்டை திரிபாலை இதுக்கு நாலு பங்குதல் நார் சூரணம் பண்ணி தேனில் கொள்ள மேகம் இருபதும் தீரும்.

<u>வெள்ளெழுத்துக்கு</u> :-

வெள்ளை சாறணை வேர், நொச்சி சாத்திலரைத்திட்டு கண்ணிலிட காளேசரம் போம்.

<u>ஒக்காளத்து பவுத்திரத்துக்கு</u> :-

வெள்ளாட்டுக் கொம்பை உரைத்து மூக்கில் முகர ஒக்காளம் உழலை தாபம் தீரும். தொத்தான் வேர், செவ்வாய் கிழமை அன்றைக்கு வேரறுமல் பிடுங்கி முறிக்க சூலை நிற்கும். ஆமணக்கம் வேர் தேள் கடிக்கு அரைச்சு தடவத் தீரும்.

<u>செங்குஷ்டம், கருங்குஷ்டம், வண்டு கடி, வயித்து கிருமிக்கு மருந்து</u> :-

கன்னி புத்திரன் சோறும் விழுது பட அரைத்து கொட்டைப் பாக்களவு உருண்டை பண்ணி நல்லெண்ணெயில் இரண்டு மூன்று உருண்டை போட்டு ஆ உள்ளுக்கு கொண்டு மேலுக்கும் பூச போட்டு தலையிலும் தேய்ச்சு முழுக தீரும். சிக்கல் கரைய வெள்ளைப் பாஷாணம் எலுமிச்சம் பழச் சார் விட்டு அரைத்துப் பூச அரையாப்பு, கண்டமாலை, கிரந்தி

பிள்ளை சீ கொண்டாரமாம் கள்ளிப் பால், புழுங்கலரிசியை ஒரு நாள் ஊற வைத்து மைத்தா நாள் அரைத்து நல்லெண்ணெயில் கொதிப்பித்து வைத்திடவும், ஒரு மாறும்.

விப்புருதிக்கு மருந்து :-

அப்புக் கோவைக் கிழங்கு ஒரு பிடி, கோவைக் கிழங்கு ஒரு பிடி இவ இரண்டும் அரிசி மாவில் இடித்து வெள்ளாட்டுப் பாலில் களி கிண்டி மூன்று நாள் தின்ன நரைபீர்க்கம், விரை சீரியரைத்துக் கொடுக்க சன்னியும் தீரும். பசுவின் பால் நல்லெண்ணெயும் கட்டி மூன்று நாள் கொடுக்க மேக சன்னியும் தீரும். அரையாப்புக்கு மருந்து.

வீக்கத்தின் மேலே திரிக்கத்தியை வைத்து நெமத்தியம் பண்ணி சூரியனை பார்த்து கும்பிட்டு ஒரு பக்கத்து வீக்கமானால் ஒரு கத்தியைக் கொண்டு கரு ஊமத்தையை ஒரு செடியை வெட்டி தலை கீழாய் போட இரண்டு பக்கம் வீக்கமானால் இரண்டு குரிக் கத்தி கொண்டு இரண்டு செடி வெட்டி தலை கீழாய் போடவும். ஆசன பவுத்திரம் கெந்தடி பவுத்திரம், சிலந்திக்கு பொரிசிரல் விரை, ஒரு முள்ளிக் காய் மயோதி அரைத்து பசுவின் பாலில் அடிக்கவும். இப்படி ஒன்பது நாள் குடிக்கவும். எருமைத் தயிரும் காடி சோறும் உண்ணவும். சிக்காமலைக்கு என்ணெயில் முத்தித் தழையை அரைத்துக் குடிக்கத் தீரும். சதுரக் கள்ளிப் பாலில் அரைத்து பச்சிராட்டி புண்ணுக்கு போடவும்.

உள் வலிப்பு பிற வலிப்புக்கு :-

செவ்வாய் கிழமை நாள் பச்சை ஓணான் பிடித்து வந்து நடுவே தண்டாக்கி சாம்பல் பண்ணி ஒருபிடி சாம்பல் தேனில் கொள்ள முன் வலிப்பு நிற்கும். பிறவலிக்கு பின்புற எருக்கில விறகில் சுட்டு சாம்பல் பண்ணி ஒரு சாம்பல் தேனில் கொள்ள பிறவலிநிற்கும்.

உள்மூலம் பிறமூலம் மருந்து :-

கருங்குருவை, நெல்லரிசியில் புளியாரைக் கிழங்கு பிட்டாவி வைத்து நல்லெண்ணெ விட்டுக் காலமே தின்று ராத்திரிக்குப் பாலும் சோறும் வெல்லம் கடிச்சுக் கொண்டு தின்னவும் உள்மூலம் பிறமூலம் ஆசி முதலாய் மீளும். நிலையாவாரை வேர், பிரண்டை வேர் சாறு சீலையில் பிடித்து எச்சல் வாயில் வைக்க புழுமலந்தோடே மீளும். ஒரு மண்டலம் கொள்ள குட்டம் தீரும். கழுதைக் தும்பையிலையும் அசனிட வேரும் வெந்நீரில் கொடுக்க மூலம் வலத்தில் மீளும்.

சுரத்தின் மேல் விக்கலுக்கு :-

திருவாச்சியிலையை கசக்கி முகந்து பார்க்க நிற்கும். விழுதி வேர் அளிஞ்சி வேர் சந்தனம் மூன்றும் சமமாக கூட்டி பசுவின் பாலிலரைத்து நாக்கில்தடவ விக்கலரும்.

பாம்புக்கு மூலிசம் கட்டுகிறது :- not useful

ஆடாதோடை வேர், மரத்து மேல் சாறணை வேர், கொடிவேலி வேர் இது வெல்லாம் வடக்கு போன வேர் செவ்வாய்க் கிழமை காலமே ஞாயிறு மத்தியானம் இவைகளில் எடுக்கவும். உடனே மூலிசமாடவும். செவ்வாய்க்குப் போன வெள்ளி செம்பு தீரா இரும்பு அஞ்சு காலம் கால் பணவெடை கூட்டி உருக்கி இரண்டு மூன்று சுத்த பண்ணி மருந்தெல்லாம் சுத்திவிடத்து கொள்ளவும். இதை தலை முடியில் கட்டிக் கொள்ளவும். இதுக்கு நைவேத்தியம் தூப தீபம் கொடுத்து முடியிலிருக்க விஷம் தீண்டாது வசியம், நாவடக்கும், நாய் நரி புலிவாய் எழும்பாது. என்னையிட்டு முடிகிற போது பத்திரமாய் வைத்து எட்டு நாளைக்கொருக்கால் தூப தீபம் கொடுக்கவும்.

தீவிவேர், நாய்ப் பாகல் வேர் மூலிசம் கட்டிக் கொண்டு பாம்பின் பேரில் நடக்கலாம். ஆடாதோடை வேரைக் மூலிசமாடிக் கொண்டு பாம்பைப் பிடிக்கலாம். பாம்பு கடியாது. பாம்பு ஓடிப் போம்.

கழிச்சலுக்கு :-

சீந்தத் தண்டு, கோவைத் தண்டு, சூரணம் பண்ணி சர்க்கரை கலந்து பசுவின் நெய் பால் இதில் கொடுக்க கழிச்சல் நிற்கும். உப்பு, புளி, மிளகாய் ஆகாது. மண்டலம் சாப்பிடவும்.

மதன காமேசுர லேகியம்:-

வைத்திடும் பொன், சுக்கு, பெருஞ்சீரகம், மதுரம், காறுங் கிராம்பு, கண்டுபாரங்கி நேரான வால் மிளகு, திப்பிலி மருவு மைத்தும் திப்பிலி சால் சிறு நாகப்பூ, கனி கடுக்கா ஏலமுடன் சாதிக்காய், பத்திரியும், தனி லவங்கப் பட்டையுடன், போதித்த பத்திரியும் பொற் கோஷ்டம், வாதிக்க நெல்லி முள்ளி சீரகமும் நேரான தாளிக்காய், அல்லதொரு சீரகமும் அ பருகந்தி வல்லமையாம் மானைகசகசையும் மைத்துமுள்ள அத்தி விரை தேவை நீர்முள்ளி விரை, சிறு உருந்து மானே கேள். முள்ளிலவம் பிஞ்சுடனே முருக்கம் பூவைக் காலி வள்ளல் முந்திரிகை வரிசையுடன் உள்ள தெல்லாம் வகைக்கு ஒரு நிறையாய் மானே இடித்தரைத்து இதுக்குச் சரியா யிடநீர் கஞ்சாவே தண்ணீரில் கலந்தொரு நாள் ஊற வைத்து பிஞ்சாமல் ஏழு தரம் மிக கழுவி தண்ணீர் நாலு படி தக்க நெய் ஒரு படியும் ஒன்றுமலொக்க விட்டுக் காய்ச்சியே நன்றாகக் கிட்டி கட்டிதான் புழிந்து வளந்த அயச் சட்டியிலே வட்டியிலே தயிலமாகி நிற்கும். பொட்டெனவே கையாள் வழித்தெடுத்து கனத்தொரு பீங்கானில் மெய்யாக மத்தெல்லாம் வீசி விடு பெய்ய கேள் சர்க்கரையும் பாலதனை தன்னை யிதம் பாகாக்கி மிக்க ஒரு சூரணத்தை மேவி விடு பக்குவமாய் கிண்டிய பின் சரீரத்துக்கு அதிக குணமுண்டாயிருக்கும். இது அகத்தியருரைத்தியது: இதுக்கு பத்தியம் சிகப்பு வஸ்து ஆகாது. தித்திப்புகளாகும் பசியும் கொடுக்கும்.

பிள்ளைகளுக்கு வயிறு கழிச்சலுக்கு மருந்து:-

என்னை மாதளங் கொழுந்து, இண்டங் கொழுந்து, ஆதண்டங் கொழுந்து, சிறு புள்ளடி, பூறல் வேர், இவை கூட்டி நல்லெண்ணை உழக்கில் வசம்பு, வெங்காயம் உள்ளி. க, தெரிப்பு புளியங் கொட்டை அத்தினை பதமாக காய்ச்சி முலைப் பாலில் மத்திச்சு புகட்டவும்.

பிள்ளைகள் பிணி விவரம்:-

மதலையின் மேனி வாடி, வயித்திரிற் பாலுந் தேங்க, தலைதனிற் சுழியு முண்டாய், சத்தியும், நீரய் விழ்ந்து நுரை தவிர் சலத்தை யன்றி நோக்கிய விழியுஞ் சோர்ந்து குதலை வாய் கருகித் தோன்றும், குளித்தலைளெடுத்த காலை கரிக்குனி யாருக் கெய்தும் காரிகை பறவை தோஷம், குடித்த பாலெதி ரெடுக்கும், குலையும் அந்தலையும் கன்னும் அடிக்கடி அலறி வெம்பி அங்கமும் மூக்கும் கன்னி யெடுக்கிறுங் கையில் தங்கா தெதிரினை பிள்ளைக்கும் பிள்ளை கடுக்கிட வயறு போக்கும் கடுத் தனி பறவை தானே. பாலகன் மேனி வாடி பகலை வாய் விளித்து நிற்கிற் சீலை போல் கால் குளிர்ந்து சீறிப் பாலேகிரே யிட்டு உதகியால் அசியிற் குழிந்து குளம் குறம் பலவும் செய்யும். மாசு நவுரு போகும். வளர் புள்ளு கண்டாக்காலே.

செவி நோய் வகை:-

கண்களும் பீளை சாறி கையொடு கையும் தேய்த்து, புன்பட செவியும் நொந்து புலன்களும் ஒன்றி வாடி, புண்களின் குறளுந் தாழ்ந்து பாலகன் மெலியுமாகில், பண்புடன் செவி நோயென்று பகருவாருலகுள்ளோரே.

சீரி நோய் வகை:-

கொஞ்சயின் நெஞ்சிடிக்கு குறைந்த கோரிளைப்பு மாகில்
பிஞ்சவே வயிறு போக்கும் மேனியு மெலிந்து காட்டும்
நெஞ்சோடு விறலை தேய்த்து நெரிக்கிட பேசுமாகில்
அஞ்சவே சீரி நோவென்றுமவே உரைக்க வாரே.

இருமலுக்கு மருந்து:-

நெய் படி. 1/4 தேன் படி. 1/4 இதெல்லாஞ் சட்டியிலே விட்டு பாகு பதமாக காய்ச்சி பாகு பதம் பார்த்து இறக்கச்சே கடை சரக்கு வகைகள் மிளகு, திப்பிலி, கடுக்காய். 5, தானிக்காய். 5, ஓமம், கிரும்பு இதுகள் வகைக்கு பலம். 1/4 இதெல்லாம் பொடி செய்து கொதிக்கிற பாகுலே போட்டு கிளறி லேகியமாகிற பதத்திலே இறக்கிக் கொண்டு அந்தி விடிஞ்சு பொழுதுக்கு 1/4 பலம் கொடுத்து வரவும். இப்படி ஐந்து நாள்

கொடுக்க எப்பேர்பட்ட ஜி இருமலும் தீரும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும். இது கை கண்டது.

வெகு மூத்திரத்துக்கு மருந்து பண்ணுகிறது :-

பெருகுறிஞ்சா சமூலங் கொண்டு வந்து குழி தண்ணீர் விட்டு வேக வைத்து அரைப்படி தண்ணீர் இறுத்துக் கொண்டு அதிலே விராகனெடை வெண்காரம் பொரிச்சு போட்டு கொடுக்கவும். கீழாநெல்லி ஒரு பிடி சமூலங் கொண்டு வந்து வறகரிசி ஒரு படி ஊற வைத்து அந்த மருந்தும் அரிசியும் ஊற வைத்து இடித்துக் கொண்டு பனை வெல்லத்தை கூடச்சுக் கொண்டு மூன்று நாள் தின்னவும். வெகு மூத்திரம் நிற்கும். புளி தவிர்க்கவும். ~~மேக ஊலைக்கு பிடிப்~~

மேக ஊலைக்கு பிடிப்புக்கு எண்ணை பண்ணுகிற விபரம் :-

விளக்கெண்ணை படி.க, பசுவின் பால் படி.க, வாதமடக்கி சாறு படி.க, பறங்கிப் பட்டை பலம்.உ, ஆகாச செருடன் கிழங்கு பலம்.உ, சித்தவரைக் கிழங்கு பலம்.உ, கல்கோவைக் கிழங்கு பலம்.உ, பவரசம் பட்டை பலம்.உ, வெள்ளைப் பூண்டு பலம்.க, வெங்காயம் பலம்.உ, இது எல்லாம் யேகத்துக்கு சேர்த்து அரைச்சு எண்ணையில் போட்டு பாலுங் கூட வார்த்து எரிக்கவும். எரிச்சு பதமா இறக்கி மூன்று நாள் கொடுக்கவும். இச்சா பத்தியம். இதுக்கு மேல் மருந்து வகைகள் திப்பிலி பலம்., கடுகுரோகணி பலம்.வ, கற்கடா சிங்கி பலம்.வ, கற்பூர சிலாசத்து பலம்.வ, இது எல்லாம் பொடி செய்து கசாயத்திலே போட்டுப் பின்னுமொரு மூன்று படி நெய் வார்த்து எரித்து சிக்கண பாகத்திலே இறக்கி இரண்டு காசிடை கொள்ளவும். இதிலே தீரும் வியாதி அக்கினி மாந்தம், கிருமிகள், மாருளப்பு, குன்ம வியாதிகள் எப்பேர் பட்ட ரோகங்கள் யாவத்தும் குணமாகும் இது கை கண்டது.

~~பாலும்~~ நெய் பண்ண காய்ச்சல் நிற்கும் :-

பசுவின் நெய் படி.க, கோஷ்டம் பலம்.க சிறுதேக்கு பலம்.க, தேவதாரம் பலம்.க, சூரகம் பலம்.க, முந்திரிப் பழம் பலம்.க, பேரீச்சம் பழம். பலம்.க, திரும்பு பலம். குகை நீர் பலம்.க, சீனி சர்க்கரை பலம்.யரு, ஏலம் பலம்.க, இந்த மட்டுக்கும் நெய் கடுகு பண்ணி பத்து நாள் உள்ளுக்குக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி பித்திய ஊலை, எரிவு, ஊத்தப் போறது இதுகள் யாவத்துக்கும் குணமாம். புளியாகாது. பசுவின் பால், பசுவின் நெய் கூட்டவும்.

காச்சலுக்கு மருந்து :-

பேய் முசுட்டை வேர், சித்திர மூலம், கோரோசனை இம் மூன்று வகையும் அரைச்சு மிளகு பிரமாணம் குளிகை பண்ணி வைத்துக் கொண்டு துளசியிலை கொண்டு வந்து பிட்டா வி வைத்து சாறு பிழிஞ்சு கொண்டு அதிலே ஒரு உருண்டை உரைச்சு கொடுக்கவும். காச்சல் நிற்கும். உப்பு, புளி தவிர்க்கவும்.

[illegible] காமாலை, மஞ்சள் காமாலை, வறள் காமாலை இதுக்கு மருந்து :-

கீழா நெல்லி வேர் நெல்லிப் பருப்பும் அரைத்து எருமைத் தயிரில் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். இதுக்கு எண்ணை பண்ணுகிற வகை அறிய :- நாவல் பட்டை பலம்.வ, வேலிப் பருத்தி பலம்.வ, புள்ளடி வேர் பலம்.வ, சீரகம் பலம்.வ, பூண்டு வேர் பலம்.வ ஆக ஐந்து வகை மருந்தும் நசுக்கி விளக்கெண்ணையில் ஊறப் போட்டு அத்தி விடிஞ்சு உழக்குக் கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும். இது கை கண்டது.

வயிற்று நோவுக்கு மருந்து :-

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், ஓமம் பிரண்டை, உப்பு ஆக வகை மூன இடிச்சு சூரணம் பண்ணி கொடுக்கவும் வயிறு வலிநிற்கும். கய்யாந்தகரையை சமூலமும் அரிஞ்சு வறுத்துக் கொண்டு இரண்டு படி தண்ணீர் விட்டு அதிலே சுக்கு, திப்பிலி, வெள்ளைப் பூண்டு, அரத்தை, ஓமம், கருஞ்சீரகம் கடுகுரோகணி ஆக வகை எட்டும் முடிச்சு கட்டி அந்தக் கசாயத்தில் போட்டு வேக விட்டு அந்த முடிஞ்ச மருந்தை எடுத்து அரைச்சு அந்த கசாயத்தில் கலந்து எழு பொழுது கொடுக்கவும். இதிலே குணம் சீத சுரம், ஓட்டுக் காச்சல் எல்லாம் விட்டுப் போகும். இதுக்கு நசியம், அசமதாகம் இந்துப்பு, வெள்ளைப் பூண்டு,

மிளகு, எருக்கம் பழுப்பு காதிலே நசியம் விடவும். <u>கஷாயம் போடுகிற வகை:-</u>
கைசியிலை, விஷ்ணு கிராந்தி, கத்தாழை சாறு, கழுதாழை வேர், நார்த்தம் இலை ஆலாம் பழுப்பு, சுக்கு இது வெல்லாம் கருக்கி நாழி தண்ணீரிலே போட்டு உழக்கு தண்ணீராக காய்ச்சிக் கொடுக்கவும். அந்த வகை சன்னிக்கு கலிக்கம் பண்ணும் வகை

<u>இந்த வகை சன்னிக்கு கலிக்கம் பண்ணும் வகை என்ன வென்றால்:-</u>

வாகை விரை, சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு ஆக வகை ஐந்தும் கூட்டி கோமூத்திரத்திலே அரைச்சு மாத்திரை பிரமாணம் பண்ணி நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு எலுமிச்சம் பழச் சாத்திலே கலிக்கம் போடவும். இல்லாவிட்டால் காடி தண்ணீரில் போடவும்.

<u>நீர்க் கட்டுக்கு மருந்து:-</u>

கருங் கொள்ளு காவாளையிலை இது இரண்டும் உரி தண்ணீரில் போட்டு உழக்காக காய்ச்சி இதுக்கு வெண்காரம் பொரித்து கலந்து கொடுக்க குணமாகும். இது கை கண்டது. அறியவும்.

<u>ஆனந்த பயிரவி:-</u>

சாத்திலேயாவது தம்பளூஷ சதம் அரைச்சு பிளிஞ்சி கொண்டு அதை பொங்க வைத்து அந்த சாத்திலேயாவது இந்த மாத்திரையை ஒன்று உரைத்து கொடுக்கவும். எப்படிப்பட்ட காச்சலும் நிற்கும். இது கை கண்டது.

<u>எந்த ரணத்துக்கும் எண்ணெய்:-</u>

ரசகற்பூரம் விராகனெடை. , ரச செந்தூரம் விராகனெடை.க, ஓமம் பலம் வ, பருத்தியிலைச் சாறு, துளசியிலைச் சாறு, மெதி பாகையிலைச் சாறு, பிரண்டைச் சாறு, வேப்பிலைச் சாறு, (ஆத்து தும்மட்டிக் காய்) இது வெல்லாம் கூட்டி வருத்து எண்ணெயுடனே போட்டு கொதிக்க வைத்து பக்குவமாய்க் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். நல்லெண்ணெ படி.க, பால் படி.தெ, சங்கம் பட்டை அல பால் படி தெ, சங்கம் இலை ஒரு பிடி, ஊட்ட வரையிலை ஒரு பிடி, சங்கங்குப்பி யிலை பிடி.க, உத்தாமணி இலை பிடி, செருப்படி யிலை பிடி.க, சிலந்தி நாயகம் வகைக்கு ஒரு சிறு கற்றண்டி சாறு பிளிஞ்சு கொண்டு மத்தம் பலம்.உ, மருசு பலம். 3/4 படிகாரம் பலம் ரூ வெள்ளை குங்கிலியம் பலம். 3/4 சிலாசத்து பலம். 3/4 இது வெல்லாம் சுத்தி பண்ணி பொடியாக்கி எண்ணெயில் போட்டு பதமாக காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு எந்த ரணத்துக்கும் போடக் குணமாகும்.

இருமலுக்கு அழிஞ்சியிலை சாறு படி.க, அதிலே எலுமிச்சம் பழத்தைக் கீத்தாயருத்து அந்த சாத்திலே போட்டு ஊற வைத்துக் கொண்டு காலமே ஒரு கீத்து சாப்பிட்டு வரவும். இந்த முறைக்கு ஒரு மண்டலம் சாப்பிட இதுக்கு பத்தியம் புளி, பனி காத்து ஆகாது.

<u>வறட்டு தாமாலைக்கு வயனம்:-</u>

கால் கை ஓஞ்சு போகும். வாயில் ஜலம் ஊறும். தாகமெடுக்கும். இதுக்கு <u>மருந்து:-</u> கீழா நெல்லியிலை, மணத்தக்காளியிலை, இது இரண்டையும் எலுமிச்சங் காயளவு அரைத்து எருமைத் தயிரில் .அ, நாள் கொள்ளவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி ஆகாது. பசும் பால் கூட்டவும். வெள்ளை பாச்சி அந்தி சந்தி மண்டலம் கட்டவும்.

<u>வெள்ளெழுத்துக்கு:-</u>

வெள்ளைக் காக்கணம் வேரும் சுக்கும் சுத்தி பண்ணி எலுமிச்சம் பழம் சாத்திலே அரைத்து உருண்டை பண்ணி வெந்நீரிலுரைத்து கண்ணிலிட வெள்ளெழுத்து மாறும். நிழலைக் கண்டால் சத்தியாம்.

<u>மகா விஜயத் தயிலம்:-</u>

எட்டி பழம் குரும்பு மாவிலிங்கம் வேர், சங்கம் வேர், எருக்கம் வேர், கீழா நெல்லி வேர், மிளகரணை வேர், செங்கத்தாரி, முக்கணாரி பாலட்டை, அழிஞ்சி

வேர், புளியடக்கி முக்கா வேளை காட்டு மல்லிகை நாயுருவி, உத்தாமணி கொடுவேலி ஆவரைசு களுமாய் சிவதுர் வேம்பு, குத்த காற சமட்டி குமாலாகத்தை வேப்பம் பட்டை முருங்கப் பட்டை, காட்டு முருங்கை வெட்பாலை, துரிஞ்சில் வேர் இது கூட்டி காய வைத்து முந்திய குழம்பிலே இறக்கிக் கொண்டு கற்கடசிங்கி சுக்கு, திப்பிலி, மிளகு, கருஞ்சீரகம், நல்ல சீரகம், அரத்தை கடுக்காய், தானிக்காய், இவைகள் வகைக்கு பலம்.டு கூட்டிக் கொண்டு குழம்பில் விடவும். வெள்ளைப் பூண்டு ஒரு பா.க்கு எரித்த இடித்து கலந்து எருக்கம் பால்.ச, கள்ளிப் பால்.ச, சதிரக்கள்ளிப் பால்.ச, வெள்ளாட்டுப் பால், பசுவின் பால் குமரி இவையும் இவை கழம்பில் கலந்து ஒருக்கிலைச் சாறு உத்தாமணிச் சாறு, செம்பைச் சாறு, நொச்சி சாறு, கருநொச்சி சாறு, செருப்படை சாறு, துளசிச் சாறு, கோழியவரைச் சாறு, கய்யாந்தகரைச் சாறு, சங்கிலைச் சாறு, நாய்த் துளசிச் சாறு இது வகைக்கு சாறு அகஅக சுவகை விளக்கெண்ணை புங்கெண்ணை வேப்பெண்ணை நல்லெண்ணை இலுப்பெண்ணை இந்த வகைக்கு அவகை கூட்டி சாறு வகை எண்ணை வகை தயில வகை குரண வகை பாகு வகை ஐந்து வகை கொதிப்பிக்க மெழுகு பகமான வாறே இறக்கிக் கொண்டு விநாயக பூசை பண்ணி தானியம் புடம் வைத்துக் கொண்டு இதிலே தீரும் வியாதி கைமுடங்கல், கால் முடங்கல், சந்து வாதம், பிடரி வாதம், பின்னி சிவு மின்னிசிவு, சயித்திய வாதம் சுமரக வாதம், சுபக்கு வாதம் குலிவாதம், திமிர் வாதம் அயச வாதம் தீருமென்று தர்மந்திரி உரைத்தியது.

6.12.62.

<u>நாசிகா பறணம்:-</u>

முட்டை சாம்பலிலே எருக்கம் பாலாட்டி காய வைத்து வஸ்திர காயம் பண்ணி மெல்லிய சீலையில் அரித்து சிமிளில் வைக்கவும்.

<u>சிங்குவ சன்னி குணம்:-</u>

மங்கிய மலம் வெளுத்து வாய் மலர் விழி மலர் கண் சொருகும். சுங்கிய முச்சி மயிர் முச்சம் தயங்கிய சுரமும் உட்சுரமும் அங்கிய தலை கனப்பும் பரிவுடன் திரைவு உண்டாகும். சிங்குவ பக்கம் நோகும். சிங்குவ சன்னி யிதுதானே.

<u>சிம்முக சன்னி:-</u>

அம்மொழி வார்த்தை கோளா அறிவையர் பக்கம் நேகம் சம்முக வாய் குழந்து சருவிய கண்ணும் பூளை தம்முகந் தன்னீயானது நேர் பசியே யாகும். சிம்முகம் மலர்ந்து பேசும் சிம்முக சன்னி யிது தானே.

<u>சந்திக சன்னியின் குணம்:-</u>

விதனமாயிருக்கும். உடம்பெங்கும் நோவெடுக்கும். கோபமுண்டாயிருக்கும். உடம்பு வெளுத்து தாகமுண்டாயிருக்கும். உடம்பு வெளுத்து தாகமுண்டாயிருக்கும். பலவீனமாயிருக்கும். நித்திரை வராது. <u>இதுக்கு கசாயம்:-</u>சீந்தில் புங்க வேர், சுக்கு, மிளகு, தேவதாரம், தேன் மெழுகு இவைகள் சமன் கூட்டி இடித்து நாழி தண்ணீர் வார்த்து எட்டிலொன்றாய் காய்ச்சிக் கொடுக்க ஏழு நாளில் தீரும். அத்

<u>அத்திக சன்னியின் குணம்:-</u>

கை கால் எரிவு, தாகமாயிருக்கும். மோகம் வரும். கண் தெரியாது. தலை சுத்தும். விக்க லெடுக்கும். உப்புசமாயிருக்கும். இந்த ஏழு வகை குணமிருந்தால் திரும்பமாட்டாது.

<u>சித்திர விப்பிர சன்னியின் குணம்:-</u>

தெறேகம் அங்கம் தாபமாயிருக்கும். விராம் பிறமாயனவோடே கூடின மோகம் வரும். கண் விகடமாயிருக்கும். சிரிப்புண்டாம். கத்தாடும் பாடும் அழும். இது பிறயாசத்திலே தீரும். <u>இதுக்கு கசாயம்:-</u> கடுக்காய், பற்படாகம், தேவதாரம் இவைகள் சமன் கூட்டிக் கொடுக்கவும்.

சீதாங்க சன்னியின் குணம் :-

சீரமுகிக மாயிருக்கும். இருமும். நாக்கு வறண்டு முள்ளிருக்கும். விசோக மக்கிரு ம்ம். வயிறு கழியும். பெரு மூச்சு விடும். பறகலிக்கும். கழுக்கடி வேர்க்கும். நித்திரை வராது. இதுக்கு கசாயம் :- கோஷ்டம், சுக்கு, மிளகு, மஞ்சள், வசம்பு, திப்பிலி, இவைகள் சமமாக கட்டி காசி மடியில் நசியமிடவும்.

தாந்திரிக சன்னியின் குணம் :-

வாந்தியுள கை நொடிக்கும். ~~புலம்பி பார்க்கை சொல்லும்~~. காந்தமே தலை யிடிப்பு கபாலமே உச்சி நோவாம். மாந்தமாம். பசி கொளாது. மலமது ஒடுங்கும். தாக்கமே முதுகு கூசும்.

இதுக்கு கசாயம் :-

சுக்கு, பேய்புடல் இது இரண்டும் கசாய மிட்டு கொடுக்கவும். 20 வது நாளில் குணமாம்

கண்டகுப்பிற சன்னியின் குணம் :-

தலை கீரரயிருக்கும். நெஞ்சடைந்து மோகமாயிருக்கும். சுரம் விட்டு விட்டு வரும். பல்லிடுக்கில் ரத்தம் புறப்படும். தாகமுண்டு. மூர்ச்சை வரும். விக்கை யுண்டாயிருக்கும்.

இதுக்கு கஷாயம் :-

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், ஆடாதோடை இவைகள் வகை.எ, கட்டி கசாயமிட்டு சமன் கூட்டிக் கொடுக்கவும்.

இன்னுமொரு வகை.

வெட்பாலரிசி ரேணுகம் முத்தக் காசு, நிலவேம்பு, சிறு தேக்கு, மஞ்சள், வேம்பு கொடி வேலி, வசம்பு, திப்பிலி, சுக்கு, நெல்லிக்காய், முள்ளி வேர், தானிக்காய், தேவதாரம், சிறுவழுதலை இவை சமன் கூட்டி கசாயமிட்டு கொடுக்கவும்.

கருப்பு நாயுருவி இளநீரில் சுக்கு, திப்பிலி, கடுக்காய், மிளகு இது சமன் கூட்டி ~~கடுக்காய் திப்பிலி தாளகு~~ அரைத்து நசியம் பண்ண தீரும். உத்தாமணியிலை சாறும் தேன் பண்ணி வெகு கடிப் பிரமாணம் எட்டு நாள் கொள்ள கண்ட குப்பிற சன்னி தீரும்.

ருத்திராகத சன்னியின் குணம் :-

அரும்புற நலிக்கும். மோகிக்கும். அடிக்கடி பிறபிக்கும். வேர்வை அதிகமாயிருக்கும் காலடியிலே வீங்கியிருக்கும். எப்பொழுதும் தாகமாயிருக்கும். மூச்செறியும். உடம்பு நொந்து வியா தியப்படும். இந்த குணம் செய்தால் இதுக்கு கசாயம் :- சுக்கு, பற்படாகம், பிராமிச்சம் இவை கசாயமிட்டு கொடுக்கவும். இன்னமொரு வகை :- இலந்தையிலை சந்தனம் இவை கசாயமிட்டு கொடுக்கவும்.

அபினிய சன்னி குணம் :-

அபினமே மூடல் வெதும்பலாகியகோர் செவி அன்னும். மரபினமே ரெக்கங் கன்னும். பாரிய சுரமுமாகும். செபினமே பனிப்பு கூர்மை சேர்ந்திடும். நோயே யன்னி யபினமே நாடி யில்லைய பினிய சன்னி தானே.

மருந்தாங்க சன்னி குணம் :-

திக்கிப்பதிகம் செவி கேளா திமிரே வாயு புற நோக்கும்
சன்னி ரெக்கம் குலை நோவாம் சுகிர பிறக்கி யறியாது
பக்கியே படர்ந்த குலை எரியும் பரிவா பல்லும் நாவறச்சி
வக்கிய நெஞ்சிற் சீ கட்டும் மருதாங்க சன்னி யிது தானே.

வாத சன்னியின் குணம் :-

நடுக்கம்பல காலி கை குளிரும் பரிவா வாயும் பல் கடுக்கும். சீத குளிரும் உடல் குடைப்பும் சீரிய வயிறு புண்ணேக்கும். சாரும். பக்க வலியுண்டாம். சருவிய விழியும் கண் சிவக்க வாத வாய்வு மேல் நோக்கும் வாத சன்னி இது தானே.

வாத சன்னி சுரத்தின் குணம் :-

கையே கொட்டிப் பாடிவரும் தண்ணீர் விழியா சொற்றியெனவும்
மெய்யே யிருக்க வளப்பதவும் வேண்டாசென் வேபேச்சுவதும்
பைய்யே சிரித்து நடிப்பனவும் பார்வை பல காற் பார்ப்பதுவும்
மைய்யனென்ன குழலாளே வாத சன்னி சுரமிது தானே.

வாத சன்னியின் குணம் :-

நடுந்து குளிரும். பித்த மூர்ச்சையும் மூடமைபோலே செங்கழலென்வே கண்கள் சிவந்திருளும் குழியதாகி எந்திய தலையுமாகி இரு செவி மந்தமாகும். சந்து மலமுதிரும். சன்னி வாத சுரமுந்தானே. கண்டும் வாயு மிக செரிந்து காலுங் கையும் போர் வாங்கி, துன்று நாவு மிகச் சோர்ந்து உக்க செவியும் நோவெடுத்து என்றும் அறிவு மிகக் கலங்கி மிசைந்த தலையு மாறிக்கும். தண்ணீருமக்கும் கார் குழலி சன்னி வாத சுரந் தானே.

மருவிய சேத்துமத் திரிங்கிய வாதம் வந்தால் கருதிய சன்னி வாத குணமென்று காணலாகும். பொருந்தலை பிடரி காலும் போகுமாம். புலமுஞ் சோரும். மருவிய வயறு காலும் வகையாக சிறக்கு மெள்ளே. யிக்குணமிருக்கமாகில் மிசைந்திடு சன்னி வாதம் யிக்குணம் வந்த போது சாத்திய மென்று சொல்லுக். இக்குணம் வந்த போது சாத்திய மென்று சொல்லும். இக்குணம் பார்த்த போதே மெலிந்து மென்றே என்றி யிக்குண மறிந்த போதே சடுதி மோசி [illegible] யாக்கை தானே.

சன்னி வாதத்துக்கு எண்ணை :-

முசுட்டை வேர், நீர் விளா வேர், சிக்கவரை வேர், குண்டுமணி வேர், வக்கன் பட்டை, புளி தடக்கி வேர், முப்புடாக்கி வேர் இந்த மருந்தெல்லாம் சமன் நறுக்கி விளக்கெண்ணை படி :உ ஈர வெங்காயம் பலம். , இவை எல்லாம் கூட்டி எரிந்து சிவந்து வருகிற வேளையில் இருபது கடுக்காய் பொடி செய்து கூட போட்டு இறக்கி ஒரு கறண்டி எண்ணை உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் பூசவும். திணையரிசி கஞ்சி காய்ச்சி உப்பு இல்லாமல் வார்க்கவும்.

இன்னமொரு வகை.

சிறுபூளை வேர், அழிஞ்சம் வேர், உக்காமணி வேர், துளவி குண்டு அரக்கு, கோழி முட்டை இவைகள சமன் கூட்டி நாழி எண்ணையில் உள்ளி வசம்பு கூட்டிக் காய்ச்சி வடித்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் பூசவும், நசியம் பண்ணவும்.

வாத சன்னிக்கு கசாயம் :-

சீந்திற் சிக்கு மல்லி நிலவேம்பு, கோஷ்டம், சிறு தேக்கு, பற்படகம், சிறுகாஞ் சோறி, தூய்ந்த சிறு வழுதலை வேர், முத்தக் காசு, அதிமதுரம், நன்னாரி, சுக்குங் கூட்டி வார்த்த படி யிரவன பொடி நீர் காய்ச்சி வகையுடனே தான் கொள்ளீர் பெண்மார்
போந்த வலிக சன்னி வாத வெதுப்பு சத்தம் புரையுள்ள சுரமுமக்கு போகுந் தானே.

பிரமிச்சஞ், சந்தன பிருவேலி, சுக்கு, பலா முக்கக் காசு, பற்படாகம், லாமிட்டு தண்ணீருங் காய்ச்சி குடிநீருங் கொண்டாக் கால் விண்ணிலே போமே வெதுப்பு :-
பேய்ப்புடல், சங்கம் வேர், கண்டங் கத்திரி வேர், சிறுபுள்ளடி வேர், எருக்கம் வேர், வசம்பு, சுக்கு இவைகள் கசாயமிட்டு கொடுக்கவும். நல்ல சந்தனம், கடலை, துவரை அழுக்கரிசியும். ஊ-ம் தண்ணீர் வார்த்து யிராழியாக காய்ச்சி பனைவெல்லங் கூட்டிக் கலந்து கொடுக்கவும்.

யின்னமொரு வகை :-

இளநீர் வேக வைத்து ஆறவிட்டு நீரிறக்கி அதிலே ஒரு எலுமிச்சம் பழம் சாறு பிழிந்து பலம். சர்க்கரை கலந்து இழைத்து கலை கொம்பு உரைத்து சந்தனம், ஏலம் பொடி செய்து கலந்து கொடுக்கவும்.

<u>இன்னொரு வகை:-</u>

நாரத்தையிலை, கீரியிலை, நொச்சியிலை, வேளை வேர், பொரிக்க வெங்காரம் க்கு, மிளகு இவை சமன் கூட்டி இள வெந்நீரில் அரைத்து கலந்து கொடுக்க சன்னி பாகம் குணமாகும்.

<u>சன்னிக்கு வேது பொட்டணம்:-</u>

பின்னை விரை, ஊமத்தை விரை, இலுப்பைப் பருப்பு, வேப்பம் விரை, மருடம் விரை, கழற்சி விரை, தேங்கா விரை, புங்கம் விரை, சௌப்ப விரை, அக்கி விரை, பேரரத்தை, உள்ளி, வசம்பு, பெருங்காயம், இந்துப்பு சதகுப்பி இவைகள் சமன் கூட்டி இடித்து பொடி பண்ணி நல்லெண்ணை, இலுப்பெண்ணை, புங்கெண்ணை, வேப்பெண்ணை விளக்கெண்ணை இந்த எண்ணெயும் கூட்டி அந்த பொடியிலிட்டு அடுப்பு மேல் வைத்துக் கிளறி கோடி சீலையை மூன்றாய் மடித்து பிழிந்த பக்கில் பொட்டணமாக்கி அதிலே அடுப்பு போல நடுவே ஒரு கொம்பிட்டுக் கட்டி காய வைத்து அந்த எண்ணையை வார்த்து பொட்டணத்தை எடுத்து வைத்து ஒத்தடம் போட சன்னி சர்வாங்கமும் தீரும்.

<u>சன்னி வேது:-</u>

ஊமத்தையிலை, புங்கயிலை, எருக்கிலை, வீழியிலை, சிற்றாமுட்டியிலை, கழுதைத்தும்பை, ஆட்டங் கொடிபொடுதலை, நொச்சியிலை, முருங்கையிலை, வெள்ளைக் காக்கணமிலை, அமுக்கிரக் கிழங்கு இலையும், அரிஞ்சிப் பட்டை அகளிலை நாரத்தை இலை இவைகள் சமமாக முடாவிலடைத்து காடி வார்த்து காய்ச்சி வேது பிடிக்க சர்வ சிலேத்துமம் தீரும்.

<u>சன்னி பாகத்துக்கு நசியம்:-</u>

சன்னி நாழி. ௪, காடி நாழி.௩, உப்பு நாழி.௧, இவ வெல்லாம் முறி பிடிக்கும் பானையில் சீலை வாய் கட்டி அதின் மேலே ஊமத்தை இலை வைத்து பொட்டணங் கட்டி பருத்தியிலை பொட்டணங் கட்டி இரண்டு பொட்டணமும் சீலையின் மேலே வைத்து மேல் மூடிக் காய்ச்சி எடுத்து ஒத்திட கம்பி பிறப்படுகிறதும் தீரும்.

காட்டு முட்டை சாம்பலிலே எருக்கம் பால் ஏழு தரம் பாவனை பண்ணி இதுக்கு நாலத்தொன்று மிளகு பொடி கூட்டி மக்கிச்சு நசியம் பண்ணவும். பேய்ப் பீர்க்கன் விரையை சூரணம் பண்ணி இதுக்கு பாதி மிளகு பொடி கூட்டி இந்த மிளகின் பாதி நாரி கூட்டி நசியம் பண்ணவும். பெருமரத்து விரை பாதியிலே பாதி மிளகு பொடி கூட்டி இந்த மிளகின் பாதி நசியம் பண்ணவும். பெரும் பூசனி பூச்சாறு, திரிகடுகும் உப்பும், மரமரத்து முகுறு கண்டு, கெட்டி பசு வெண்ணையுங் கூட்டி பஞ்சிட்டு நசியம் பண்ணவும். அக்கியிலையும், மிளகும் நசுக்கி நசியம் பண்ணவும். இந்துப்பு மருடம் விரை மிளகு இவைகள் சமன் கூட்டி கோமியத்திலரைத்து உருண்டை பண்ணி கோமியத்திலே காலே உரைத்திடவும். பெருங்காயம் இந்துப்பு, திப்பிலி, மிளகு சமன் கூட்டி பசு நெய்யிலரைத்திடவும். ஊமத்தை கொட்டை இந்துப்பு, மிளகு மஞ்சள் சமன் கூட்டி கோமியத்திலுருண்டை செய்து எலுமிச்சம் ரசத்திலுரைத்திடவும். பெருங்காயம், இந்துப்பு, லவணம், திப்பிலி, சமன் கூட்டி பிச்சம் ரசத்திலுரைத்திடவும். ஊமத்தை விரை பெருங்காயம் சமன் அரைத்து உருண்டை பண்ணி முலைப் பாலிலாவது எலுமிச்சம் பழத்திலாவது வேப்பெண்ணையிலாவது உரைத்திடவும். இலுப்பை புண்ணாக்கு திரிகடுகு, வெள்ளாட்டுக் கோமியத்திலுரைத்திடவும்.

மருடம் விரை, நீர் புங்கம் விரை, நேர்வாளம், வெள்ளை சாறணை வேர், வெள்ளைக் காக்கணம் வேர், வில்வ வேர், தக்கம் சயிந்த லவணம், இலுப்பைப் பருப்பு, வேப்பம் பருப்பு, வில்வ பக்கிரி வேர், உக்காமணி வேர், பசுகரை பெருங்காயம், சமன் கூட்டி முன்னே துளசி சாறு அரை இரண்டு நாள் கறசளாங் கண்ணி சாறு.௩, நாட் துடாகோடை சாறு.௪, நாள் பிச்சம் சாறு.௫, நாள் தேன் நாள் வார்த்தரைத்து உருண்டை திப்பிலிபிரமாணம் உருண்டை செய்து திழுலக்கி வெத்திலை, உப்பு மேனி, காடி எலுமிச்ச ரசம் இதுகளிலுரைத்திடவும். பாம்பு கடிக்கு ஆகும்.

அஞ்சு மிருவேலி, சகர்வேலி, லதிசி, கர்ள ஸ்கிமதுரம், நெல்பொரி, நன்னாரி வேரும், மிடுக்காய் கல்லைப் பூ கிழங்கு மெள் செங்கழுநீர் கோஷ்டமுடன்

கொடுப்பான சுக்கும் வேர் கூட கோஷ்டு முக்கக் காசுடனே எடுப்பாய் கசாயஞ் சம பாகம் ஏழாந் திங்கடாக மென்றே.

சீந்திற் சுக்கு கச்சூரம்; சிறந்த கீப கோஷ்டமுடன் சாந்தமான குமையிலே சமமே பாக வெண வளர்ந்த தீர்ந்த கசாயம் கடீன கொள்ள தின்ன நூலில் சுரம் விடு மென் றுய்ந்த சொல்ல திங்களெட்டுக் காம மென்றே யறிந்து சொல்ல திங்களெட்டுக் காம மென்றே யறிந்து கொள்ளேன். வில்வப் பத்திரி சாய வேரும் விஜய முக்கிர மூலமுடன் நல்ல சுக்கு, அதிவிடைய முருந் திப்பிலி மூலமுடன் வல்ல இலுப்பை வேருடனே வகையே பாகம் சமன் செய்த நல்ல கசாயம் நவ்மாதம் நன்கு மென்பர் நாவலரே.

பித்த சன்னியின் குணம்:-

கையு, முடம்பும் தாள் அடிக்கும். கண்ணும் சிறிக்கும். வயறெரியும். மெய்யும் நாவும் சொல் கூறி மேவியனலே கண் சொருகும். அய்ய மெனவே செவி கேளா ---வே சலிக்கும். கை குளிரும். பைய்ய சிரிக்குமோ புரக்கை பயிர்ந்திய சன்னி யிதுதானே. பிறங்கால் வீங்கும். காலெரியும். பின்னமவை தான் மயிர் சிலிர்க்கும். அறவே வாயும் கண் சிறிக்கும். அனலே எரியும். மயாரிவில் லை. வரமே நீரு மலம் போகும். வக்கா பித்தம் கசப்புண்டாம். பிறமே கடுலை நோய் கனப்புண்டாம். பித்த சன்னி இதுதானே.

பெருக்கும் பித்த சன்னி குணம் பிதற்றும். சிரிக்கும். முகம். சுளிக்கும். புருவ மிரண்டு மிக நெளிக்கும். போந்த குமிழும் காணெரிக்கும். காதும் வயறு காணெரியும். கருத்தன் வாயும் போரவைக்கும். மருவும் பாணம் புன்னும்.

மகிக்கிற் பித்த சன்னி சுரம்: பெருக்கும் பித்த சன்னிக்கு பிதற்றுஞ் சிரிக்கும். முகஞ் சுளிக்கும். புருவ நெரிக்கும். மோகிக்கும். போகமழியும். வாய் பிதற்றும். மருவும் வயிறு கடுப்பாகும். மருங்குங் கடுக்கே புலன் புன்னும். கருத சன்னி வாக மறைற். காலனென்று கருதீரே.

சேத்தும சன்னியின் குணம்:-

சத்தும் பாயிற் கிடவாது. சளியே செய்த நீர் பித்தம். உத்த சிரசுமே வலிக்கும். உதிரம் பாயும். நெஞ்சு வலிக்கும். நெஞ்சுலரும். சத்தே வாயும் கருகி விடும். கடுகிய மந்த மகிகரிக்கும்; சேர்ந்த மலமும் தீர்சு விடும். சேத்தும சன்னி யிதுதானே.

பெருகும் சேத்தும முந்தியிலே பேயும் பிடிக்கும். வெதிலைவேறில் லை. சேரும் வயிறு ஊசல் புன்னேக்கும். செவிடும் கிடுகை அறிவில்லை. செருகும் நிமையே புளசிக்கும். சோர்ந்தி. கயரா மந்த பிக்கிரையும் செருகுஞ் சேத்தும சன்னிக்கு செருக்குங் கன்ன மிக வீக்கும். சாருமுங் கன்றவே பகைக்கும். முத்த அய்யே மிக விளைக்கும். நெருக்கும். கால்கள் மிகக் காழ்க்கும்.

நிசத்த வங்கம் கம்பிக்கும். கரிய குழலே இவை யடுத்தால் காலனென்று கருதீரே. அங்கம் சிலிர்க்க மிக நொந்து அறவே யிளை யிருமலுமாய் பொங்கும் வாயு மிகிக்கும். பொசிப்புஞ் சிக்கிப்புற வேண்டும். கக்க மல நீர் விடும் போது கரிக்க நிறமும் வெளுத்திருக்கும்.. செங்கண் சீக மிகக் கழியும். சேத்தும சன்னி குணந்தானே.

ஒப்பான சேவுகன் மூலி நிலவேம்புடன் ஜயர் சீந்திற் கடுரோகம், உக்க சிவழுத லையும், முக்க முடி நீராசி உய்ர் வச்சிராகி கசாயமிலவே.

சேத்துமத்துக்கு:-

சிறு கோரைக் கிழங்கு பிடி இடித்து நா ளாக்கிச் சேனிற் அழைத்து கொடுக்கவும். தேருகாக பெருக்கு தண்ணீரில் கொடுக்கவும். கறன்னமே கறன்ன முச்சம் காலும் வேறேயில் லை. வறன்னமே விழியும் வேகும். வரிவிழி நயன் சொருகும். குருமியிர் வெருக்கும் குச்சி, குளிர்ந்திடு மேனி காறும் வர்ன்னமே செவிடு கேட்டாம் வசாத்திய கான மர்சம்.

உக்கிற சன்னியின் குணம்:-

அவியும் வேர்வை மிக வுண்டாம். அக்கினி யில் லை. நவகுறமும். புவியும் காவமவில நோக்கம். புகைய மந்தம் விழி சொருகும். கவிழு முந்தியவி சாரம். சத்தும் கக்கனும்

கசயிலே செனி வெள்ளை நறுகு சுக்கு நெய் சட்டி வேரும் கூட வெள்ளிய கடுக்காய் விஞ்சமது திரிசி செம்புளிச்சன் கட்டை, சன்னகன் குமாய், கேளாய் சடாமாஞ்சியும் சமமே செய்து கொள்ளே போம் பகராந்தி---ட கசாயமே கொள்ள கோழம் வெட்பாலை கொத்துமல்லி, முக்கமொடு நன்னாரி வெட்டாள முந்திரிகை, வில்வமுடனே கொள்ளை பேரிச்சு புளித்த வேப்பிர்க்கு பற்பாடகம் கப்பாதை வட்டத் திருப்பி அதிமதுரம், சகாவேரி, இரு வேலியும் சனதுகு சிறு மூலகம் பேய்ப் புடல், திரிகடுகு, சாதி திப்பிலி யுமுடனே வைப்பாய் திப்பலியும் பூலாம் ஆடா தோடைமருவு கடுநீர் கிழங்கும் மகிழ் பெருங் குரும்பை நாய்க் கடுகு, மிளாமிச்சம், மோடி மஞ்சளும் சமூலம் மைத்த ஒன்றாய் கலந்து மூன்று நாள் கொடுக்கா தீரும். இச்சமூ, உப்பு, புளி ஆகாத. குளமாகும்.

இருமலுக்கு கேக்காத் கொட்டை பலம்.உ, கந்தி சாத்த வேலை வேர்.உ, சிறு வேர் பலம்:உ, இந்த வகை மூன்றும் அரைத்து ஒரு சேர் நெய்யிலே போட்டு பகமாக காய்ச்சி வைத்துக் கொண்டு அந்நெய் வேகமாக்கி காலமே நெல்லிக் காயளவும் உள்ளே தீரும் வியாதி யிளம் இருமல், மந்தார காசம் இவ வெல்லாம் தீரும்.

<u>ரெக்க காசத்துக்கு:-</u>

சேக்காங் கொட்டை .ய, தும்பை வேர் பட்டை.பலம்.க, ஓரிலைத் தாமரை பலம்.க, இவ வகை இரண்டும் தேன் விட்டு அரைத்து ஏழு உருண்டையாக்கி ஏழு நாள் சாப்பிட ** ரெக்க காசம் தீரும். பத்தியம் பசும் பால் கூட்டவும்.

<u>வாய்வுக்கு மருந்து:-</u>

தொச்சியிலை பிடி.க, கடுகு பலம்.வ, ஓமம் பலம்.வ, இந்துப்பு பலம்.வ, இந்த வகை எல்லாம் அரைத்து கிராக்காய் பிரமாணம் உருண்டை செய்து கொண்டு [illegible] விடித்து ஒரு உருண்டை கொள்ளவும். வாய்வு தீரும்.

<u>பித்தம் தாங்கை:- வாழைப்பழத்து லேகம்:-</u>

நல்லாளி பழம் ரசம் பசுவின் பால் பழைய பனைவெல்லம் மூன்றும் பாகு பண்ணி அதில் சர்க்கரை கற்கண்டு திராட்சை பழம் கஸ்தூரி பழம், சுக்கு, ஏலரிசி, சீரகம், லவங்கம், பறங்கிப் பட்டை, கண்டு பறங்கி, மோடி அதிமதுரம் வால் மிளகு, தக்கோலம் முந்திரி பழம், மிளகு, வாய்விளங்கம், சாபத்திரி, லவங்கப் பட்டை, கசகசா காலிக் காய் இவ வெல்லாம் உலர்த்தி இடித்து சூரணம் பண்ணி வழக்கமும் கிழங்கு பாலிலே வெளிச்ச பலம். உலர்த்தி சூரணம் பண்ணி பழைய பனைவெல்லம் சேர்.க, பாகு காய்ச்சி தேன், நெய், விளக்கெண்ணெய் வார்த்து சூரணம் போட்டு கிளறி லேகியம் சாப்பிட பித்தம் வாய்வு பசி இவ தீரும்.

இடையிலுள்ள ஏடுகளில் மந்திரம் காப்புடன் விடப்பட்டது.

பருவா கிழங்கு வசம்பு இரண்டையும் அரைத்து புளித்த கொடுக்கவும்.

பருவா கிழங்கு

<u>மேக மருந்து:-</u>

கடுக்காய் நெல்லிட்டு காலிக்கா தந்காய சிந்தி, கோட்டம், சடாமாஞ்சி, சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு சூரணம், சங்கம் பழம் சாறில் இஞ்சி சாறு பிழிந்து உலர்த்தி தேனில் கொள்ளவும்.

ச.ச.

முற்றும்.

6.12.62.

****

Completed Verification 20/4/63

Sundaramurthy 20/4/63

2 18